ஜோதி

சுடர் 2 மார்ச் - 1939 கதிர் 8

வெற்றி ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸுக்கு நமது வாழ்த்து. அவரது உடல் நிலை விரைவில் சரிப்பட்டு, திரிபுரி காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அவரைக் கம்பீரமாக வீற்றிருக்கச் செய்ய வேண்டுமென்று ஆண்டவனை வழுத்துகிறோம். தேசிய விஷயங்களில் ஆண்டவனின் துணையை நாடுவதென்றால், அது ஜன சக்தியின் துணையை நாடுவதென்ற பொருளிலேயே கொள்ள வேண்டும். எனவே, ஸ்ரீ போஸைத் தலைமைப்பதவிக்குத் தெரிந்தெடுத்த ஜன சக்தியானது, அவருக்குக் கடைசி வரை உறு துணையாயிருந்து வர வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

ஸ்ரீ போஸைப் பற்றிச் சென்ற இதழில் நாம் தெரிவித்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள இன்னும் எவ்வித சந்தர்ப்பங்களும் ஏற்படவில்லை. இது வேறு விஷயம். ஆனால் ஒருவரை— நம்முடைய மதிப்பிலே தற்போது குறைந்தவரா யிருந்தாலும்—வலியார் பலர் சேர்ந்து, தங்களுடைய சூழ்ச்சித்திறனாலும், நாட்டிலே தங்களுக்குள்ள செல்வாக்கைக் கொண்டும் வீழ்த்த முயலுவார்களானால் அதை நாம் கண் கொண்டு சகிக்கவே முடியாது. வீழ்த்துகிறவர் எவ்வளவு பெரியவரா யிருந்தாலும், வீழ்த்தப்படுகிறவர் எவ்வளவு சிறியவரா யிருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் பிரஸ்தாப விஷயத்தில் ஸ்ரீ போஸ் வீழ்த்தப்படவில்லை. ஜன சக்தியானது அவரை வாழச் செய்துவிட்டது. அதற்கு நமது வணக்கம்.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் காலத்திலிருந்து, காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் பதின்மூன்று பேர் ஒருமுகமாக ராஜீநாமா செய்துவிட்டது வரை நடைபெற்ற சம்பவங்களை நாம் கூர்ந்து கவனித்துவந்தோமானால், பெரிய இடத்திலிருந்து கொண்டு ஒரு சிலர் தொடர்ந்தாற் போல், போஸுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து கொண்டு வருகின்றனர் என்பது தெளிவாகிறது. உதாரணமாக, பிரசிடெண்ட் தேர்தல் முடிந்தவுடன், காந்தியடிகள் விடுத்த அறிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். உண்மையில், இந்த அறிக்கை நம்மைத் தூக்கி

வாரிப்போட்டு விட்டது. காந்தியடிகளிடமிருந்து இந்த மாதிரியான அறிக்கையை நாம் எதிர்பார்க்கவேயில்லை.

காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு மீண்டும் நிற்க வேண்டாமென்று ஸ்ரீ போஸுக்கு 19-1-39ல்காந்தியடிகள் தெரிவித்தார். அதற்கு அவர் இசையவில்லை. பின்னர், காரியக் கமிட்டி அங்கத்தினர் அறுவர் சேர்ந்து, என்றுமில்லாத புதிய முறையில்,டாக்டர் பட்டாபிக்கே பிரதிநிதிகள் வாக்குக் கொடுக்க வேண்டுமென்று ஓர் அறிக்கை விடுத்தனர். மற்றும், டாக்டர் பட்டாபிக்கே நிச்சயம் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையும் இவர்களுக்கு இருந்திருக்கிறது. ஆனால் இவர்கள் எதிர்பாராத விதமாக ஸ்ரீ போஸ் வெற்றி பெற்று விட்டது, இவர்களுக்கு உண்மையில் ஆத்திரம் உண்டு பண்ணி யிருக்குந் தானே. இந்த ஆத்திரத்தின் சாயல் காந்தியடிகளின் மேற்படி அறிக்கையில் வீசுகிறதோ வென்று நாம் அஞ்சுகிறோம். 'எப்படியும் ஸ்ரீ சுபாஷ் தேசத்தின் விரோதியல்ல' என்று, காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்ட ஒருவருக்கு, மகாத்மா காந்தி சன்மானப் பத்திரம் அளிக்கிறார் இந்த அறிக்கையில். இந்த வாக்கியத்தின் பொருள் ஆழத்தை நாம் பார்க்கிற போது, காந்தியடிகளின் மன ஆழத்தை விட ஆழமாயிருக்கிறது.

ஸ்ரீ போஸைக் காங்கிரஸ் தலைவராகத் தெரிந்து விட்டதனால், தாம் சென்ற இருபது வருஷங்களாகப் போதித்து வந்த தத்துவத்தை தேசம் அங்கீகரிக்க வில்லையென்றும், டாக்டர் பட்டாபியின் தோல்வி தமது தோல்வியே யென்றும் கூறுகிறார் காந்தியடிகள். துரதிருஷ்டவசமாக நாம் இதனை அங்கீகரிக்க முடியவில்லை. சென்ற இருபது வருஷங்களாகக் காங்கிரஸ் தலைமைப் பதவியை வகித்தவர் அத்தனை பேரும் காந்தியடிகளை எல்லா அமிசங்களிலும் பின்பற்றிக் கொண்டு வந்தவர்கள் தானு? பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் காந்தி யடிகளுக்கும் அபிப்பிராய வேற்றுமையே ஏற்பட்டது கிடையாதா? காகிநடா காங்கிரஸில் தலைமை வகித்த மௌலானு முகம்மதலியும், கௌஹதி காங்கிரஸில் தலைமை வகித்த ஸ்ரீ எஸ். சீனிவாச ஐயங்காரும், ஏன் பின்னர் காங்கிரஸினின்று விலகிக் கொண்டார்கள்?

இப்படியே நாம் இந்த வாதத்தை வளர்த்துக் கொண்டு போக விரும்பவில்லை. பொதுவாக, காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்குப் பிறகு, காந்தியடிகளினின்று பிறந்த அறிக்கை, சத்தியம் என்கிற பாறை மீது அவருடைய ராஜ தந்திரம் உடைந்துபோய் விட்டதோ என்ற சந்தேகத்தைப் பலரிடையே எழுப்பி விட்டது.

• தலைவர் தேர்தல் முடிந்து விட்டது. இது சம்பந்தமாக ஏற்பட்ட அமளி குமளிகளும் ஒருவாறு அடங்க வேண்டும். அதுதான் அரசியல் உலக சம்பிரதாயம். ஆறிப்போகிற தீயைக் கிளறி விட்டுக் கொண் டிருப்பது யாருக்கும் அழகல்ல. திரிபுரி காங்கிரஸ் கூடுவதற்கு இன்னும் பத்து தினங்களே இருக்கின்றன. இதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. அடுத்த வருஷத்தில் தேசியப் போராட்டத்தை எப்படி ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடத்தலாம் என்பதைப் பற்றி, காங்

கிரஸ் பிரதிநிதிகள் நிச்சயமாக ஆலோசித்துக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில், காங்கிரஸ் காரிய கமிட்டி அங்கத்தினர்களில் பதின் மூன்று பேர் ராஜீநாமா செய்ய வேண்டியதன் அவசியமென்ன? நியாயந்தானென்ன? ஒரு விஷயம் இங்குக் குறிப்பிட வேண்டும். காங்கிரஸ் தலைவர் பதவிக்கு மௌலானா அபுல்கலாம் அஸாத் தெரிந்தெடுக்கப் படவேண்டும்; அவர் மறுத்து விட்டால் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவே தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முடிவுக்குக் காங்கிரஸ் தளகர்த்தர்கள் வந்தது, ஸ்ரீ போஸ் இல்லாத சமயத்தில்தான். இப்பொழுது பதின்மூன்று அங்கத்தினர்கள், காரியக் கமிட்டியிலிருந்து ராஜீநாமா செய்ததும், அவர் இல்லாத காலத்தில்தான். இஃது ஆச்சரியமாக இல்லையா?

தலைவருக்குப் பிடித்தமாயும், அவருடைய கொள்கைகளுக்கு அநுகுணமாயும் உள்ளவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே, தாங்கள் ராஜீநாமா செய்ததாக இவர்கள் கூறுகிறார்கள். இஃது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனால் இவ்வளவு அவசரம் ஏன் என்றுதான் நாம் கேட்கிறோம். எப்படியும் திரிபுரி காங்கிரஸ் கூடுகிற போது, இவர்கள் தேசத்தில் இவ்வளவு கொந்தளிப்புகளை உண்டு பண்ணாமல் அமைதியாக விலகி யிருக்கலாம். காங்கிரஸ் தலைவரும், 'இவர்கள் விரும்புகிறபடியே, தமக்குப் பிடித்தமான காரியக் கமிட்டியை அமைத்துக் கொள்வார். வாசகர்கள், இங்கு ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது. சென்ற ஹரிபுரா காங்கிரஸில், ஸ்ரீ போஸ், தம்மோடு ஒத்துழைக்கக் கூடியவர்கள் என்ற எண்ணத்தோடுதான், இந்தப் பதின் மூன்று பேரும் அடங்கிய காரியக் கமிட்டியை அமைத்துக் கொண்டார். இவர்கள் அவருடன் இந்த ஒரு வருஷமாக ஒத்துழைத்தே வந்தார்கள். அவரும் இவர்களுக்கு விரோதமாக ஒன்றுஞ் செய்துவிடவில்லை. அந்தரங்கங்கள் எப்படியோ, வெளியுலகம் இப்படித்தான் கருதி வந்தது. இப்பொழுது, ஸ்ரீ போஸ், இரண்டாவதுமுறை திரிபுரி காங்கிரஸுக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டவுடனே, அவருடன் இவர்களால் ஒத்துழைக்க முடியாமற் போய்விட்டதா? கருத்து வேற்றுமை யுள்ளவர்கள் காரியக்கமிட்டியில் அங்கம் பெறலாகா தென்கின்றனர், காங்கிரஸ் தளகர்த்தர் சிலர். வாஸ்தவம். அப்படியானல், சென்ற ஒரு வருஷ காலமாக, காரியக்கமிட்டிக்குள் எவ்வித கருத்து வேற்றுமைகளுமே நிகழவில்லையா? அப்படி ஏற்பட்டிருந்தால், இந்த ஒரு வருஷகாலமாகப் பொறுமை வகித்தவர்கள், திரிபுரி காங்கிரஸ் வரை பொறுமை வகிக்கலாகாதா?

பண்டித ஜவஹர்லால் நேரு, விலகிப்போன இந்தக் கோஷ்டியில் சேர்ந்திருப்பதைக் கண்டு நாம் பெரிதும் வருந்துகிறோம். யாருக்குமே இஃதொருவித திகைப்பை உண்டு பண்ணி யிருக்கிறது. தமது ராஜீநாமாவுக்குக் காரணங்கள் காட்டி பண்டித நேரு விடுத்த அறிக்கையை நாம் முழுக் கவனத்துடனும் அதற்குரிய மரியாதையுடனும் படித்துப் பார்த்தோம். ஸ்ரீ போஸ், காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் மீது

சில பழிகளைச்சுமத்தி யிருக்கிறுரென்றும், அவற்றை அவர் வாபஸ் வாங்கிக் கொள்ள வில்லையென்றும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் ஸ்ரீ போஸ் அநேக மாற்றங்களைச் செய்து, தொடர்ந்து வந்த ஒழுங்கு முறையைத் துண்டித்துப்போகும்படி செய்துவிட்டாரென்றும் பண்டித நேரு கூறுகிறார். ஸ்ரீ போஸிடத்தில் குறைகளே யில்லை என்று நாம் கூறவில்லை. சிறப்பாக, அவசரப்பட்டு அறிக்கைகள் விடுகிற போதும், நகரசபை, மாகாண சபை முதலிய சில்லரை விஷயங்களில் தலையிடுகிறபோதும், அவர் தமது அகில இந்திய தலைமைப் பதவியிலிருந்து பல படிகள் கீழே இறங்கி விடுகிறார் என்றே நாம் கருதியிருக்கிறோம். மற்றத் தலைவர்களுக்கும் இது பிடிக்கவில்லை. திரிபுரி காங்கிரஸுக்குப் பிறகாவது அவர் இந்த மாதிரியான சில்லரை விஷயங்களில் தலையிட்டுக் கொள்ள மாட்டாரென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், ஸ்ரீ போஸிடத்திலுள்ள சில்லரைக் குற்றங்களைக் காரணங்களாக முன்னிலைப் படுத்தி, பண்டித நேரு, காரியக் கமிட்டியிலிருந்து ராஜீநாமா செய்திருக்க வேண்டாம். எப்படியும், இரண்டு பேருடைய லட்சியமும் ஒன்றுதான்; இரண்டுபேருடைய கொள்கைகளும் ஒன்றுதான். பின் ஏன் இந்தச் சில்லரைப் பிணக்குகள்?

எப்படியும் திரிபுரி காங்கிரஸ் ஒழுங்காக நடைபெறுமென்று நாம் உறுதியாக நம்புகிறோம். சிலர் எதிர்பார்க்கிறபடி, இந்தப் பதின்மூன்று பேரும் ராஜீநாமா செய்து விட்டதன் விளைவாகத் தேசத்தில் பெரிய பிளவு ஒன்றும் உண்டாகி விடாது. தேசிய சேனையானது, இரண்டு பகுதிகளாகப் பிரிந்து, இரண்டு போர் முகங்களில் போராடலாம். அவ்வளவு தான். எனவே தேசிய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயுள்ளவர்கள் யாரும், காந்தி கட்சியென்றும், போஸ் கட்சியென்றும், வலக் கட்சியென்றும் இடக்கட்சியென்றும் வேற்றுமை பாராட்டிக் கொள்ளாமல், காங்கிரஸ் வாதிகள் என்ற ஒரே மனப்பான்மையுடன் தேசப்பணியில் ஈடுபடுவார்களாக.

* * *

சுற்றறிக்கை

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஒரு சுற்றறிக்கையை விடுத்திருப்பதாகவும், அதில் 'நீங்கள் காந்தீயத்தை ஆதரிக்கிறீர்களா?', வென்ற கேள்விக்கு பதில் வேண்டுமென்று கேட்கப் பட்டிருப்பதாகவும் சொல்லப் படுகின்றன. இந்தச் சுற்றறிக்கை, நான்கணு சந்தாதார்கள் உள்பட எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதா, அல்லது நிருவாக ஸ்தாபனங்களிலிருக்கும் அங்கத்தினர்களுக்கு மட்டும் அனுப்பப் பட்டிருக்கிறதா வென்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தச் சுற்றறிக்கை இப்பொழுது அனுப்ப வேண்டிய தன் அவசியமென்ன வென்பது நமக்குப் புலனாகவில்லை. காங்கிரஸ் பிரசிடெண்டு தேர்தல் ஒருவாறு முடிந்து விட்டது. குறித்த ஒருநபர், தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டு விட்டார். இனி, காந்தீயத்தை ஆதரிக்கிறீர்களா, போஸீயத்தை ஆதரிக்கிறீர்களா வென்ற பிரச்னையே எழ வேண்டிய அவசியமில்லை

திரிபுரி காங்கிரஸில் சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் செலவில் காந்தியடிகளின் உருவச் சிலையொன்று நிர்மாணிக்கப் பட்டு, வருவோர் போவோர் பார்வைக்கு வைக்கப் படுமென்று காங்கிரஸ் உபசரணைக் கூட்ட அறிக்கைகள் கூறுகின்றன.

உருவச் சிலை

இந்த உருவச்சிலை, களி மண்ணினால் இருக்குமா, அல்லது செம்பினாலோ இரும்பினாலோ இருக்குமா வென்பது நமக்குத் தெரியாது. ஆனால், உபசரணைக் கூட்டத்தார், தங்களுடைய காந்தி பக்தியை, இங்ஙனம் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டுத் தெரிவிக்க வேண்டாம். ஜனங்களிடத்தில் காந்தீயத்தைப் பரப்புவதற்கு, இந்த உருவச்சிலை சிறந்த பிரசார சாதனம் என்று மேற்படி உபசரணைக் கூட்டத்தார் எண்ணியிருப்பாரானால் அது மிகத் தவறான எண்ணம். ஆயிரக் கணக்கான ரூபாய்களை, தற்காலிகமாக நிர்மாணிக்கப்படுகிற ஓர் உருவச் சிலைக்கு நாம் செலவழிப்போமானால், இன்னும் நமக்கு ஆடம்பர மோகம் விடவில்லை என்பதுதான் தெளிவாகிறது. அவர் வெளித் தோற்றத்தைக் கண்டு அதற்கு மரியாதை செலுத்துவதிலேதான் இன்னும் நமது மனம் ஈடுபட்டிருக்கிறதே தவிர, அந்த வெளித் தோற்றத்தின் உள்ளே சதா பிரகாசித்துக் கொண்டிருக்கும் சக்தியை அறிந்து, அஃது இடுகிற ஆணைப் படி நடக்க இன்னும் நாம் கூச்சப் பட்டுக் கொண்டிருக்கிறோமென்பது விளங்கவில்லையா? அப்படியானால், சுதந்திர லட்சியத்திற்கு நாம் எவ்வளவு தொலைவில் இருக்கிறோம்?

காந்தியடிகளின் படத்தை வைத்துப் பஜனை செய்தோ அல்லது அதனைக் கொண்டு ஊர்வலம் நடத்தியோ, அல்லது அவர் பெயரால் நமது குழந்தையை அழைத்தோ நாம் காந்தி பக்தர்களாகிவிடப் பார்க்கிறோம். நமது மார்பகத்தை? நமது கீழ்க்கண்ணால் ஒரு [illegible] வந்து 'ஓ! நாம் எவ்வளவு பெரிய தியாகி! எத்தனை ஆண்டுகளாகக் கதர் தரித்துக் கொண்டு வருகிறோம்! நம்மினும் சிறந்த காந்திதாசர், இவ்வவனியில் அவதரித்திருப்பார் கொல்!' என்று நாமே நம்மைத் திருப்தி செய்து கொண்டு விடுகிறோம். பிறரை ஏமாற்றுவது ஒருபுறமிருக்கட்டும்; நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிற பரிதாபகரமான நிலைமையில் நம்மில் எத்தனை பேர் இருக்கின்றனர்!! இது பெரிய ஆச்சரியமான விஷயமல்லவா? பொதுவாக அந்த மகானின் உருவச் சிலைகள், படங்கள் முதலிய நிர்மாணிப்பதிலே நமது பணத்தையும், உழைப்பையும், காலத்தையும் செலவழிக்கிறோமோ, அப்படிச் செலவழிப்பதை விட, அந்த மகானின் கொள்கைகளையும் லட்சியங்களையும் அறிந்து கொண்டு அதன்படி நடப்பதிலேயே நாம் கவனஞ் செலுத்துதல் வேண்டும். இதுவே, அந்தப் பெரியோர்களுக்குத் திருப்தியளிப்பதாகும்.

* • •

மேலே கண்ட வாக்கியங்களை நாம் எழுதிக் கொண்டு வருகிற போது, பிரதி வருஷமும் காங்கிரஸுக்கென்று செலவழிக்கப் படுகிற லட்சக் கணக்கான பெருந் தொகையைப் பற்றிய

காங்கிரஸ் செலவு

எண்ணம் வருகிறது. மஹாத்மா காந்தியும், இங்ஙனம் பெருந் தொகை செலவழிக்கப் படுவதைக் கண்டிக்கிறார். மூன்று நான்கு நாட்கள் நடைபெறுகிற கூட்டத்திற்கு இவ்வளவு பெருந்தொகை செலவழிக்க வேண்டுவது அவசியந்தானா? மற்றும் காங்கிரஸ் நகர நிர்மாணத்திற்கென்று நூற்றுக் கணக்கான பேர், சுமார் ஒரு வருஷ காலமாக ஓயாமல் உழைக்க வேண்டியிருக்கிறது. இந்தக் காலத்தையும், உழைப்பையும் ஜனங்களுக்கு அரசிய லறிவைப் புகட்டும் விஷயத்தில் உபயோகித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். போராட்ட நிலையிலேயுள்ள நாம் சுருக்கமான காலத்தில், சுருக்கமான வழியில் நமது லட்சியத்தை எப்படி யடையலாம் என்பதைப் பற்றி அவ்வப் பொழுது கலந்தாலோசிக்கும் பொருட்டு, தற்காலிகமாக அமைந்த ஓர் இடமாகவே, காங்கிரஸ் மேடையைக் கருத வேண்டும். மிகக் குறுகிய காலத்தில் அதிகமான திட்டங்களைப் போட்டுக் கொண்டு, விரைவில் கலைந்து போகக் கூடிய வாறே, காங்கிரஸ் ஏற்பாடுகள் இருக்க வேண்டும். நமது இந்த யோசனைகள் திரிபுரி காங்கிரஸுக்குச் செல்லு படியாகாதெனினும் அடுத்த காங்கிரஸுக்காவது செலாவணியாகாதா?

* * *

ஸ்பெயின்

கடைசியில், ஸ்பெயின் போராட்டம் ஒரு தினுசாக முடிந்து விட்டது. நடுநிலைமை வகிப்பதாகக் கூறிக் கொண்டு வந்த மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் இப்பொழுது தளபதி பிராங்கோவை, ஸ்பெயினின் அதிகாரியாக அங்கீகரித்துக் கொண்டுவிட்டன. இதுவரை, பிரான்ஸ், பிரிட்டன், ஐர்லாந்து, போலந்து, துருக்கி ஆகிய நாடுகள், தங்கள் அங்கீகாரத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. ஜனநாயக வல்லரசுகள், பாசிஸ சக்திக்குப் பணிந்து கொடுத்து விட்டன. இதுதான் ஸ்பெயின் போராட்டத்தில் நாம் கண்ட பலன். சமீபத்தில் ஸ்ரீ சேம்பர்லேன், ரோமாபுரிக்குச் சென்று முஸோலினியின் கை குலுக்குதலைப் பெற்றுக் கொண்டு வந்ததன் விளைவு இது. பிரான்ஸுக்கும் பிராங்கோ அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட நான்கு அமிசங்கள் அடங்கியிருக்கின்றன:—

1. பரஸ்பர நட்புரிமை.

2. பிரான்ஸிலே தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் நாற்பதினாயிரம் ஸ்பானியர்களைத் திருப்பி ஸ்பெயினுக்கு அனுப்பி விடுதல்.

3. ஸ்பெயினுக்குச் சொந்தமாக பிரான்ஸிலுள்ள பொருள்களையும் பிரெஞ்சு கடலெல்லைக்குள்ளிருக்கும் எல்லா ஸ்பானிஷ் கப்பல்களையும் ஸ்பெயினுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

4. வழக்கமாக நடைபெற்று வந்த தபால், தந்தி, ரயில்வே போக்குவரத்துக்கள் முதலியன அப்படியே இருக்க வேண்டும்.

பிரான்ஸிலே தஞ்சம் புகுந்தவர்கள், இந்த ஒப்பந்தத்தின்படி இனிப் பழி தீர்க்கப் படுவார்கள். மற்றும், இதுகாறும் பிராங்கோ கட்சியினரை எதிர்த்துப் போராடி வந்த குடியரசுக் கட்சியினரின் கதி யென்னாவது? அவர்களுக்கு மன்னிப்பளித்து, சாதா

ரணமான பிரஜைகள் போல் நடத்தப் படுவார்களென்று இந்த இரண்டு வல்லரசுகளும் சேர்ந்து, பிராங்கோ விடமிருந்து ஏன் ஓர் உறுதி மொழி வாங்க வில்லை? பல இடையூறுகளுக்கிடையே குடியரசினர், சென்ற மூன்று வருஷ காலமாகப் போராடி வந்திருக்கின்றனர். கொள்கைக்காகப் போராடி பல இன்னல்களை அநுபவித்த இவர்களுக்கு வேறொன்றும் செய்யாவிட்டாலும், இவர்கள் பழி தீர்க்கப்படுவதினின்றுமாவது பாதுகாக்கப் படலாகாதா? ஆனால், பிராங்கோ அரசாங்கம் ஸ்பெயினில் எப்படி நிலை பெறுகிற தென்பதை நாம் பிரமிப்புடனும் ஏக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருப்போம்.

* * *

பாலஸ்தீன மகாநாடு

இதுவரை, பாலஸ்தீனப் பிரச்னை சம்பந்தமாக, லண்டனிலே நடைபெற்று வரும் மகா நாட்டு நடவடிக்கைகளைப் பார்க்கப்போமானால், ஒரு விஷயம் நிச்சய மாகத் தெரிகிறது. அதாவது அராபியர்களின் சுதந்திர ஆவல் பூர்த்தி யடையாது. இந்த ஆவலைத் தணிவிக்கக் கூடிய மாதிரி சில சீர் திருத்தங்களும் உரிமைகளும் வழங்கப் படலாமே தவிர, பரிபூர்ண உரிமை வழங்கப் படா தென்று தான் நாம் அஞ்சுகிறோம். அப்படியானால் இதுகாறும் அராபியர்கள் போராடிய தெல்லாம் வீண்தானா? ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிலைமை தரும சங்கடமா யிருக்கிறதென்பதை நாம் உணராமலில்லை.

பால்பர் அறிக்கைப்படி யூதர்களையும் திருப்திப் படுத்த வேண்டியிருக்கிறது. 1915ம் வருஷம் ஸர் ஹென்ரி மக்மோஹன் மூலமாக அராபியர்களுக்கு அளித்த சுதந்திர வாக்குறுதியையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஐரோப்பிய யுத்த நெருக்கடியின் போது, இரு சாராருக்கும், பலாபலன்களை அறிந்தோ அறியாமலோ வாக்குறுதி யளிக்க வேண்டியதா யிருந்தது. அதனை, இப்பொழுது, சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு, எல்லாருக்கும் திருப்திகரமாக நிறைவேற்றி வைப்பதென்றால் அது லேசான காரியமா? எல்லாரையும் திருப்தி செய்விக்கிற முறையானது, கடைசியில் எல்லாருடைய அதிருப்தியையும் சம்பாதித்துக் கொள்கிற நிலைமைக்குத் தான் கொண்டு விடும் என்ற தமிழ் நாட்டுப் பழமொழி தற்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் எவ்வளவு உண்மையா யிருக்கிறது?

* * *

சர்வதேச சங்கம்

சர்வதேச சங்கத்திலிருந்து இந்தியா விலகிக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் 10—2—39ல் இந்தியா சட்ட சபையில் நிறைவேறியது. தீர்மானத்திற்குச் சாதகமாக 55 வாக்குகளும் பாதகமாக 45 வாக்குகளும் கிடைத்தன. சர்வதேச சங்கத்தைப்பற்றி இந்தியாவின் பொதுஜன அபிப்பிராயத்தை இப்பொழுதாவது இந்தியா சட்ட சபை ஒரு தீர்மான ரூபமாக நிறைவேற்றியதற்காக நாம் அதனைப் பாராட்டுகிறோம். இங்ஙனம் விலகிக் கொள்வதற்கு, மேற்படி தீர்மானத்தில்

இரண்டு காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன:—

1. சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் ஷரத்துகளை மீறி நடந்த தேசங்களின் மீது, மேற்படி ஒப்பந்தத்தின் 10வது ஷரத்துப்படி, சர்வதேச சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வில்லை.

2. மேற்படி ஒப்பந்தத்தின் 22வது ஷரத்துக்கு விரோதமாக பாலஸ்தீன் விஷயத்தில் கிரேட் பிரிட்டன் நடந்து கொண்டது.

ஸ்பெயின், கைவிடப் பட்டதையும் சீனா ஜப்பானால் ஆக்ரமிக்கப்பட்டு வருவதையும் நமது கண் முன்னாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி யிருக்க, இந்தியா, சர்வதேச சங்கத்தில் ஓர் அங்கத்தினராய் இருந்து உண்டாகும் பயன்தானென்னே? ஒரு விஷயம். இந்தியா சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம், அதிகார வர்க்கத்தினிடையே ஒருவித பரிகாசச் சிரிப்பை எழுப்பி யிருக்கிறதென்று அறிகிறோம். இஃதுண்மையா யிருந்தால் நாம் ஆச்சரியப்படவே யில்லை. நமது தேசிய வளர்ச்சிக்கு இசைந்த எந்தத் தீர்மானத்தை நாம் செய்தாலும், அஃது இத்தகைய ஏளனத்திற்கு உட்பட்டிருப்பதை நாம் அநுபவ பூர்வமாகக் கண்டு வருகிறோம். சுதந்திரம் பெறாத எந்த நாடுகளின் அநுபவமும் இப்படித்தான் இருக்கிறது. ஆகலின், இந்தப் பரிகாசத்தைக் குறித்து யாருமே ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

* * *

டாக்டர் பாமோவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட பர்மா மந்திரிச் சபையானது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் விளைவாக வீழ்ந்து விட்டது.

பர்மா மந்திரிச் சபை

ஊ பூவைத் தலைவராகக் கொண்ட மந்திரிச் சபையானது, இப்பொழுது அமைந்திருக்கிறது. இந்த மந்திரிச் சபையாவது, அடிக்கடி கொணரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் விளைவாக ஆட்டங் கொடுத்துக் கொண்டிராமல், ஸ்திரமா யிருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இந்தப் புதிய மந்திரிச் சபை அமைந்ததன் முதல் அறிகுறி, சென்ற சில வாரங்களாக ஓடாம லிருந்த பர்மிய பஸ்கள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்றன. மாணாக்கர்களின் வேலை நிறுத்தம் ஒருவாறு சமாதானமாக முடிவு பெற்றது. இவை யிரண்டும் புறத் தோற்றங்களாகத் தெரிந்த மாற்றங்கள். இங்ஙனமே, எல்லாருக்கும் நலம் பல நல்கக்கூடிய மாற்றங்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

வெல்ஸ்

ஆங்கிலம் படித்தவர்களிடத்தில் இந்தப் பெயருக்கு—எச். ஜி. வெல்ஸ்—ஒருவித செல்வாக்கு இருக்கிறது. இவர் உலக சரித்திரத்தைப்பற்றி ஒரு நூல் எழுதி யிருக்கிறார். இவர், சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு ஆகாய விமான மார்க்கமாகச் செல்கிற வழியில் பர்மாவிலும் கராச்சியிலும் ஒவ்வொரு நாள் விதம் தங்கிவிட்டு, பர்மிய அரசியல் நிலைமையைப்பற்றியும் இந்திய

அரசியல் நிலைமையைப்பற்றியும் வாய் கூசாது அபிப்பிராயங்கூறி விட்டுப் பறந்து சென்றார். இவரைப்போன்ற மேதாவிகளின் அபிப்பிராயங்களுக்கு இந்தியா அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கவில்லை. இவருடைய கருத்துகளை பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றனவே யென்று தான் வருந்துகிறோம். இந்தியாவின் தேசியம், மேனாட்டுத் தேசியத்தின் மலிவான போலித்தனமென்றும், காந்தியும் ஜவஹரும் மேனாட்டைப் பின் பற்றுகிறவர்களென்றும் இவர் கூறினார். நமக்கு ஒரு விஷயம் தெரியாவிட்டால் அதைப் பற்றி எவ்வித அபிப்பிராயமும் சொல்லாம லிருப்பதுதான் நல்லது. அதை விடுத்து, தெரிந்ததுபோலச் சொல்வதுதான் போலித்தனம். இதை முதலில் வெல்ஸ் உணர்ந்து கொள்ளட்டும்.

அடுத்த யுத்தமா?

வட ஆப்ரிக்காவில் டிரிபோலியும் எகிப்தும் சந்திக்கிற இடத்தில், எகிப்திய அரசாங்கத்தார், கோட்டை கொத்தளங்கள் முதலியன அமைத்துப் பலமான பந்தோபஸ்து செய்கின்றனர் என்று ஒரு செய்தி கூறுகிறது. இத்தாலியப் படைகள், ஏராளமாக லிபியாவுக்கு அனுப்பப் படுவதையும், இத்தாலிய தளகர்த்தரான தளபதி பொடாக்ளியோ, அங்குச்சென்றிருப்பதையும் நோக்கினால், எங்கேயோ, ஏதோ யுத்தப்புகைச்சல் ஏற்படுமென்று தோன்றுகிறது. இதற்கேற்றாற்போல், எகிப்திய பிரதம மந்திரியான மஹமது மஹௌமத் பாஷா உலக யுத்தம் விரைவில் வரக்கூடுமென்று கூறியிருக்கிறார். ஸ்பெயினில் பிராங்கோ ஆதிக்கம் ஊர்ஜிதமான பிறகு இந்த யுத்தப்புகைச்சல் ஓரளவு வெளிவரக்கூடுமா?

சென்னை மாகாண அரசாங்கத்து வரவு செலவு திட்டம்

ஆயிரக்கணக்கில்

	1937—38 கணக்கு	1938—39 திட்டம்	1938—39 திருத்திய திட்டம்	1939—40 திட்டம்
வருமானம்	16,00,62	15.98,21	16,23,19	16,2[illegible].45
செலவு	15,82,96	15,98,09	16,20,76	16,4[illegible] 72
உபரி அல்லது துண்டு விழும் தொகை	17,66	12	2,43	—17,27

தமயனின் கடிதம்

தேவி தாசன்

(இந்திய நாட்டிலிருந்து மலாய் நாட்டிற்குத் தொழில் விரும்பிச் சென்ற தம்பி, அங்கு மோட்டார் விபத்துக்குள்ளாகி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதைத் துணைவர்கள் மூலம் அறிந்த தமையன், தம்பிக்கு விடுத்த கடிதம்.)

காணும் இடமெல்லாம் மேவியடா—அவன்
கருணைக் கதிர் எங்கும் வீசுதடா!
பேணி யுனையவள் காப்பாளடா!—உன்னைப்
பெற்ற தாயுமவள் அல்லவோடா! 1

பிள்ளைத் துயர்பெற்ற தாயுக்கடா!—உன்றன்
பிஞ்சிளஞ் சிந்தைக்கு அல்லவடா.
கள்ளவி ழுமவள் மலரடியை—உன்றன்
கருத்தி லூன்றிக் கை கூப்பிடடா! 2

'பட்ட மரத்திலே வெட்டும்வீழும்—பாரில்
கெட்ட குடியே மென்மேலுங்கெடும்'
பட்டுத் தெளிந்தமுன் னோர்மொழியாம்—இது
பலித்ததடா நம்மின் வாழ்க்கையிலே! 3

அன்னை யின்கருணை வெள்ளத்திலே—உன்றன்
அல்லலெலாம் விழுந்தோடுமடா!
இன்னவுன் உள்ளப் புணையினையே—பல
சிந்தனை வேலையிற் செலுத்திடாதே. 4

ஊக்கங் கொண்டுநீ எழுந்திடடா!—அன்னை
ஓம்சக்தி என்றுநீ சொல்லிடடா!
ஏக்க மெனுமுட் பத்தைகளை—வீர
வாளுக் கிரையாய் ஈந்திடடா! 5

உற்ற துணைவர்க்கு உன்னுடலை—தம்பி!
உதவிடு செருப்பென என்றுமடா
ஏற்ற நின்பணியின் தலைவருக்கு—நீ
என்றும் இனிது நடந்திடடா! 6

மஹாத்மாவின் உருவச்சிலை

—மஹாத்மா காந்தி

திரிபுரி காங்கிரஸ் மைதானத்தில் இருபத்தை யாயிரம் ரூபாய் செலவில் மஹாத்மாவின் உருவ ச்சிலை யொன்று நிர்மாணிக்கப் பட்டு வருகிறதென்பதன் சம்பந்தமாக எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. எனக்கு இந்த உருவச் சிலையைப் பற்றி ஒன்றுந் தெரியாது. இது சம்பந்தமாக விசாரணை செய்து கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தி உண்மை யென்று ஊர்ஜிதப் படுத்தப் படுகிற வரையில் நான் காத்துக் கொண்டிருக்க முடியாது. இந்த உருவச் சிலை நிர்மாணிக் கப்பட்டு வருகிறதென்றே நாம் வைத்துக் கொண்டு பேசுவோமானால் என் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு நானும் இந்த உருவச்சிலை நிர்மாணத்தைக் கண்டிக்கிறேன். நான் சாதாரணமான ஒரு மனிதன். களி மண்ணால் செய்யப்பட்டவன். ஒரு வளையலை ஜாக்கிரதையுடன் காப்பாற்றி வைத்திருந்தால் ஆயிரம் வருஷங்களுக்கு மேலிருக்கும். ஆனால் அந்த வளையலை விட என் சரீரம் வெகு சீக்கிரத்தில் உடைந்து போகக் கூடியது. அப்படியிருக்க, எனக்காக இருபத்தையாயிரம் ரூபாய் செலவழித்து, அந்தப்பணத்தை வீணாக்குவானேன்? உருவச் சிலைகள், படங்கள் முதலியன மீது எனக் கேற்பட்ட வெறுப்பு, எனது முஸ்லீம் சகோதரர்களிட மிருந்து நான் கற்றுக்கொண்ட பாடம். உருவச்சிலை நிர்மாணச் செய்தி உண்மையாயிருந்தால் உபசரணைக் கூட்டத்தார், இந்த துரதிருஷ்டமான முயற்சியிலிருந்து விலகிக் கொள்ளட்டும். இந்தப் பணத்தை அவர்கள் மிச்சப் படுத்தி வைத்தல் நல்லது. இந்த உருவச்சிலை நிர்மாணச் செய்தி, வெறும் வதந்தியா யிருந்தால், எனக்காக உருவச் சிலைகள், படங்கள் முதலியன நிர்மாணிக்க வேண்டுமென்ற எண்ண முள்ளோருக்கு இஃதோர் எச்சரிக்கையா யிருக்கட்டும். இவற்றை நான் மனப் பூர்வமாக வெறுக்கிறேன். என்னிடத்தில் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள், நான் எந்தெந்த முயற்சிகளின் பிரதிநிதியாக இருக்க விரும்புகின்றேனோ, அவைகளில் ஈடு படுவார்களாக. இந்த உருவச் சிலைகளுக்காகச் செலவழிக்கிற பணத்தை, ஹரிஜன சேவக சங்கம், அகில இந்திய சர்க்கா சங்கம், அகில இந்திய கிராம புனருத்தாரண சங்கம், ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் முதலியவற்றிற்குக் கொடுப்பார்களாக.

—ஹரிஜன்

சிறு கதை

தட்புடல் கல்யாணம்

—ஏ. மதுரம்

ஏச்சம்பாடி கலெக்டர் ஐயாசாமி ஐயருடைய வீட்டில் கல்யாணம் என்றால் யாருக்குத்தான் நாவில் நீர் சொட்டாது? ஆனந்தத்தினால் கண்ணில் தண்ணீர் வராது? முக்கியமாகக் கலெக்டர் வீட்டில் உபாத்தியாயம் செய்து வைக்கும் ஊக்குருவி சாஸ்திரியாருக்கு—வேகமாக நடந்து செல்வதனால் இவருக்கு இந்தப் பெயர் பாலியத்தில் இடப்பட்டது போலும். இவருடைய உண்மையான பெயர் என்ன வென்பது ஒருவருக்குத் தெரியாது.—தலை கழுத்தின்மேலில்லை. ஏற்கனவே இவர் குனிந்து தன் கால் நகங்களில் அழுக்கு சேர்ந்திருக்கிறதா இல்லையா வென்று பார்ப்பதற்கு இவருடைய தொந்தி குறுக்கிட்டுத் திரைபோட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது கேட்க வேண்டுமா? கலெக்டர் வீட்டில் கல்யாணம். மேலும் கலெக்டர் சம்சாரம் அம்மணி அம்மாள், வைதிக விஷயங்களில் தான் சொல்லுகிறபடிதான் கேட்பார் என்பது சாஸ்திரியாருக்குத் தெரியும். கலெக்டருடைய தயவு இருக்கிறதோ இல்லையோ, 'கலெக்டராத்து அம்மாமி'-அம்மணி அம்மாளின் பொதுஜனப் பெயர்—யின் தயவு சாஸ்திரிகளுக்குப் பூரணமாக இருக்கிறது. இவருக்கு என்ன குறைச்சல்! இவரைச் சுற்றி எத்தனை ஜூனியர் உபாத்தியாயர்கள்! பூரி தட்சணை கொடுக்கும்போது என்னை ஒரு கண் பார்த்துக் கொள்ள வேண்டு மென்கிறார் ஒருவர்; சம்பாவனைகளின் போது என்னை மறந்துவிடக் கூடாதென்கிறார் மற்றொருவர்; எனக்கு ஒரு ரூபாய் கிடைத்தால் நீங்கள் கால் ரூபாய் எடுத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபனை யில்லை யென்கிறார் பிறிதொருவர்; 'எனக்கு நாடகாந்தம் வித்பத்தி உண்டு; சாமு கனபாடிகளிடம் நான் அத்தியயனம் பண்ணினேன். தங்களுடைய தகப்பனார் என் சிறிய தாயாருடைய பெரிய மைத்துனருக்கு சம்பந்தியாக வேண்டும். அந்த பாத்தியத்தை உத்தேசித்தாவது என்னை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். வித்வத் சம்பாவனையின்போது மட்டும் என்னை ஞாபகம் வைத்துக் கொண்டால் போதும்' என்று வேறொருவர் நீண்ட தொரு விண்ணப்பம் செய்து கொண்டார். பி. ஏ. பட்டதாரிகள் இருபத்தைந்து ரூபாய் உத்தியோகத்திற்குக் கூட இவ்வளவு நீண்ட விண்ணப்பங்கள் செய்து கொள்வதாகத் தெரியவில்லை. இத்தனைபேர் தம்முடைய தயவுக்காகக் காத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து, ஊக்குருவி சாஸ்திரியார்

ஒருதரம் கனைத்துக் கொடுத்தார். பாலக்காடு துண்டு புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டார்; பட்டணம் பொடியிலே ஒரு பலத்தை நாசித் துவாரத்திலே போட்டு அடைத்தார். இத்தனை பேருடைய விண்ணப்பங்களுக்கும் சேர்ந்தாற் போல், 'ஆகட்டும்; எல்லாருடைய ஞாபகமும் இருக்கிறது' என்று சுருக்கமாகப் பதில் கூறினர். இதைக் கேட்டு ஒவ்வொருவரும் திருப்தியடைந்தனர். கலெக்டர் வீட்டுக் கல்யாணத்திற் கென்று சில வைதிகர்கள், விசேஷமான சில பஞ்சாதிகளைச் சொல்லிக் கொண்டனர்; இன்னும் சிலர் சுகபேதி மாத்திரை சாப்பிட்டு விட்டு வயிற்றைச் சுத்தமாக்கிக் கொண்டனர்; கிறிஸ்மஸ்பண்டிகையை முன்னிட்டு துரைமார்களைப் பார்க்கப் போவதற்கு உத்தியோகஸ்தர்கள் ஒழுங்காக க்ஷவரம் செய்து கொண்டு செல்வதைப்போல் சிலர், க்ஷவரம் முதலியன செய்து கொண்டார்கள். கலெக்டர் வீட்டுக் கலியாண மல்லவா? ஒழுங்காக இருக்க வேண்டுமே.

ஃ ஃ ஃ

இங்கே அம்மணி அம்மாளின் தலைமையிலேயே கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு வந்தன. கலெக்டர் ஐயாசாமி ஐயருக்கு முகூர்த்த லக்கினம் கூடச் சரியாக ஞாபக மில்லை. அவர் ஜமாபந்தி வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். யாரரிடத்திலிருந்து எந்தெந்த சாமான்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியுமோ அந்த விஷயங்களெல்லாம் 'கலெக்டராத்து அம்மாமி' க்கு நன்றாகத் தெரியும். இவரிடத்தில் புதிய நாகரிகங்களும் பழைய சம்பிரதாயங்களும் ஒன்று சேர்ந்து விளங்கின. அப்படியே இவருடைய முகத்தில் அழகும் அகம்பாவமும் சேர்ந்து தாண்டவம் செய்தன. தனக்குத் தெரியாத விஷயமே இந்த உலகத்தில் இல்லை யென்பது இவருடைய மனப் பூர்வமான எண்ணம். போர்டாபீசிலிருந்து ஏதேனும் தபால் வந்தால் அதற்கு, தானே கலெக்டராயிருந்து பதில் எழுதிவிடலாமா வென்று 'அம்மாமி' யின் மனம் துடிக்கும். ஆனல், இவருடைய துரதிருஷ்ட வசமாகப் பெண் மக்களைக் கலெக்டர்களாக நியமிக்கலாம் என்று இன்னும் அரசாங்கத்தார் உத்தரவு செய்யாம லிருக்கிறார்கள். பி. எல். பரீட்சையில் தேறினவர்கள் தான் ஹைகோர்ட், வக்கீலாகப் பதிவு செய்து கொண்டு வழக்குகளை நடத்தலாம் என்ற விதியை மட்டும் எடுத்து விட்டால், அம்மணி அம்மாளைப் போல் சிறந்த வக்கீலைப் பார்க்க முடியாது; இப்பொழுது மாதம் நாலாயிரம் ஐயாயிரம் என்று சம்பாதிக்கும் வக்கீல்களின் வாயில் மண் தான். இப்படிப் பட்ட அம்மணி அம்மாள் கல்யாணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். தெருவில் வாழை மரம் கட்டுவது முதல் பெண்ணுக்கு இன்ன விதமான கூறைச்சேலை வாங்க வேண்டுமென்ற உத்தரவு செய்கிறது வரை, எல்லாம் அம்மணி அம்மாளுடைய ஏற்பாடுகள் தான். கூறைச்சேலை வாங்கும் விஷயத்தில் கூட சம்பந்தி பிராமணருக்கும் அம்மணி அம்மாளுக்கும் பெரிய வாதம் நடை பெற்றது. சம்பந்தி யாகிய கோதண்டபாணி ஐயர் பிரபல வக்கீல். கிரிமினல் வழக்குகளிலேயே இவருக்கு அதிக சம்பாத்தியம். குறுக்கு விசாரணை செய்வதில் பெயர்

போனவர். அப்படிப் பட்டவர், ஒரு சாதாரண கூரைச்சேலை விஷயத்தில் அம்மணி அம்மாளுக்கு முன் நிற்க முடியாமல் தவித்து விட்டார் என்ருல் அம்மாளின் சாமர்த்தியத்துக்கு வேறு சர்டிபிகேட் வேண்டியதில்லை. கோதண்டபாணி ஐயர், தமதுநாட்டுப் பெண்ணுக்குச் சரிகைத் தொட்டிப் பூச்சேலை வாங்கப் போவதாகச் சொன்னுர். அது வாங்கக் கூடாதென்றும், விலை அதிகமே தவிர, அது கட்டிக்கொள்வது நாகரிகமில்லையென்றும் நீலவர்ண உடலும், ஏழு வராகன் தறியில் மஞ்சள் கரையும் சரிகை தலைப்பும் உள்ள காஞ்சிபுரம் சேலையே வாங்க வேண்டுமென்று அம்மாமி கூறினுள். இதைப் பற்றி இருவருக்கும் தர்க்கம் நடைபெற்றது. புடவையைப்பற்றி ஆரம்பித்த தர்க்கமானது நாகரிகத்தில் புகுந்து, அழகிலே ஏறி, ஆண் பெண் சமத்துவ சமர்க்களத்திலே வந்து நின்றது. இதற்குள் கோதண்டபாணி ஐயர் தமது தோல்வியை அங்கீகரித்து கொண்டு போர் மூளாமல் பாதுகாத்துக் கொண்டார். அம்மணி அம்மாள் வெற்றிச் சங்கு ஊதினுள். நிலாவர்ணப் புடவைக்கே உத்தரவு கொடுத்து விட்டாள். முகூர்த்தத்திற்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் வந்து குவிந்தன. விசாலமான பந்தல் போட்டாய் விட்டது. ஐந்து நாட்களும் ஐந்து விதமான கச்சேரிகள் ஏற்பாடு செய்யப் பட்டன. முகூர்த்த நாளன்றும் ஊர்வல தினத்தன்றும் ஸ்பெஷல் பரத நாட்டியக் கச்சேரிகள் ஏற்பாடு செய்யப் பட்டன. பதினெட்டு பரிசாரகர்களும் பதினுன்கு சமையல்காரரும், முகூர்த்தத்திற்குப்பத்து நாட்களுக்கு முன்னுடியே வந்து சேர்ந்து விட்டனர். ஐரோப்பிய நண்பர்களுக்கு ஒரு நாள் விருந்தும், இந்திய நண்பர்களுக்கு ஒரு நாள் விருந்துமாக ஏற்பாடு செய்து அதற்கு வேண்டிய அட்வான்ஸும் கொடுக்கப் பட்டாய் விட்டது. தட்சணைச் செலவுக்காக வேண்டி, புதிய கால், அரை, முழு ரூபாய்களையே கஜானுவிலிருந்து வரவழைத்துக் கொண்டாள். இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து விட்டு, புளிச்சானுரிலே முகாம் செய்து கொண்டிருந்த கலெக்டர் துரைக்கு அம்மணி அம்மாள் ஒரு கடிதம் எழுதினுள். அதில் முகூர்த்தம் நிச்சயமாகி விட்டதென்றும், எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டதாகவும், ஆனுல், இப்பொழுது கையிலுள்ள பணம், முதல் இரண்டு நாட்களுக்குத்தான் வருமென்றும், மூன்ருவது நாளுக்கு மேல் வேண்டிய செலவுகளுக்கு எப்படியாவது பணம் சம்பாதித்துக் கொண்டு வர வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

பார்த்தார் ஐயாசாமி ஐயர் இந்தக் கடிதத்தை. இருபத்திரண் டாயிரம் ரூபாய் இரண்டு நாளிலேயே கரைந்து விடுமா வென்று தமக் குள்ளேயே சொல்லிக் கொண்டு பெருமூச்சு விட்டார். ஆனுலும் என்ன செய்வது! கடிதம் எழுதியிருப்பது அம்மணி அம்மாளல்லவா! அம்மணி அம்மாள் என்று தமிழில் கையெழுத்துப்போட்டிருப்பதோடு கூட இங்கிலீஷில் 'மிஸஸ் ஐயாசாமி ஐயர்' என்று வேறே கையெழுத்துப் போட்டிருக்கிருள். எனவே அம்மணி அம்மாள், ஐயாசாமி ஐயரைப் பணங் கேட்க உரிமையுண்டு. ஐயாசாமி ஐயருக்கும் பணங் கொடுக்க பாத்தியமுண்டு. கலெக்டர் ஐயருக்கு ஜமாபந்

தியில் மனமே செல்லவில்லை. முகூர்த்தத்தையோ இனி நிறுத்த முடியாது. கடனே, உடனே, ஏதேனும் வாங்கிக் கல்யாணத்தை முடித்தே யாகவேண்டும். இன்னும் குறைந்தது பதினாயிரம் ரூபாயாவது பிடிக்கும். இந்த எண்ணங்களினால் ஏக்கம் பிடித்த ஐயர், தமக்குக் கீழ்ப் பட்ட அதிகாரிகளின் மீது எறிந்து விழுந்தார். வேறு யாரேனும் இவர் மாதிரி நடந்து கொண்டிருந்தால், 'என்ன நாய் போல் வள்ளென்று மேலே விழுகிறாயே?' என்று கூசாமல் கேட்டிருப்பார்கள். ஆனால் நமது ஐயர்துரைக்கு இந்த உவமானம் பொருந்துமா? க்ஷமிக்க வேண்டும். கீழக்குண்ணம் ரெட்டியாரை மெதுவாகக் கூப்பிட்டனுப்பி தமது கஷ்ட நிலைமையை ஐயர் எடுத்துரைத்தார். 'அவ்வளவு பெரிய வர் கையைப் பிடித் திழுத்தால் மாட்டேனென்று எப்படி சொல்வது'? என்று ஒரு வசனம் உண்டு. அதைப் போல் கலெக்டர் ஐயா கடன் கேட்டால் மறுப்போர்கூட உண்டோ? உடனே ரெட்டியார் எவ்வித எழுத்துமில்லாமல் பத்து பெரிய நோட்டுகளை ஐயர் கையில் ஓசைப்படாமல் சேர்ப்பித்தார். ஐயருடைய முகம் தாமரை மலர் போலாகி விட்டது. ராஜாவுக்கு எழுதிப் போட்டு விட்டு ஊருக்குக் கிளம்பி விட்டார்.

ஃ ஃ ஃ

முகூர்த்த மண்டபத்திலே கஜகஜ வென்று ஜனங்கள் நிரம்பி யிருக்கிறார்கள். வைதிகர்களின் வேத கோஷம், வீட்டின் கூரையை முட்டித் தள்ளிவிடும்போலிருக்கிறது. ஒரு பக்கத்திலேபுராதன சம்பிரதாயத்தை அநுஷ்டிக்கும் சில ஸ்திரீகள் மங்கள கரமான பாட்டுகளைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் சில நவீன நாகரிக ஸ்திரீகள் தாலி கட்டவேண்டுவது அவசியமா வென்பதைப் பற்றியும் பெண்களின் கண் சீக்கிரம் கெட்டுப்போவது இந்த ஓமப்புகையினாலும் அடுப்புப் புகையினாலேயுமாதலால், இனி ஹோட்டல் களிலிருந்தே சாப்பாடு வரவழைத்து விட வேண்டு மென்பதைப்பற்றியும் பலத்தவாதம் செய்து கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கத்தில், இப்பொழுதுதான் புக்ககத்திலே சென்று குடித்தனம் செய்ய ஆரம்பித்திருக்கும் பெண்கள், தங்கள் கஷ்ட நிஷ்டூரங்களை பரஸ்பரம் ஒருவரிடம் ஒருவர் சொல்லி ஆறுதல் செய்து கொண்டார்கள். தன் மாமியாரை யமதர்மராஜனிடம் எப்படி சிநேகம் செய்து வைப்பது என்பதைப் பற்றி ஒருத்தி யோசனை கேட்டாள். அதற்குள் மற்றொருத்தி அவசரமாக, தன்னுடைய நாத்தனாரையும் கூட அனுப்புவதாகச் சொன்னாள். வேறொருத்தி துக்கந் தாங்க மாட்டாமல் 'என்னுடைய மைத்துனனே பெரிய யமனைப் போலிருக்கிறார்' என்று சொல்லிக் கொண்டே விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். தாலிகட்டுவதற்கு முன் நல்ல சகுனமல்லவா! அம்மணி அம்மாளோ இங்கு மங்குமாக ஓடிக் கொண்டிருக்கிறாள். இந்த அலைச்சலிலே, தன் பெண் சிங்காரித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து ஆனந்தம் தாங்கமாட்டாமல் அவளை நெரித்து முத்தமிட்டுக் கொள்வாள். அதே சமயத்தில், ஜில்லாவின் எஜமானராகிய தன் எஜமானரை 'என் கம்பம்போல் நிற்கிறீர்?' என்று ஓர் அதட்டுப் போடுவாள். உபாத்தியாய

ரைப் பார்த்து 'என்ன ஆச்சா ஊக் குருவி?' என்று மிரட்டுவாள். சம்பந்திகளை யெல்லாம் உபசரித்து ஒரு முறைக்கு மும்முறையாகக் காப்பி குடிக்கும்படி வற்புறுத்துவாள். முகூர்த்த வேளையும் வந்து விட்டது. தம்பதிகள் அம்மி மிதித்து, அக்கினி வலம் வந்தார்கள். திருமங்கிலியதாரணம் செய்வதற்கு முன்னர் அங்குள்ள தட்டுகளில் திருமங்கிலியம் எங்கேயாவது இருக்கிறதா வென்று உபாத்தியாயர்கள், பல இடங்களிலும் பார்த்து, தங்கள் இடுப்புகளையும் தடவிப் பார்த்தார்கள். கடைசியில் ஊக்குருவி சாஸ்திரியார், நடுங்கிய குரலுடன், அம்மணி அம்மாளைப் பார்த்து 'அம்மா! திருமங்கிலியம் எங்கே?' என்று கேட்டார். அம்மணி அம்மாள் திடுக்கிட்டாள். தன் கழுத்தைத் தடவிக் கொண்டாள். அப்பொழுது அவள் முகத்தில் அகம்பாவம் போய் அசட்டுத்தனம் வழிந்தது.

சாஸ்தி:—பண்ணக் கொடுக்கவில்லையா?

அம்ம:—நீர் இதை என் முன்னேயே சொல்லக் கூடாது?

சாஸ்தி:—திருமங்கிலியத்தைக்கூட மறந்துவிடுவீர்கள் என்று எனக்குத் தெரியாது.

அம்ம:—உம்ம புத்தி எங்கே போச்சு? இதை முன்னேயே நீர் சொல்ல வேண்டாமா?

இதற்குள் கலெக்டர் கிட்டே வந்தார். என்ன சமாசாரம் என்று கேட்டார். திருமங்கிலியம் இன்னும் பண்ணவே கொடுக்க வில்லை யென்று தெரிந்தது. சரி இப்பொழுது என்ன செய்வது? முகூர்த்த வேளை தவறிப் போகிறது. தம்முடைய அதிகாரத்தைச் செலுத்த இதுதான் சமயம் என்று மிகவும் சீக்கிரத்தில் தெரிந்து கொண்ட ஐயர், 'சரி; உன் தாலியை அவிழ்த்துக் கொடு' என்று கம்பீரமாகச் சொன்னார். அந்த மட்டும் 'தாலியை அறுத்துக் கொடு' என்று வாய் தவறிச் சொல்லவில்லை. அம்மணி அம்மாள் முகம் எலிமுகமாகி விட்டது! அவள் அகம்பாவத்தை அவள் கண்ணீர் மறைத்து நின்றது. தாலியை அவிழ்த்துக் கொடுத்தாள். பெண்ணின் கழுத்தில் தாலி ஏறியது; ஆனால் தாயார் கழுத்திலிருந்தும் அஃது இறங்கியது. நல்ல முகூர்த்தந்தான். இந்த முகூர்த்தத்தை வைத்துக் கொடுத்த உபாத்தியாயர் யாரோ?

உலகத்தில் நடப்பதென்ன?

சென்ற வருஷ ஹரிபுரா காங்கிரஸின் போது இப்படி சுபாஷ் பாபுவை முன் தள்ளி ஒற்றுமையாகச் சென்ற திருக்கூட்டம் இந்த வருஷம் திரிபுரியில் 'இப்படிப் போகுமா? கலைந்து விட்டனரே! காலத்தின கோலமா?



அமெரிக்காவில், ஸ்திரீகள் குதிரைப் படை வீரர்களாகப் பழக்கப் படுத்தப்படுகிருர்கள். உலகம், சமாதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது!!

மத்திய தரைக்கடலில் வல்லரசுகளின் பலம் எவ்வளவு சரி சமானமாக இருக்கிறது பார்த்தீர்கள்?

திரிபுரி காங்கிரஸ் தலைவர்

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்



லண்டனிலே இப்பொழுது பாலஸ்தீன சம்பந்தமாக அராபிய-யூதமகாநாடு நடைபெறுகிறதே, எல்லாம் இந்த நாட்டைப்பற்றித்தான். இதுதான் பாலஸ்தீனம்.

பாலஸ்தீனத்தில் அராபிய தேசீய இயக்கத்தின் தலைவர் இவர்தான். இவர் பெயர் கிராண்ட் மப்டி அமீன்-எல்-ஹுஸேன்.

இவர் யூதர் கட்சித் தலைவர் டாக்டர் செயிம் விஸ்மான். இவரைப்பற்றி 'ஜோதி' சுடர் 1—கதிர் 1ல் எழுதியிருக்கிறோம்.



ஸ்பெயினில் பிராங்கோ ஆட்சியை பிரிட்டனும் பிரான்ஸூம் அங்கீகரித்து விட்டன. அந்த ஸ்பெயின் இதுதான்.

குடி யரசு அரசாங்கத்தின் தலைவரான சேனார் அஜானா. பிராங்கோ கட்சியினர் பார்சிலோனாவைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, இவர் பாரிஸுக்கு ஓடிப்போய், அங்கேயே இருந்து கொண்டு, பிராங்கோ கட்சியுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்.

இவர் தான் தளபதி பிராங்கோ.
எப்பொழுதும் புன் சிரிப்புத்
தான்! நல்லதுக்கா?
கெடுதலுக்கா?

ஸ்பெயின் யுத்தத்தில் பிராங்கோ கட்சியினர் ஓர் ஊரைக்கைப்பற்றிக்கொண்டுவிட்டால், அந்த ஊர் ஜனங்கள் இப்படித்தான் பயந்து போய் மூட்டை முடிச்சுகளுடன் ஓடினார்கள்.

எத்தகைய கல்வி பெண்களுக்கு போதிக்கப் படவேண்டும்?

—"மௌனத்கல்யன்"

பெண் மக்கள் அமைப்பிலும் நடை உடை பாவனைகளிலும் ஆண் மக்களினின்றும் வேறுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியானது, அவர்களது அமைப்பிற்கும், பிற்கால வாழ்க்கைக்கும் ஏற்றாற்போலிருக்க வேண்டும். பெண்களின் தேக மென்மைக்குத் தகுந்தாற்போல் அவர்களுடைய அறிவும் அமைந்து கிடக்கிறது. விஷயங்களை விரைவில் கிரகிக்கும் ஆற்றல் அவர்களுக்குண்டு. ஆனால் கிரகித்த விஷயங்களை உடனே மறக்கும் சக்தியும் அவர்களிடத்தில் இருக்கிறதென்பது சிலருடைய அபிப்பிராயம். பொதுவாகவே, ஆண் மக்களின் அறிவை விடப் பெண் மக்களின் அறிவு அதிகமாகப் பண்பட்டிருக்கிறது என்று சில அறிஞர் நினைக்கின்றனர். வீணான கவலைகளிலும் பயங்கரமான சம்பவங்களிலும் பெண் மக்களின் அறிவு சென்றால் அது கலக்கமடையும். ஆதலின் அவர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியானது, அமைதியுடைத்தாய் ஆனால் அதிக மென்மையுடையதாய் இருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

பெண் மக்கள், ஆண் மக்களுக்கு ஊழியம் செய்யவே பிறந்தார்கள் என்ற எண்ணம் உலகில் ஒழிய வேண்டும். குழந்தைகளைப் பெறும் இயந்திரமாக அவர்களைக் கொள்ளல் அநாகரிகமுடைத்தாம். ஆண் மக்களுக்குப் பெண் மக்கள் இன்றியமையாதவர்கள். பெண் மக்களுக்கு ஆண் மக்களின் உதவி வேண்டும். ஆகலின் இரு திறத்தாரும் சமமான நிலையில் இருந்து உலக வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற எண்ணத்துடனேயே இருவரையும் ஆண்டவன் சம்பந்தப் படுத்தி யிருக்கிறான். பெண் மக்களுக்கென்று தனியான உலகம் உண்டு; தனியான வாழ்க்கை உண்டு; தனியான நாகரிகம் உண்டு. ஆனால் அவர்களுடைய உலகம், வாழ்க்கை, நாகரிகம் ஆகிய இவை ஆண் மக்களின் உலகம், வாழ்க்கை, நாகரிகம் இவைகளோடு பிணைந்து நிற்கின்றன. இங்ஙனம் பிணைந்து நின்றாலன்றி இன்பமென்பது உலகத்தில் இராது. இந்த உண்மையை உணர்ந்து பெண் மக்களுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

ஃ ஃ ஃ

பண்டைக் காலத்துப் பெண் மக்கள் பெரிய கவிகளாக விளங்கினார்கள்; சிறந்த புலவர்களா யிருந்தார்கள்; யுத்த வீரர்களாகப் போற்றப்

பட்டார்கள். வேதத்தின் சில பாகங்கள் பெண் மக்களால் பாடப்பட்டிருக்கின்றன. அரசியல் விவகாரங்களிலும் அவர்கள் தலையிட்டுழைத்தார்கள். வேத காலத்தில், பெண் மக்கள், ஆண் மக்களுக்குச் சமமாக எல்லாத் துறைகளிலும் விளங்கினார்கள். ஆனால் பெண் மக்களுக்கு ஆபரணங்களான, கற்பையாதல் வேறு பல நற்குணங்களையாதல் அவர்கள் இழந்துவிடவில்லை. சம்பராசுரனோடு யுத்தம் செய்த தசரத மகா ராஜனுக்கு உதவியா யிருந்த கைகேயி, தன் கணவனிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையில் சிறிதும்பிறழ்ந்தாளில்லை. இதனால் விளங்குவதென்ன?

ஃ ஃ ஃ

பெண் மக்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும் கல்வியானது, அவர்கள் பிற்காலத்தில் உத்தமத் தாய்மார்களாகவும், சிறந்த மனைவிமார்களாகவும் உயர்ந்த சகோதரிகளாகவும் விளங்கும்படி இருத்தல் வேண்டும். அவர்கள் வீட்டிற்கு மட்டும் அல்லாது நாட்டிற்கும் நலஞ் செய்வோராய் இருக்கும்படி செய்யவேண்டும். தங்கள் கற்பைக் காத்துக்கொள்ளவும் திறனற்றவர்களாய் இருக்கும்படி செய்யக்கூடாது. இத்தகைய கல்வியினாலேயே பெண் மக்களுக்கும்—அவர்களின் மூலமாக நாட்டிற்கும் நலன் உண்டாகும்.

ஃ ஃ ஃ

சங்கீதம், தாய்மொழி, இந்திய தேச சரித்திரம் இவைகளில் நல்ல பயிற்சி பெறும்படியாகப் பெண் மக்களைச் செய்ய வேண்டும். சங்கீதத்தின் பெருமை அளவிடுதற்கரியதன்று. இந்தச் சங்கீதம் இப்பொழுது பல விதமான இழி துறைகளில் உபயோகிக்கப் படுகிறது. குடும்ப ஸ்திரீகளெல்லாருமே சங்கீதத்தில் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்ற எண்ணமும் இப்பொழுது பரவியிருக்கிறது. முற்காலத்தில் குடும்பஸ்திரீகள் சங்கீதத்திலும் பரதநாட்டியத்திலும் வல்லுநர்களா யிருந்தார்கள். இக்காலத்திலுள்ள பெண்மணிகள் பலர் ஹார்மோனியப் பெட்டி இல்லாவிடின் பாட முடியாதவர்களா யிருக்கிறார்கள். அந்தோ! பரிதாபம்! சங்கீதத்தில் கலைவாணியை வென்ற பெண் மக்களைப் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த நமது நாடு, இப்பொழுது ஹார்மோனியச் சனியனோடு போராடுகிறது. வீணை மறைந்து விட்டது; குழல் ஓடிப்போயிற்று; பரத நாட்டியத்தின் பேரே பலருக்குத் தெரியாது இந்த நிலைமையில் சங்கீதத்தைப் பெண் மக்களிடையில் விருத்தி செய்ய வேண்டும். பள்ளிக்கூடங்களில் இந்திய முறையில் சங்கீதத்தைப் பெண் மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் பக்திரசமான கீர்த்தனைகளையும், வீரச் சுவை ததும்பும் பாக்களையும் பெண் பிள்ளைகள் சங்கீத முறைப்படி பாடினால் எவ்வளவு இன்பமா யிருக்கு மென்பதை நான் கூறவேண்டுவதில்லை. இங்ஙனம் கற்றுக் கொடுக்கும் கீர்த்தனங்களின் பொருள்களை அவர்களுக்கு உணர்த்தி பிறகு பாடச்சொன்னாலன்றி நன்மை உண்டாகாது. பொருள் தெரியாமல் தற்காலத்துப் பெண் மக்களிற் சிலர் பாடுவதனால் அக்கீர்த்தனங்கள் உருக்குலைந்து எங்ஙனம் அல்லலுறுகின்றன என்பதை நான் கூற வேண்டுவதில்லை.

ஃ ஃ ஃ

தாய் மொழிப் பயிற்சி பெண்

களுக்கு இன்றியமையாதது. தாய் மொழியைச் செவ்வனே கற்றுக் கொள்ளாத பெண்கள் சிறந்த தாய்மார்களாக விளங்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். தற்காலத்துப் பெண்களிற் சிலருக்கு ஆங்கில மொழியில் வல்லுநராக வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது. இது தவறு என்று கூற நான் முன் வரவில்லை. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வோர் அழகு உண்டு. பல மொழிகளைப் பயில வேண்டுமென்ற அவா நம் பெண்மக்களுக்கு இருப்பதைப் பற்றி எவரும் மகிழ்ச்சியே கொள்வர். ஆனால் தாய்மொழியை மறந்து, பாலியத்தில் மழலைச் சொற்களால் பெற்றோரை மகிழ்வித்தது எந்த மொழியோ அந்த அருமையான மொழிகளில் புலமை பெற விரும்புதல் அழகுடைத்தன்று என்றே நான் கூறுகிறேன். ஆகலின் ஆங்கில மொழியில் தற்காலத்து ஆண்மக்களுக்கிருக்கும் மயக்கத்தைப் பெண்மக்களும் கொள்ளாதிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். தன் தாய்மொழியை மறக்கும் பெண்மணி, தனது தாய்த் திரு நாட்டை மறந்தவளாகிறாள்; தனது மதத்தை மறந்தவளாகிறாள். இங்ஙனம் தனது பாஷையை, நாட்டை, மதத்தை மறந்த பெண்மணி அந்நிய மொழியினரால், அந்நிய நாட்டினரால், அந்நிய மதத்தினரால், சரிசமானவளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறாளோ? இல்லை. ஆகலின் ஒவ்வொரு பெண் பள்ளிக்கூடத்திலும் தாய் மொழியை முதற் பாடமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும்; அம்மொழியில் சிறந்த புலமை உண்டு பண்ண வேண்டும்.

ஃ ஃ ஃ

இந்திய தேச சரித்திரமே எல்லாவற்றிலும் மிகமுக்கியமானது. இதைச் சரியான முறையில் கற்றுக் கொடுப்பதனாலேயே பெண் மக்களின் பிற்கால வாழ்வு பயனடைகிறது. சிறந்த புத்திரர்களைப் பெறுவதற்கும் தேச சரித்திரமே காரணமாயிருக்கிறது. அலெக்ஸாந்தரிடத்தில் தோல்வியுற்ற போரஸ் கடைசியில் காட்டிய வீரமும், அசோகனுடைய கருணையும், மீராபாயின் பக்தியும், பத்மினி தேவி தன் கற்பைக் காத்துக் கொண்டதும், சிவாஜியின் ஆண்டகைமையும், அவனுடைய தாயின் நேசபாவமும், மங்கம்மாளின் தரும உணர்ச்சியும் எந்தப் பெண்மணியின் மனதைத் தான் உருக்கி விடாது? இவர்களுடைய சரித்திரங்களைப் படித்த பெண் குழந்தைகளுக்குத் தாங்கள் அத்தகைய தாய்மார்களாவும் விளங்க வேண்டுமென்ற விருப்பம் உண்டாகாதா! புராணங்களிலும் இதிகாசங்களிலும் உள்ள பத்தினிப் பெண்டிர்களின் சரிதத்தையும், வீரர்கள், கொடையாளிகள் முதலியவர்களுடைய சரிதத்தையும் பெண்களுக்குப் போதிக்க வேண்டும். இந்தியாவின் இயற்கை வளப்பத்தையும், வற்றாத நதிகளின் பெருக்கத்தையும், சிறந்த முனிவர்களையும் உயர்ந்த மூலிகைகளையும் தமது இருப்பிடமாகக் கொண்ட மலைகளின் உயரத்தையும் பெண் மக்களுக்குப் போதிக்க வேண்டும். இந்தியாவின் அழகிய மலைகளை, ஆறுகளை, வனங்களை, கோபுரங்களை, கோயில்களைப் பிற்காலத்தில் சென்று பார்க்கும்படியான ஓர் ஆவலைப் பெண் மக்களுக்குக் கிளப்பி விட வேண்டும். இப்பொழுதுள்ள பெண் பள்ளிக்கூடங்களில் சரித்திரம் சரியாகப் போதிக்கப்படுவதில்லை. சிவாஜியை மலையெலி என்

றும் கொள்ளைக்காரனென்றும் கூறும் சரித்திர புத்தகங்களை நம் பெண் மக்கள் படித்தால் என்ன பயன் உண்டாகும்? தேச சரித்திரத்தைப் படிப்பதனால் பெண் மக்களுக்குத் தேசாபிமான உணர்ச்சி உண்டாதல் வேண்டும். பண்டைக்காலத்தில் இவ்வளவு பெருமை யடைந்திருந்த இந்தத் தேசம் இப்பொழுது இவ்வளவு சீர்குலைந்து போயிருக்கிறதே என்ற உணர்ச்சி அவர்களுக்கு வர வேண்டும். சீர்குலைந்து போயுள்ள நமது நாட்டைப்பண்டை நிலைக்குக்கொண்டு வர வேண்டாமோ என அவர்கள் எழுச்சி கொள்ள வேண்டும். இத்தகைய வழியில் இந்து தேச சரித்திரம் கற்பிக்கப் படல் வேண்டும்.

ஃ ஃ ஃ

ஓவியம், சிற்பம், நூல் நூற்றல், தையல், சித்திரித்தல் முதலிய துறைகளிலும் பெண்கள் இறங்கும்படி செய்ய வேண்டும். இறந்து போயிருக்கும் ஓவியத்தையும், சிற்பத்தையும் நமது பெண் மக்கள் மூலமாக உயிர்ப்பிக்க வேண்டும். ஓவியத்தில் பெண்களுக்கு இயற்கை யாகவே ஓர் ஆர்வம் உண்டு. ஆதலின் இந்தப் பாடங்கள் அவர்களுக்கு மிகவும் இன்பம் தரத்தக்கனவா யிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தக்கலைகள் யாவும் இந்திய முறையையே அநுஷ்டிப்பனவாக இருக்க வேண்டும். குடும்பச் சிக்கனம், குடும்பப் பாதுகாப்பு, நோய் வராது பாதுகாத்தல் முதலியன யாவும் பெண்களுக்குக் கற்பிக்க வேண்டுவது அவசியமாகும். அரசியல் விவகாரங்களையும் அவர்களுக்குச் சிறிது சிறிதாகப் புகட்டி வர வேண்டும் என்பது என் அபிப்பிராயம். பண்டைக் காலத்தில் எந்த விதமான ஆட்சி முறை நடைபெற்றது, இடைக் காலத்தில் எந்தவிதமான ஆட்சி முறை நடைபெற்றது, இப்பொழுது எந்த விதமான ஆட்சி முறை நடைபெறுகிறது, இவ்வாட்சி முறைகளுக்குள் ஒற்றுமை வேற்றுமைகள் யாவை முதலியன யாவும் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பயிற்சியினாலேயே அவர்கள் பிற் காலத்தில் நாட்டிற்கு நன்மை செய்யும் இயக்கங்களோடு ஒத்துழைக்க முடியும்.

ஃ ஃ ஃ

பொதுவாகக் கூறுமிடத்து, தேச முன்னேற்றத்திற்குக் கருவிகளாய் பெண்மக்கள் இருப்பதற்குக் காரணமாய கல்வியே அவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கூறலாம். இப்பொழுது இந்தியாவில், தாய்நாட்டின் பொருட்டு உழைக்க வீரத் தாய்மார்கள் வேண்டும்; கற்புக்கரசிகள் வேண்டும்; இல்லொளிகள் வேண்டும்; பத்தினிக் கடவுளர்கள் வேண்டும்; கண்ணகிகள் வேண்டும்; பல சாவித்திரிகள் வேண்டும்; பல சாந்த்பீபிகள் வேண்டும்; பல சுல்தானா ரஜீயாக்கள் வேண்டும். இத்தகையோரை உண்டாக்கும் கல்வியே இப்பொழுது வேண்டும். தென்னாட்டிலுள்ள தாய்மார்கள் இதற்காக முன் வருவார்களா? தங்கள் நாட்டின் மானத்தைக் காப்பாற்ற விரும்பும் பெண்மக்கள் வெளிவருவார்களா?

அமெரிக்கா, ஏன் தனது ஆயுத பலத்தைப் பெருக்குகிறது?

—"யமுனா"

சாதாரணமாக, யுத்தம் வருமென்றால் அஃது ஐரோப்பாவிலே தான் வருமென்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்க, அமெரிக்கா தற்போழ்து ஏன் தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்கிறது? இந்த விஷயம் அநேகருக்கு ஒரு புதிர் மாதிரி இருக்கிறது. இதை விளக்குவதே இந்தக கட்டுரையின் நோக்கம்.

சமீபத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் 'அமெரிக்காவின் ஆயுத பலத்தை விருத்தி செய்யப் போவதாகக் கூறினார். அப்பொழுது, உலக ராஜ தந்திரிகள், அமெரிக்காவுக்குத் திடீரென்று இந்த யோசனை பிறப்பானேன் என்று பிரமித்துப் போனார்கள். ஆனால் யாருக்கும் காரணம் பலனாகவில்லை. அமெரிக்காவில் இப்பொழுது 2,320 ஆகாய யுத்த விமானங்கள் இருக்கின்றன. இவை இப்பொழுது 7,000 ஆக விருத்தி செய்யப்படும். ராணுவத்தில் 178.000 பேர் இருக்கிறார்கள் இனி 100,000 பேராக உயர்த்தப் படுவாாகள். இது தவிர ரிசர்வ் பட்டாளங்கள் வேறு தயாரிக்கப் படுகின்றன. ஒவ்வொன்றும் முப்பத்தையாயிரம் டன் நிறையுள்ள ஆறு பெரிய யுத்தக் கப்பல்கள் தயாரிககப்படுகின்றன. இந்த ஆறு கப்பல்களுக்காக மட்டும் 90,000,000 பவுன் செலவழிக்கப்படுகிறது. இவை தவிர சிறிய கப்பல்கள் வேறே தயாரிக்கப் படுகின்றன. மற்றும், சமாதான காலங்களில் சாதாரணமான இயந்திரப் பொருள்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் கைத்தொழிற் சாலைகள், அவசியமானால் யுத்தக் கருவிகளைத் தயாரித்துக் கொடுக்குமாறு சீர் திருத்தி, யமைக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் இந்த ஆயுதப் பெருக்கத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, ஜப்பான், சீனா மீது படையெடுத்திருப்பது. சீன—ஜப்பானிய யுத்தத்தில், தான் வெற்றி கொண்டால் சீனாவிலுள்ள வியாபாரமெல்லாம் தனக்கே சேர வேண்டுமென்று ஜப்பான் கூறிக் கொண்டிருக்கிறது. இதற்கு முன் ஜாக்கிரதையாகவே, அமெரிக்கா தன் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

மற்றொரு காரண மென்ன வென்றால், தென்னமெரிக்காவில் ஜெர்மனியின் நாஜி இயக்கமானது, தனது வலையை மெது மெதுவாக விரித்துக் கொண்டிருக்கிறது. தென்னமெரிக்காவிலுள்ள பெரும்பாலான குடியரசு நாடுகளில், அமெரிக்கர்களை விட ஜெர்மானியர்களே அதிகமாயிருக்கிறார்களென்று சொன்னால் அது

பலருக்கும் ஆச்சரியமா யிருக்கும். இந்த ஜெர்மானியர்கள், தாங்கள் எந்த நாட்டிலே ஸ்திரமாகக் குடியேறி விட்டார்களோ அந்த நாட்டின் நாகரிகப் போக்கோடு இணைந்து போக மறுக்கிறார்கள். தங்களுடைய தாய் நாடாகிய ஜெர்மனியின் நாகரீகத்தையும், அதன் பழக்க வழக்கங்களையுமே பின்பற்றுகிறார்கள். சிறப்பாக ஜெர்மனியில் ஹிட்லர் ஆதிக்கத்திற்கு வந்த பிறகு, இந்த அமெரிக்க—ஜெர்மானியர்களுடைய தேசியப் பற்று மிக விநோதமான முறையில் வளர்ந்து வருகிறது.

தென்னமெரிக்காவின் பொருளாதார வாழ்க்கையின் பிடிப்பு, இந்த ஜெர்மானியர்கள் கையில் இருக்கிறது. சங்கீத சாலைகள், இரும்பு வியாபாரம், அச்சுத் தொழில் முதலியன வெல்லாம் இந்த ஜெர்மானியர்கள் வசமே இருக்கிறது. விவசாயக் கருவிகள், மின்சார சாமான்கள், ரஸாயனப் பொருள்கள், வர்ணச் சாமான்கள் முதலியன விற்போர் பெரும்பாலும் ஜெர்மானியர்களே. ஜெர்மனியிலே தயார் செய்யப்பட்ட ஒபல் (Opel) மோட்டார் வண்டிதான், மற்றெல்லா மோட்டார் வண்டிகளுக்கும் போட்டியாக இருந்து அதிகமாக விற்பனை யாகின்றன.

சில்லி என்ற நாட்டிலுள்ள எருக்கள் தயாரிக்கும் கம்பெனி, க்ரூப் ஆயுதத் தொழிற்சாலை, அர்ஜண்டைன் மாகாணத்திலுள்ள எண்ணெய் உற்பத்தி சாலை, ப்ரேஜில் மாகாணத்தில் உலகச் செய்திகளைப் பரப்பும் தொழில் முதலியன யாவும் ஜெர்மானியர் வசமே இருக்கின்றன. இந்தச் செய்தி ஸ்தாபனத்திலிருந்து அன்றாடம் உலகத்துச் செய்திகள் ரேடியோ மூலம் பரப்பப் படுகின்றன. இவை பிரெஞ்சு பாஷையிலும் ஜெர்மன் பாஷையிலும் மாறி மாறி பரப்பப்படுகின்றன. அமெரிக்காவானது, யூதர்களின் ஆதிக்கத்தில் இருக்கின்ற தென்றும், இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா முதலிய நாடுகள் தவறான வழியில் நடக்கின்றனவென்றும் ரேடியோ மூலம் பல காரணங்கள் காட்டிக் கூறப்படுகின்றன. இதே சமயத்தில் இத்தலி, ஜெர்மனி முதலிய நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை எவ்வளவு தூரம் உயர்த்திக் கூற முடியுமோ அவ்வளவு தூரம் உயர்த்திக் கூறப்படுகிறது. யூதர்களுக்கு விரோதமான பிரசுரங்கள் ஏராளமாக வழங்கப்படுகின்றன. பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கும் ஜெர்மானிய வியாபாரிகள், யூதர்களுக்கு விரோதமான கட்டுரைகளைப் பிரசுரிக்குமாறு வற்புறுத்துகிறார்கள். தவிர, ஜெர்மனியில் தயாரிக்கப் பட்ட ரேடியோ செட்டுகள் மிகவும் மலிவான விலையில் விற்கப் படுகின்றன. நாஜீயத்தைப் பாராட்டி சில சினிமாக்கள் காண்பிக்கப்படுகின்றன.

இங்ஙனம் பொருளாதாரத் துறையிலும் பிரசாரத் துறையிலும் மட்டும் ஜெர்மனி தனது ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கவில்லை. சமீபத்தில் ப்ரேஜில் நாட்டின் தூதர், பெர்லின் நகரத்திலிருந்து விலக்கப்பட்டார் என்றால் ஹிட்லரின் நோக்கம் நன்கு புலனாகவில்லையா? இந்தத் தூதர், ப்ரேஜிலிலிருந்த நாஜி கட்சிக்கு விரோதமானவர் என்பதுதான் இதற்குக் காரணம்.

ஜெர்மனிக்கு தென்னமெரிக்காவிலிருந்து ஏராளமான மூலப் பொருள்

ஆன்ம சக்தி

—ஸர். ராதாகிருஷ்ணன்

தற்போது ஐரோப்பாவிலே ஏற்பட்டிருக்கிற அமைதி அபாயகரமான அமைதி; பொய்யான அமைதி. எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு நாடும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஏராளமாகத் தனது ஆயுதபலத்தைப் பெருக்கிக் கொண்டு வருகிறது. ஏன்? தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காம்! இந்தியாவில், யாரோ வேற்று நாட்டார் ஆள்கின்றனர். ஜனங்களோ, அமைதியாக இருந்து கொண்டு, எல்லாம் கடவுள் செயல் என்ற மனப் பான்மையுடன் அன்றாட ஜீவனோபாயத்திற்கு வழி தேடிக் கொண்டிருப்பதிலேயே தங்கள் வாழ் நாட்களைக் கழிக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் அமைதியான ஒரு 'புரட்சி' ஏற்பட்டு வருகிறது. பலவித இயக்கங்கள் தோன்றி நடைபெறுகின்றன. ஆனால் எல்லாம் ஒரே லட்சியத்திலேயே பிரதிபலிக்கின்றன. இந்தியாவில் அநேகவித மாற்றங்கள் வெகு விரைவாக நடைபெறுவதை நீங்கள் பார்க்கலாம். ஜனங்களின் மனப்போக்கே வர வர மாறிக் கொண்டு வருகிறது. மதுவிலக்கு இயக்கமென்ன, ஆலயப் பிரவேச இயக்கமென்ன, கைத்தொழில் அபிவிருத்தி இயக்கமென்ன, இங்ஙனமாகப் பலவித இயக்கங்கள் தோன்றி நடைபெறுகின்றன.

உலகத்தினின்று இந்தியாவைப் பிரிக்க முடியாதென்பது இந்திய தேசிய காங்கிரஸின் கருத்து. இதனாலேயே, அது தேசிய கைத்தொழிற்கள் தேவையாயிருக்கிறது. இதனாலேயே இந்தப் பிரதேசத்தில் பொருளாதார ஆதிக்கத்தை, தான் அடைய வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறது. இந்த ஆதிக்கத்தைத் தன்னால் பூரணமாகச் செலுத்த முடியவில்லையென்றால், ஸ்பெயினைப் போல் உள் நாட்டுக் குழப்பத்தை உண்டு பண்ணி விடுவதில் ஜெர்மனிக்கு அதிக ஆவல். கீழ் ஐரோப்பிய நாடுகளில் ஜெர்மனியானது முதலில் பொருளாதார ஆதிக்கத்தை நிலைநிறுத்தி, பிறகு ராணுவ ஆதிக்கத்தைப் பெற்று வருவதைப் போல் தென்னமெரிக்காவிலும் செய்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்கா என்ன செய்வது? ஜெர்மனி போல், முதலில் பொருளாதார ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்டு, பிறகு ராணுவ ஆதிக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், தனக்கு வேண்டிய மூலப் பொருள்களில் பெரும்பாலனவற்றை அது இந்தத் தென்னமெரிக்கப் பிரதேசங்களிலிருந்து தான் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஜெர்மனியோடு இஃது உரத்த குரலில் வாதாடிப்பார்க்கலாம். அப்படி முடியாவிட்டால், தடி எடுத்துக்கொண்டு ஒரு கை பார்த்து விட வேண்டியது தானே. இதற்காகவே, அமெரிக்கா தற்போது தனது ராணுவ பலத்தை விருத்தி செய்து கொண்டு வருகிறது.

திட்டத்தை அதி சுறு சுறுப்பாக நடத்திக் காட்ட முன் வந்தது. இந்தத் திட்டத்தைப் பற்றிக் காந்தியடிகள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்தியாவின் தலைமைப் பதவி, காந்தியடிகளின் கையிலே இருக்கிற வரை, இந்தியாவின் ஆன்ம பலம் எவ்வாற்றானும் குறைவுபடாதென்பது எனக்குத் தெரியும். கடவுளின் பிரதிநிதியாக இருக்கப் பட்டவன் மனிதன். இந்தியாவில் மனிதன் எப்படி வாழ வேண்டுமென்பதை ஜனங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதனாலேயே, இந்தியாவில் தோன்றும் ஒவ்வோர் இயக்கத்திற்கும் ஆன்ம சக்தியே அடிப்படையாக இருக்கிறது. எந்த நாகரிகமானது, பலாத்காரம், படை யெடுப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறதோ அந்த நாகரிகம் நீடித்து வாழாதென்பது என்னுடைய அபிப்பிராயம். சீனாவிலும் இந்தியாவிலும் நூற்றாண்டுகள் கணக்காகக் கொடுங் கோன்மையும் யுத்தங்களும் நடைபெற்று வருகின்றன. ஆயினும் இந்த இரண்டு நாடுகளும் ஆன்ம சக்தி யுடையவை. இவை அழியா வண்ணம், ஏதோ ஒரு சக்தி தான் இந்தியா முழுவதும் பரவியிருக்கிறது. இந்தியாவில் தற்போதைய புதிய சக்தியாயும் நிரந்தர சக்தியாயும் இருக்கப்பட்டவர் மகாத்மா காந்தி. அவர் ஜீவிய தசையிலிருக்கிற வரை இந்தியாவுக்கு எவ்வித ஆபத்துமில்லை. மஹாத்மா காந்தி உங்களை என்ன கேட்கிறார்? நீங்கள், நீங்களாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார். உங்களுடைய கவனங்களை வேறு வழிகளில் இழுத்துச் செல்லக் கூடியவற்றினின்று உங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்படி கூறுகிறார்.

ஜன நாயகம், ஜன நாயகம் என்று கூறுகிறார்கள் ஜன நாயகம் என்றால் என்ன? சுமார் பத்து வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் பொது வேலை நிறுத்தம் நடை பெற்ற தல்லவா! அப்பொழுது நான் இருந்திருக்கிறேன். அதன் பிறகு 1931ம் வருஷம் தொழிற் கட்சி அரசாங்கம் வீழ்ந்து பட்டது. எட்டாவது எட்வர்ட் மன்னர் முடி துறந்தார். சமீபத்தில் ம்யூனிக் ஒப்பந்தம் நடைபெற்றது. பார்லிமெண்டினால் நிர்ணயிக்கப் பட்ட இந்த விஷயங்களெல்லாம், பொதுஜன வாக்குகள் எடுத்த பின்னரே இவை சம்பந்தமான ஒரு முடிவு கட்டப் பட்டனவா? சிறந்த ஒரு தலைவன் இருக்கிறவரையில், ஜன நாயகம் வெற்றிகரமாக நடைபெறும். அதிருஷ்ட வசமாய் இந்தியாவில் சரியான தலைவர் இருக்கிறார். நான் மகாத்மா காந்தியைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

இந்தியர்களாகிய நாம் எப்பொழுதோ, சிந்தனை செய்வதை விட்டு விட்டோம். நாம் வாழ்வது உண்மையான வாழ்வா யிருந்தால், நாம் சிந்தனை செய்ய வேண்டும். அப்படி செய்வதனால் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும். இது தான் மதத்தின் தத்துவம். வாழ்க்கையானது, தனிப்பட்ட மனிதனிட மிருந்து ஆரம்பித்து தனிப்பட்ட மனிதனோடு முடிகிறது. ஆகையால் உங்களுக்கு நான் கூறுவதெல்லாம் நீங்கள் நீங்களா யிருங்கள் என்பது தான். (பிரசங்கம்)

அந்நிய நாட்டுத் தூதர்களின் அந்தஸ்து.

—இ. டி.

ஒவ்வொரு வல்லரசுக்கும், முக்கியமான நாடுகளில் ஸ்தானீகர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய பொறுப்புக்கும், அந்தஸ்துக்கும் எந்த நாட்டிற்கென்று நியமிக்கப்படுகிறார்களோ அந்த நாட்டின் நிலைமைக்கும் தகுந்தபடி இவர்கள் 'அம்பாஸடர்கள்' (Ambassador) என்றும் 'கான்ஸல்' (Consul) என்றும் 'என்வாய்' (Envoy) என்றும் பல விதமாக அழைக்கப்படுகிறார்கள். இந்தத் தூதர்களின் பதவியை வகிப்பவர்கள் மிகவும் கண்ணியமானவர்களாகவும், சிறந்த ராஜதந்திரிகளாகவும், உலக அநுபவம் நிரம்பப்பெற்றவர்களாகவும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் இந்தப் பதவிகளுக்கு நியமிப்பது வழக்கம்.

சாதாரணமாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பொறுத்த மட்டில் பாரிஸ் நகரில் இருக்கும் தூதருக்குத்தான் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள தூதருக்கும் இதே சிறப்புண்டு. சாதாரணமாக இந்தத் தூதர்களுக்கு வருஷச் சம்பளம் 2,500 பவுன் தான். இதற்கு மேல் அவர்களுக்குச் சம்பளம் இல்லையென்று சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விருந்தினரை உபசரித்தல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியென்ற முறையில் எவ்வளவு கௌரவமாக நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு கௌரவமாக நடந்து கொள்ளுதல் முதலிய செலவு வகைகளுக்காக 'அலவன்ஸ்' என்றபடிச் செலவு கொடுக்கப்படுகிறது. இது சம்பளத்தைவிட நான்கு மடங்கு அதிகமாயிருக்கும். உதாரணமாக இப்பொழுது பாரிஸ் நகரத்தில் பிரிட்டிஷ் தூதராயிருக்கும் ஸர் எரிக் பெப்ஸ் என்பவருக்கு 2,375 பவுன் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் 'அலவன்ஸா'க 12,220 பவுன் கொடுக்கப்படுகிறது. இந்தப் பணம் யாவும் செலவழிந்து, சில சமயங்களில் அந்தத் தூதர் தமது கைப்பணத்தைப் போட்டும் செலவழிக்க வேண்டியிருக்கும். லண்டன் நகர சபைத் தலைமைப் பதவியும் இப்படித்தான். எனவே, இந்த மாதிரியான பதவிகளை பணக்காரர்கள்தான் ஏற்றுக் கொள்ள முடியும்.

இந்த 'அலவன்ஸ்' தொகையானது அந்தந்த நாட்டுத் தூதர்களின் தேவைக்குத் தகுந்தபடி நிர்ணயிக்கப்

படுகிறது. உதாரணமாக, அமெரிக்காவில் தற்போது தூதரா யிருக்கப் பட்ட ஸர் ரோனுல்ட் லிண்ட்ஸே 'அலவன்ஸா'க 13,100' பவுன் பெறுகிருர். ஜெர்மனியிலிருக்கும் பிரிட்டிஷ் தூதரான ஸர் நெவில்லி ஹெண்டர்ஸன், "அலவன்ஸாக' 5,725 பவுன் தான் பெறுகிருர். ரோமாபுரி தூதரான லார்ட் பெர்த்துக்கு இதே 'அலவன்ஸ்' தான். துருக்கியில் தூதரா யிருக்கும் ஸர் பெர்ஸி லோரேயின் 4,385 பவுனும், போலந்து தூதரான ஸர் ஹோவார்ட் கென்ஞர்ட் என்பவர் 3,385 பவுனும் படிச் செலவாகக் கொடுக்கப்படுகிருர்கள்.

இந்தத் தூதர்கள், பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி கூப்பிடுங் குரலுக்கு டெலிபோன் மூலமோ தந்தி மூலமோ ஏன் என்று கேட்க வேண்டிய தவசியமாஞலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அன்ருட நிலையை நிர்ணயித்துக் காட்டும் பொறுப்பு இவர்களுக்கும் உண்டு. இவர்கள் தங்கள் பிரிட்டிஷ் காரியாலயத்திற்கும் தாங்கள் எந்த நாட்டில் தூதர்களாயிருக்கிருர்களோ அந்த நாட்டின் அரசாங்கத்திற்கும் நல்லவர்களா யிருக்க வேண்டும். இவர்கள் நடந்து கொள்கிற மாதிரியிலேதான், இரண்டு நாடுகளும் சமாதான முறையிலே வாழ்வதும் யுத்தத்திற்காக மார்தட்டி நிற்பதும் இருக்கிறது. எந்த நாட்டிலும் தூதர்களுக்கு முக்கிய ஸ்தானம் உண்டு.

தூதர்கள், கைது செய்யப்படுவதற்குப் புறம்பானவர்கள். தூதர்களின் காரியாலயத்தில், அந்த நாட்டுப் போலீஸார் உத்திரவின்றிப் பிரவேசிக்க முடியாது. அப்படி அத்து மீறிப் பிரவேசித்தால் அந்தத் தூதருடைய நாட்டின் மீது படையெடுத்த குற்றத்திற்கொப்பாகும்.

தூதர்களுக்கு வருஷத்தில் 60 நாள் ரஜா உண்டு. ஆனுல் தற்போதுள்ள தூதர்கள், தங்கள் ரஜா நாட்களை அதிகமாக உபயோகித்துக் கொள்வதில்லை.

தூதர்கள் நியமனம் ஆகும் போது இவர்களுடைய சாமான் செலவுக்கென்று 600 பவுன் கொடுக்கப்படுகிறது. வேருேர் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டால், நூறு பவுன் படிச் செலவாகக் கொடுக்கப்படுகிறது.

பொதுவாகச் சொல்லுமிடத்து, தூதர்களின் பதவி கௌரவமான பதவி; ஆனுல் மிகவும் பொறுப்புள்ள பதவியென்றுதான் கொள்ள வேண்டும்.

ஸ்பெயினில் தற்போதைய ராணுவ பலம்.

பெயர்	குடியரசு அரசாங்கத்திற்கு	பிராங்கோ கட்சிக்கு
துருப்புகள்	120,000	250,000
பீரங்கிகள்	300	3,000
டாங்குகள்	50	500
ஆகாய விமானங்கள்	50	800

முயற்சியைக் கைவிடாதே

—வ. பார்த்தசாரதி

குழந்தாய்! இரண்டு மாத காலமாகிறது உன்னைச் சந்தித்து. ஆமாம்; இதுவரை தின்றதை நீ ஜீரணிக்க வேண்டாமா? அதனால்தான் நானும் சும்மாயிருந்தேன்.

'சொல்லாதே, செய்' என்று சொன்னேன். செய்வதிலே கூட ஒழுங்கு வேண்டும்; அதில் உன்னுடைய சொந்த முயற்சி, சொந்த உழைப்பு கலந்திருக்க வேண்டும். பிறர் செய்வதிலே திருப்தியடைந்து, அதனையே நீ செய்ததாகக் கொண்டு விட்டாயானால் அது பெரிய ஆபத்தல்லவா? உன்னிடத்திலே பிறருக்கு எப்படி மதிப்பு இருக்கும்? உன்னிடத்தில் செல்வம் இருக்கலாம்; அழகு இருக்கலாம்; பெரிய அந்தஸ்து உனக்கு ஏற்பட்டிருக்கலாம். அவைகளுக்காக வேண்டுமானால் யாரேனும் உன்னெதிரே பல்லை இளித்துக் கொண்டு மரியாதை காட்டுவதாக நடிக்கலாமே தவிர, மனப்பூர்வமாக உன்னிடத்தில் யாரும் மதிப்பு வைகக மாட்டார்கள். உன்னுடைய முயற்சியிலே, உன்னுடைய திறமையிலேதான் நீ வாழ வேண்டுமே தவிர, மற்றவற்றைக் கொண்டு மட்டும் இந்த உல்கத்திலே வாழ்கிறாயென்று நீ கருதுவது வெறும் போலித்தனந்தான்.

நீ செய்கிற செயல்களிலே, எத்தனையோ இடையூறுகள் ஏற்படலாம்; நேற்றுவரை உன்னிடம் பரம விசுவாசத்துடன் நடந்து கொண்டு வந்தவர்கள் இன்று போர் முகத்துச் சத்துருக்கள் மாதிரி ஆகிவிடலாம். உன் குடும்பத்திலே, நீ எதிர்பாராத சங்கடங்களெல்லாம் எதிர்படலாம். ஆனாலும் நீ மனச் சோர்வு கொள்ளாதே. உன் காரியந்தான் உனக்குப் பிரதானம். நீ எண்ணியிருக்கிற லட்சியத்தை யடைந்து விட்டாயானால், அப்படி லட்சியத்தை யடைந்து விட்டோம் என்ற திருப்தியொன்றே நீ அநுபவித்த பழைய கஷ்டங்களெல்லாம் தாமாக மறைந்து போகும்படிச் செய்யும். மலையேறிச் செல்கிறாய். கால்வலிக்கிறது. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறது. ஆயினும் கீழே இறங்கி விடுகிறாயா? இல்லையே. எப்படியாவது சிரமப்பட்டு மேலேறி உச்சியடைந்து விடுகிறாய். சிகரத்திலே நீ நுகர்கிற காற்று இவை யெல்லாம் சேர்ந்து மலையேறி வந்த சிரமத்தை ஏறி நின்ற பிறகு, நீ காண்கிற காட்சி, யெல்லாம் மறக்கச் செய்கின்றனவல்லவா?

அப்படி மலையுச்சி யடைந்த பிறகு கூட உனக்குத் தங்க நிழலோ, சுழற்றியடிக்கும் காற்றினின்றும் காத்துக் கொள்ள ஒரு சாண் துணியோ, வயிற்றுப் பசிக்கு ஒரு பிடிச் சோருே கிடைக்காமல் போகலாம். அப்படியே மரண மடைந்தும் போகலாம். ஆனாலும் அந்த மரணம், வெற்றி கொண்ட வீரன் போர்க்களத்தில் மல்லாந்து படுத்து உயிர் விடுவது போலத்தான்.

இதைச் சொல்லிக் கொண்டு வருகிறபோது கொலம்பஸின் சரித்திரம் ஞாபகத்திற்கு வருகிறது. கொலம்பஸ் என்பவன் யார் தெரியுமல்லவா? அமெரிக்காவைக் கண்டு பிடித்தவன். இவன் காலத்திலே உலகத்தைப் பற்றி விநோதமான அபிப்பிராயங்கள் இருந்தன. அந்தக் காலத்தில், உலகம் தட்டையா யிருக்கிற தென்று தான் அறிஞர்கள் கருதி வந்தார்கள். இவனே உலகம் உருண்டையா யிருக்கிற தென்று சொன்னான். இதனை யாராவது நம்புவார்களா? அதுவும் கம்பளி நூல் திரித்து வயிறு பிழைக்கிற ஓர் ஏழை யினுடைய மகன் வார்த்தையை.

உலகம் உருண்டையா யிருக்கிற தென்றும், இன்னும் பல நிலப் பிரதேசங்கள் நமது கட்புலனுக்கு எட்டாமல் இருக்கின்றன வென்றும், அவற்றைத் தாம் கண்டுபிடித்து வருவதாகவும் கூறினான். இதற்காக இவன், ஜீனேவா, ஸ்பெயின், போர்த்துகல், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய பல நாட்டு மன்னர்களுடைய ஆதரவை நாடினான். ஆனால் இவனுக்கு யாருமே ஆதரவு கொடுத்துப் பேசவில்லை. எல்லோரும் அவனைப் பரிகசித்தார்கள். கடைசியில் ஸ்பெயின் தேசத்து இஸபெல்லா அரசி இவனுக்கு ஆதரவு காட்டினாள். தன் சொந்தச் செலவில் மூன்று கப்பல்களைத் தயாரித்து, அதற்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்தாள். பின்னர் 1492ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3ந் தேதி பாலோஸ் துறை முகத்திலிருந்து புறப்பட்டான். இதுகாறும் அறிஞர்கள் என்று கருதப்பட்டவர்களுடைய அறியாமை யோடு போராடினான். இனி, தன்னோடு கூட வந்த மாலுமிகளின் அறியாமை யோடு போராட வேண்டியதாயிற்று. சமுத்திரத்திலே சென்று ஒரு வாரமாயிற்று; பத்து நாளாயிற்று. எங்கும் கரையைக் காணோம். மாலுமிகள் கலகஞ் செய்ய ஆரம்பித்தார்கள். வேறு பல தொந்திரவுகளையும் கொடுத்தார்கள். ஆயினும் கொலம்பஸ் இவற்றை யெல்லாம் சமாளித்து வந்தான். கடைசியில் எழுபது நாள் பிரயாணத்திற்குப் பிறகு ஸான் ஸால்வா டோர் (San Salvador) என்ற தீவில் இறங்கினான். இதன்பிறகு க்யூபா, ஹிஸபானோலியா முதலிய பிரதேசங்களைக் கண்டு பிடித்தான். இவையாவும் ஸ்பெயினைச் சேர்ந்தவை யென்று, ஸ்பானிஷ் கொடியை நாட்டி, அங்குச் சில மாலுமிகளை நிறுத்தி விட்டு, மீண்டும் ஸ்பெயினுக்கு வந்து சேர்ந்தான்.

மறுபடியும் இரண்டாவது முறை பெரிய கப்பல் படையுடனும் 1200 பேருடனும் புறப்பட்டான். இதில் பணக்காரர்களும் சேர்ந்தனர். ஏன் தெரியுமா? பொன்னாசை! புதிதாகக் கண்டு பிடிக்கிற நாடுகளில் பொன் அகப்படு மென்றும், அதைத் தாங்களும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டு மென்றும் இவர்களுக்கு

ஆசை. இந்த இரண்டாவது முறை குவாடாலூப், ஜமைக்கா, ஸான் டாமிங்கோ முதலிய பிரதேசங்கள் கண்டு பிடிக்கப் பட்டன. ஆனால், இவனுடன் கூடச் சென்ற பணக்காரர்கள், அவர்கள் எதிர்பார்த்தபடி பொன் அகப்படவில்லை யாதலால் பிணக்குகள் உண்டாகி, ஒருவருக்கொருவர் சண்டை போட்டு மடிந்தனர். இதனால் கொலம்பஸ் திரும்பி வந்து விட வேண்டியதாயிற்று.

பின்னர், கொலம்பஸ் ஆறு பெரிய கப்பல்களுடன், அமெரிக்கா நோக்கி மூன்றாவது முறையாகப் புறப்பட்டான். இந்த மூன்றாவது முறை தான் அமெரிக்காவை இவன் கண்டு பிடித்தது. இந்தச் சமயத்தில் இவன் இன்னும் சில தீவுகளையும் கண்டுபிடித்தான். இதற்குள் ஸான் டாமிங்கோ தீவிலுள்ள ஸ்பானிஷ்காரர்களுக்கு விரோதமாக அந்த நாட்டுச் சுதேசிகள் கலகத்திற்குக் கிளம்பினார்கள். அவர்களை ஸ்பானிஷ்காரர்கள் மிகக் கொடுமையாக நடத்தி அடக்கினார்கள். ஆனால் ஸ்பானிஷ்காரர்களுக்குள்ளேயே உட் கலகங்கள் ஏராளமாக ஏற்பட்டு விட்டன. எனவே, கொலம்பஸ், ஸ்பெயின் மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதி அதில், ஸாண்டாமிங்கோ தீவுக்கென்று ஒரு ஜட்ஜையும் மாஜிஸ்டிரேட்டையும் அனுப்புமாறு தெரிவித்திருந்தான். அப்படியே போபாடில்லோ என்ற ஒருவன் அனுப்பப்பட்டான். இவன் கொடும் பாவி. இவன் வந்தவுடன், கொலம்பஸையும் அவன் இரண்டு சகோதரர்களையும் சிறையிலே அடைத்தான். இவர்களை விலங்கிட்டு ஸ்பெயினுக்கு அழைத்துப் போகுமாறு வில்லேகோ என்பவனுக்கு உத்திரவிட்டான். அப்படியே கையும் விலங்குமாகக் கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, வழியில் மேற்படி வில்லேகோ என்பவன், இவன் மீது கருணை பாராட்டி, 'விலங்குகளை எடுத்து விடுவதாகக் கூறினான். 'எடுக்க வேண்டாம். நான் என் தாய் நாட்டுக்குச் செய்த சேவைக்கு இவை சரியான சன்மானங்களல்லவா! இவற்றை யெப்பொழுதும் அழியாப் பொருளாக வைத்துக் கொண்டிருப்பேன்' என்றான் கொலம்பஸ்.

கொலம்பஸ் நடத்தப்பட்டதைக் கண்டு, ஸ்பெயின் தேசத்து அரச தம்பதிகள் வெட்கங் கொண்டு, கொலம்பஸுக்குப் போதிய 'சௌகரியங்களை அளிக்குமாறு கூறினார்கள். கொலம்பஸுக்கோ, கடல் யாத்திரை மோகம் இன்னும் விட்டபாடில்லை. எனவே, நான்காவது முறை, சில கப்பல்களுடன் புறப்பட்டான். இந்த யாத்திரையின் போது, சில புதிய பிரதேசங்களைக் கண்டுபிடித்து ஸ்பெயினுக்குச் சேர்த்துக் கொடுத்தான். கடைசியில் தன்னுடைய எழுபதாவது வயதில், தான் அருமையாக நேசித்து வந்த தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தான். இனியாவது தான் நிம்மதியாகக் காலங் கழிக்கலாமென்றும், தன் ஜீவனத்திற்கு அரசாங்கத்தார் ஏதேனும் ஏற்பாடு செய்வார்களென்றும் எதிர் பார்த்தான். ஆனால் யாரும் இவனைச் சிந்தவில்லை. பல முறை அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்து பார்த்தான். பலனில்லை. இருக்கக் குடிசையும், உண்ண உணவும் கூட இல்லாமற் போய் விட்டது ஒரு பிச்சைக்காரன் மாதிரி இருந்து 1506ம் வருஷம் மே மாதம் 20ந் தேதி இறந்து போனான்.

மகனே! பார்த்தாயா? ஸ்பெயினைப் பணக்கார தேசமாகக்கி, உலகத்திலே மற்ற வல்லரசுகளின் எதிரே அதற்கு மகத்தான ஒரு கௌரவ ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொடுத்தவனுடைய கதியைப் பார்த்தாயா? ஆனால் அவனுடைய புகழ் இன்றும் பிரகாசிக்கிறதல்லவா?

கொலம்பஸ், ஒரு முறையல்ல, நான்கு முறை, எத்தனையோ இடையூறுகளையும் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், தான் கொண்ட லட்சியத்தை நாடிச் சென்றான். அந்த முயற்சி உன்னிடத்திலே இருக்க வேண்டும். அப்பொழுது தான் உனக்கு வெற்றி கிடைக்கும். ஆனால் அதன் பலா பலன்களைப்பற்றி மட்டும் சிந்திக்காதே. அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பாயானால், உன் முயற்சியில் உனக்கு மனமே செல்லாது. இஃது அநுபவ உண்மை.

காங்கிரஸ் பிரஸிடெண்ட் தேர்தல்

ஓட்டு விவரங்கள்

மாகாணம்		ஸ்ரீ போஸ்	ஸ்ரீ பட்டாபி
பர்மா	....	8	6
தமிழ் நாடு	....	110	102
உத்கல்	....	44	99
கர்நாடகம்	....	106	41
சிந்து	....	13	21
அஜ்மீர்	....	20	6
மகா கோசலம்	....	67	68
விதர்ப்பம்	....	11	21
பாஞ்சாலம்	....	182	86
கூர்ஜரம்	....	5	100
கேரளம்	....	80	18
வங்காளம்	....	404	79
ஆந்திரம்	....	28	181
ஐக்கிய மாகாணம்	....	269	185
டில்லி	....	10	5
பீஹார்	....	70	197
அஸ்ஸாம்	....	34	22
பம்பாய் நகரம்	....	12	14
நாக்புரி	....	12	17
மஹாராஷ்டிரம்	....	77	86
எல்லைப்புறம்	....	13	22
மொத்தம்		1575	1376

ராஷ் பிஹாரி கோஷ்

ஜனனம்—1845

மரணம்—1921

—"ஒரு காங்கிரஸ் வாதி"

1907ம் வருஷத்தில் சூரத்தில் காங்கிரஸ் கூடியது. ஸ்ரீ ராஷ் பிஹாரி கோஷ் தலைமை வகித்தார். ஆனால் லோகமான்ய பால கங்காதர திலகருடைய தலைமையில் தீவிரக் கட்சியினர், காங்கிரஸில் கலந்து கொள்ளும் உரிமை மறுக்கப் பட்டது. இதனால் அந்தக் காங்கிரஸ் கூடாமலே கலைந்து விட்டது. பின்னர் 1908ம் வருஷம் டிசம்பர் மாதம் 28, 29 30ந் தேதிகளில் சென்னையில் ஸ்ரீ ராஷ் பிஹாரி கோஷ் தலைமையில் கூடியது. திவான் பகதூர் கே. கிருஷ்ணசாமி ராவ், உபசரணைக் கூட்டத் தலைவராக இருந்தார். இந்தக் காங்கிரஸுக்கு மொத்தம் 626 பிரதி நிதிகள் ஆஜராயிருந்தார்கள்.

ஸ்ரீ ராஷ் பிஹாரி கோஷ், வங்காள மாகாணத்திலுள்ள பர்த்வான் ஜில்லாவில் தோரே கோனு என்ற கிராமத்தில் 1845ம் வருஷம் டிசம்பர் மாதம் 23ந் தேதி பிறந்தார். இவருடைய தகப்பனார் பாபு ஜகத் பந்து கோஷின் மூத்த புதல்வர் இவர். இவருடைய ஆரம்பக் கல்வி பங்குராவில் நடைபெற்றது. பின்னர் 1860ம் வருஷத்தில் கல்கத்தா வந்து சேர்ந்து பிரவேசப் பரீட்சையில் தேறினார். இதற்குப் பிறகு 1861ம் வருஷம் கல்கத்தா பிரசிடென்ட்சி காலஜில் சேர்ந்து எப். ஏ. பி. ஏ எம். ஏ. முதலிய பரீட்சைகளில் முதல் வகுப்பிலேயே தேறினார். ஆங்கில பாஷையில் எம். ஏ. பரீட்சையில் முதலாவதாகத் தேறி அநேக கௌரவ பதக்கங்கள் பெற்ற பெருமை இவரைச் சேர்ந்தது. பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பரீட்சையில தேறி சில பதக்கங்களைப் பெற்றார். வக்கீல் தொழி

வில் இவருக்கு நல்ல கியாதி ஏற்பட்டதென்றால் அதில் என்ன வியப்பு இருக்கிறது?

சட்டங்களில் ஸ்ரீ கோஷ் மகா நிபுணர். ஹிந்து, முஸ்லீம், பிரிட்டிஷ் சட்டங்களை இவரைப் போல் நன்கு ஆராய்ச்சி செய்து வைத்திருந்தவர்கள் யாரும் கிடையாதென்று சொல்வர். 1875–76ம் வருஷங்களில் கல்கத்தா சர்வகலாசாலையினர், பாரத நாட்டின் சட்ட சம்பந்தமான விவகாரங்களைப்பற்றி சில சொற்பொழிவுகள் ஆற்றும்படி கேட்டுக் கொண்டனர். இதன்படி இவர் பன்னிரண்டு பிரசங்கங்கள் செய்து, பலரையும் வியக்கச் செய்தார். பிறகு, சட்ட மாணவர்களுக்கு என்னென்ன பாட புத்தகங்களை வைக்கலாமென்பதைப் பற்றி அரசாங்கத்தார் இவருடைய ஆலோசனைகளைக் கேட்கலாயினர். அப்பொழுது இந்தியா அரசாங்கத்தின் சட்ட அங்கத்தினராயிருந்த டாக்டர் ஸ்டோக்ஸ் என்பவர், இந்தியா சம்பந்தமான சில சட்ட புத்தகங்களைத் தயாரிக்கிற போது இவருடைய உதவியைப் பெரிதும் நாடினார். 1877ம் வருஷத்தில், கல்கத்தா சர்வகலாசாலையின் பி. எல். பரீட்சாதிகாரியாக இவர் நியமிக்கப் பட்டார். அடுத்த வருஷம், இவர் மேற்படி சர்வகலாசாலையின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 1884ம் வருஷத்தில் இவருக்குச் சட்ட நிபுணர் (Doctor of Law) என்ற பட்டம் கல்கத்தா சர்வ கலாசாலையினரால் வழங்கப்பட்டது. இதன் பின்னர் இவர் வங்காளச் சட்ட சபையில் சில காலமும், இந்தியா சட்ட சபையில் சிறிது காலமும் அங்கத்தினராயிருந்தார்.

இந்தக் காலங்களில் ஸ்ரீ கோஷ் பொது வாழ்வில் அதிகமாக ஈடுபட்டுக் கொள்ளவில்லை. ஆனால் சந்தர்ப்பம் கிடைத்த போது அதிலிருந்து பின்னடையவுமில்லை. வங்காளப் பிரிவினையை இவர் பலமாக எதிர்த்தார். சுதேசி கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். லார்ட் கர்ஸன், இந்தியர்களின் கண்ணியத்தைத் தாக்கிப்பேசிய பேச்சுக்களைக் கண்டிப்பதற்காக கல்கத்தாவில் 1905ம் வருஷம் மார்ச் மாதம் 10ந் தேதி ஒரு கூட்டம் கூடியது. அதற்கு இவரே தலைமை வகித்தார். இந்தியா சட்ட சபையில் இவர் அங்கத்தினராயிருந்த போது, இவர் பேசிய பேச்சுக்களைக் கேட்டு அரசாங்க அங்கத்தினர்கள் பிரமித்துப் போவார்கள். இவருடைய திறமையைப் பாராட்டி அரசாங்கத்தார் இவருக்கு சி. ஐ. இ. பட்டம் அளித்தனர்.

காங்கிரஸின் ஆரம்ப ... விருந்து இவர் அதில் சேர்ந்து பெரிதும் உழைத்திருக்கிறார். ஆரம்பத்திலிருந்தே இவர் அதன் பிரதிநிதியாக இருந்து வேலை செய்திருக்கிறார். இது தவிர, காங்கிரஸ் காரிய நிருவாகத்திலும் இவர் கலந்து கொண்டார். 1906ம் வருஷம் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் காங்கிரஸ் நடைபெற்றபோது, இவர் உபசரணைக் கூட்டத் தலைவராயிருந்தார். பின்னர் சென்னைக் காங்கிரஸில் தலைமை வகித்தார்.

தேசத்தின் கல்வியபிவிருத்தியில் இவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். இதற்காகத் தமது வருமானத்தில் பெரும் பாகத்தை நன்கொடையாக அளித்திருக்கிறார்.

ஸ்ரீ கோஷ் சதா படித்துக் கொண்டிருப்பார். அநேக சமயங்களில் ராத்திரி வெகு நேரம்வரை கண் விழித்துப் படித்து, காலையில் 9 மணிக்கு மேல்தான் எழுந்திருப்பார். இவர் வெளி நாடுகளில் நன்ருகச் சுற்றுப் பிரயாணஞ் செய்து உலக அநுபவம் பெற்றவர். இவர் இரண்டு முறை விவாகஞ் செய்து கொண்டார். ஆனால் புத்திர பாக்கியம் கிடையாது.

1917ம் வருஷம், இவர் வக்கீல் தொழிலில் ஈடுபட்டு ஐம்பது வருஷம் முடிந்தமையால், அதனைப் பாராட்டி, வக்கீல்கள் சங்கத்தாரும் கல்கத்தா சர்வகலாசாலையினரும் இவருக்குச் சன்மானப் பத்திரம் வாசித்துக் கொடுத்து உபசரித்தார்கள்.

பின்னர் அதிகாரிகள் இவருக்கு ஸர் பட்டம் கொடுத்துப் பாராட்டினுர்கள்.

ஸர் கோஷ் எப்பொழுதும் இளைஞர்களிடத்திலே அதிகமான ஆர்வமுடையவர். அவர்களுடைய வருங்கால வாழ்விலேதான், இந்தியாவின் வருங்கால வாழ்வு இருக்கிறதென்ற நம்பிக்கை யுடையவர். இவர் தமது கல்கத்தா காங்கிரஸ் தலைமையுரையில் பின்வருமாறு கூறுகிருர்:—

நாம் இப்பொழுது செய்து, பாக்கி வைத்துவிட்டுப் போன வேலைகளை நமது பிற்கால சந்ததியார் எடுத்துக்கொண்டு வேலை செய்வர் என்று பூரணமாக நம்புகிறேன். அவர்கள், 'நமது மூதாதையர்கள் ஏதோ அவர்களுக்குத் தெரிந்த வகையில் தங்களாலியன்றவளவு செய்து வைத்துப் போனுர்கள்' என்ருவது சொல்ல மாட்டார்களா? ஆனுல் ஒன்று மட்டும் நிச்சயமாகக் கூறுவேன். நமது இளைய சகோதரர்களுக்கு எத்தகைய உற்சாகம் இருக்கிறதோ அதே உற்சாகம் எங்களுக்கும் இருக்கிறதென்பது மட்டும் உறுதி.

ஸ்ரீ கோஷ் சிறந்த நாவலர். எத்தனை மணி நேரம் பேசினுலும் கேட்டுக் கொண்டிருக்கலாம். பேசுகிற போது, அங்க சேஷ்டைகள் ஒன்று மில்லாமலும் பேசுவார். தர்க்க ரீதியாகவும் பேச்சு இருக்கும்.

இவர் கடைசியில் 1921ம் வருஷம் ஜனவரி மாதம் 28ந் தேதி காலமானுர்.

பணஞ் சம்பாதிப்பதற்கென்று உலகத்தில் இருபத்தை யாயிரம் வழிகள் இருக்கின்றனவாம். அந்தோ! இதில் ஓராயிரம் வழிகளாவது இந்தியாவில் கொண்டு புகுத்தப் படலாகாதா?

ஃ ஃ ஃ

எகிப்திலுள்ள கெய்ரோவுக்குச் சமீபத்தில் பிரமிட் என்ற கோபுரம் இருக்கிறதல்லவா? 25 லட்சம் சுண்ணும்புக் கற்பாறைகளால் இவை கட்டப் பட்டிருக்கின்றன. இந்த ஒவ்வொரு கல்லும் இரண்டரை டன் நிறையுள்ளது.

ஃ ஃ ஃ

வாழ்க்கையின் சாதாரண அந்தஸ்திலுள்ள ஓர் அமெரிக்கன் ஒரு வருஷத்திற்கு எவ்வளவு ஆகாரம் சாப்பிடுகிருன் என்பதை நாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் நமக்கு ஒரு வித பிரமிப்பு ஏற்படுவது நிச்சயம். ஒரு வருஷ ஆகாரத்தின் கணக்கு:—

மாட்டிறைச்சி	—	62	பவுண்ட்
சர்க்கரை	—	102	,,
கோதுமை மாவு	—	177	,,
உருளைக்கிழங்கு	—	180	,,
பால்	—	918	,,

அறிவுத்துறை

உஷ்ணம் என்றால் என்ன?

"விஞ்ஞான போதகர்"

நாம் தெரிந்து கொள்ளும் பலவித உணர்ச்சிகளில் உஷ்ணமுமொன்று. வெளிச்சத்தை நமது கண்களால் உணர்ந்து கொள்ளுவது போலவே உஷ்ணத்தையும் தொடும் உணர்ச்சியில் உணர்ந்து கொள்ள முடிகிறது. சுடுகிற உணர்ச்சியை அளிப்பதோடு பனிக்கட்டியை கரைப்பதும். தண்ணீரைக் கொதிக்க வைப்பதும், உலோகங்களை சிவந்த தழல் பெருந்தியதாக வைப்பதும், உஷ்ண மின்சாரம் உண்டாக்குவதும், சேர்ந்துள்ள பலவகை வஸ்துக்களைப் பிரித்து விடுவதும் போன்ற பலவகைகளில் தனது தன்மையை உணர்த்திக் கொள்ளுகிறது.

ஒரு பொருள் உஷ்ணமாயிருக்கும்போது, அதின் அணுக்கள் பலமாக அசைந்து கொண்டிருக்கிறது. மிகவும் உஷ்ணமாயிருக்கும் வஸ்துவின் அணுக்கள் வெகு வேகமாய் மிகுந்த தூரத்துடன் அசைந்து கொண்டிருக்கும். இவ்வசைவின் சக்தியே உஷ்ணமாக உணரப்படுகிறது. ஆகவே உஷ்ணம என்பது ஒரு பொருளன்று. ஆனால் ஒரு பொருளின் நிலைமை. இந்நிலைமை ஒரு பொருளிலிருந்து மற்றோர் பொருளை சேரச் செய்ய முடியும்.



1 2 3

1. திட பதார்த்தத்தில் அணுக்கள் அசைந்தோடுந் தன்மை. வட்டமாய்ச் சுற்றிவருகின்றன,
2. ஜல பதார்த்தத்தில் அணுக்கள் அசைந்தாடிக் கொண்டிருக்கும் விதம். அவைகள் வளைந்து வளைந்தோடிக் கொண்டிருக்கின்றன.
3. வாயு பதார்த்தத்தில் அணுக்கள் ஓடிக் கொண்டிருக்குந் தன்மை. அவைகள் நேர்முகமாக அங்குமிங்கும் பாய்ந்தோடுகின்றன.

ஒரு திடபதார்த்தம் உஷ்ணமாயிருக்கும் போது அதின் அணுக்கள் ஒரு மத்திய விடத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. சூரியனை மத்தியமாய் வைத்து மற்ற கிரகங்கள் சுற்றி வருவதுபோலவே திடபதார்த்தங்களின் அணுக்கள் சுற்றிவருகின்றன. அவ்வணுக்களின் ஒன்றுக் கொன்றுள்ள இழுக்கும் சக்தி அதிகமாயிருப்பதால் அசையும் அணுக்கள் பிரிந்தோட முடியாது. அவைகள் வெகு சமீபமாக விருந்து அசைந்து வட்டமாய்ச் சுற்றி வருகின்றன.

ஜலபதார்த்தம் உஷ்ணமாயிருக்கும் போது அதின் அணுக்கள், திட பதார்த்தத்தின் அணுக்களைப் போல சுற்றி வருவதில்லை. இந்நிலையில் அணுக்களின் தூரம் சிறிது அதிகரித்திருக்கும். ஆகவே அசைந்தோடி வரும் அணுக்கள் வட்டமாய் சுற்றாது வளைந்து அங்கு மிங்கும் ஓடிச் செல்லும். ஆனால் இவ்வாறு ஓடி ஓடிச் சென்று சுற்றும் அணுக்கள் பிரிந்தோடிவிட முடியாது. திட பதார்த்தத்தைவிட அணுக்கள் சிறிது அதிகமாகத் தளர்ச்சியுற் றிருந்தும் அவைகளின் இழுக்கும் சக்தி இன்னும் அதிகமாகவே யிருந்து அணுக்களை ஓடவிடாது இழுத்துக் கொள்ள முடிகிறது.

வாயுபதார்த்தம்உஷ்ணமாயிருக்கும் போது அதின் அணுக்கள் வேகமாக, வெகு தூரமாக அங்குமிங்கும் ஓட முடிகிறது. அவ்வாறு ஓடும் போது வழியில் மற்றொரு அணுவை மோதி, திரும்பி வந்த மார்க்கமாய் ஓடி வரும். அப்படி வரும் போது மற்றொரு அணுவை மோதி வேறொரு திசையை நோக்கி ஓடவும் முடிகிறது. ஆகவே வாயுவில் அணுக்கள் திடபதார்த்தத்தைப் போல வட்டமாகவோ, ஜல பதார்த்தத்தைப் போல வளைந்து வளைந்தோ ஓடாமல் அங்குமிங்கும் திடீர் திடீரென்று நேர்முகமாக ஓடுகின்றன. அவைகளின் ஓட்டம் வெகு விரைவாகவும், வெகு தூரமாகவுமிருக்கும். வாயு பதார்த்தத்தின் அணுக்களின் அசைவு அவைக

ளின் இழுக்கும் சக்தியைவிட அதிக ரித்திருப்பதால் சில சமயம் வாயுவின் அணுக்கள் தங்கள் அணுக்கூட்டத்திலிருந்து பிரிந்தோடிவிட முடிகிறது. இதனால் வாயு அது அடங்கியுள்ள பாத்திரத்தின் அளவை ஒத்ததாகி விடுகிறது. அதாவது சிறிய பாத்திரத்தில் வைத்தாலும் சரி, பெரிய பாத்திரத்தில் வைத்தாலும் சரி, வாயு அப்பாத்திரங்களில் எப்பொழுதும் நிறைந்தே நிற்கும். ஆனால் ஜலபதார்த்தமோ, திடபதார்த்தமோ அவ்விதமாகத் தங்கள் அளவைத் தாங்களே அதிகரித்துக் கொள்ள முடியாது.

ஆகவே பதார்த்தங்களில் மூன்று விதத் தன்மை, அவைகளின் அணுக்களின் அசைந்தாடும் வேகம், தூரம் முதலிய வற்றின் அதிகரிப்பைப் பொறுத்திருக்கிறது. இதனால் திடபதார்த்தத்தில் உஷ்ணத்தை அதிகரித்து அதின் அணுக்களின் அசைவை அதிகரித்து ஜல பதார்த்தமாக மாற்றவும், ஜல பதார்த்தத்தில் உஷ்ணத்தை அதிகமாக்கி அதின் அணுக்களை வேகமாகவும், தூரமாகவும் அசைந்தாடச் செய்து வாயு பதார்த்தமாகவும் மாற்ற முடிகிறது.

கரி பதார்த்தங்களை யுடைய மரம், காகிதம், துணி போன்ற வஸ்துக்களைத் தவிர்த்து இதர உலோகங்கள் யாவும் உஷ்ண அதிகரிப்பால் திடபதார்த்தத்திலிருந்து ஜல பதார்த்தமாகிக் கடைசியாக வாயுவாக மாற முடிகிறது. ஆனால் கரி பதார்த்தங்களையுடைய வஸ்துக்கள் திட பதார்த்தத்திலிருந்து நேராக வாயு பதார்த்தமாக மாறி விடுகின்றன. ஜல பதார்த்தமாகமாறுவதில்லை. ஏனெனில் அவைகளின் தன்மை மாற உஷ்ணம் வெகு சொல்பம் தேவையா யிருப்பதினால் மத்திய நிலை யடைய நேரமில்லாமல் போய் விடுகிறது.

உஷ்ணம் மற்றோரிடத்திற்கு மாற்றப்படும் வழிகள் யாவை?

உஷ்ணத்தை ஒரு இடத்திலிருந்து மற்றொரு யிடத்தை அடையச் செய்வதற்கு மூன்று வழிகளுண்டு.

(அ) உஷ்ண மடைந்த அணுக்கள் இருந்த விடத்திலிருந்து கொண்டே உஷ்ணசக்தியை, அடுத்துள்ள அணுக்களுக்களிப்பதும் அதைப் பெற்ற அணுக்கள் அவைகளுக் கடுத்தாற்போலுள்ள அணுக்களுக் களிப்பதுமான வகையொன்று. திருஷ்டாந்தமாக ஒரு உலோகத் தடியின் ஒரு பாகத்தை அடுப்பில் வைத்தால் கொஞ்ச நேரத்தில், பிடித்திருக்கும் மறுபுயத்தில் உஷ்ணத்தை உணர முடிகிறது. இதனால் உஷ்ணம் ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்குச் செல்லுவதைத் தெரிந்து கொள்ளுகிறோம். அவ்வாறு செல்வதற்கு உஷ்ணமடைந்த அணுக்கள் தடியின் ஒரு புறத்திலிருந்து உஷ்ண சக்தியை தங்களுக்கு அடுத்தாற் போலுள்ள அணுக்களுக்குக் கொடுத்து கடைசியாகக் கையை வந்தடைகிறது. இதில் உஷ்ணமடைந்த அணுக்கள் உஷ்ணத்தைத் தாங்களே கொண்டு செல்லுவதில்லை. ஆனால் இருந்த இடத்திலிருந்து கொண்டே உஷ்ண சக்தியை மாத்திரம் வாய்க்கால் நீர் போல செல்லச் செய்கிறது.

ஒரு பொருளைத் தொட்டு அது சூடாயிருக்கிறது அல்லது குளிரா யிருக்கிறது என்று நாம் கூறுவது சகஜம். சூடாகத்தோன்றும் பொருள் நமது கைக்கு உஷ்ணத்தைத் தருகிறது. இதனால் நாம் அதிக உஷ்ண



இரும்புத் தடியின் ஒரு பாகத்தை உஷ்ணப்படுத்தினால் உஷ்ணம் வாய்க்கால் நீர் போல மெதுவாய் ஓடி மறு புறத்தை யடைகிறது. அவ்வாறு பரவும் உஷ்ணத்தின் அளவை பல பாகங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் 'தெர்மாமிட்டர்'கள் உணர்த்துகின்றன.

மடைந்து அவ்வுஷ்ணத்தின் அளவைக் கொண்டு அப்பொருளின் உஷ்ணத்தை உரைக்க முடிகிறது. ஒரு பனிக் கட்டியை கையில் எடுத்த மாத்திரத்தில் குளிராக விருப்பதை உணருகிறோம். இங்கே உஷ்ணம் நமது தேகத்திலிருந்து பனிக் கட்டியை அடைவதால் நமது கையிலுள்ள உஷ்ணம் பனிக் கட்டியை அடைந்து அதைக் கரைத்து விடுகிறது. ஆகவே எப்பொழுதும் உஷ்ணம் அதிக உஷ்ணம் பொருந்திய வஸ்துவிலிருந்து குறைந்த உஷ்ணம் உள்ள வஸ்துவுக்குச் செல்லும். ஆகவே ஒரு பொருள் அதிக உஷ்ணம் வாய்ந்திருக்கிறது, அல்லது குறைந்த உஷ்ணம் உடையதாயிருக்கிற தென்பதை உஷ்ணம் எப்பொருளிலிருந்து எப்பொருளுக்கு செல்லுகிறது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு தான் கூற முடிகிறது.

(ஆ) உஷ்ணம் வேறொரு விடத்திற்குச் செல்ல இன்னொரு வழியில் உஷ்ணத்தை யடைந்த அணுக்கள் தாமே சென்று உஷ்ணத்தைப் பரப்புகின்றன. உதாரணமாக ஒரு பாத்திரத்தில் நீரைச் சூடவைத்தால் முதலாவது அடுப்பின் பக்கமாயுள்ள நீர்—



ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை உஷ்ணப் படுத்தினால் அடியில் முதன்மையில் உஷ்ணமடைந்த அணுக்கள் உயரத்தில் எழும்பிச் செல்லுவதைக் காண்க. மேலே சென்று குளிர்ந்தவுடன் கீழ் நோக்கி வந்து மறுபடியும் முன்போல மேலெழும்புகின்றன. உஷ்ணத்தை நீர் அணுக்களே கொண்டு செல்லுகின்றன.

அணுக்கள் சூட்டை ஏற்று மேலே செல்லுகின்றன. அவைகள் மேலே செல்லவும் கனமான குளிர்ந்த அணுக்கள் கீழே வந்து உஷ்ணத்தைப் பெற்று மேலே போகின்றன.

இவ்வாறு உஷ்ணம் சூடான அணுக்களால் பரப்பப்பட்டு கடைசியாக யெல்லாம் உஷ்ணமாகி விடுகின்றன. இவ்வாறே காற்றும் உஷ்ணத்தைக் கொண்டு செல்லுகிறது. காற்றின் அணுக்கள் சூட்டை யடைந்ததும் இலேசாகி மேலே சென்று குளிர்ந்த காற்று கீழே வந்து சூடாகி மேலெழும்புகிறது. இவ்வாறே காற்று அடிக்க ஏற்படுகிறது.



கண்ணாடிச் 'சிம்னி'யை எரிந்து கொண்டிருக்கும் மெழுகு திரியின் மேல் வைத்து சிம்னியின் மேல் பாகத் துவாரத்தை ஒரு தகரத்தை வைத்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தில் காகிதப் புகையை விடுத்தால் அப்புகை கீழ் சென்று உஷ்ணப்படுத்தப்பட்டு, இலேசாகி, திரும்பவும் மேலெழும்பி மறு துவாரத்தின் வழியாக வெளிவந்து விடுகிறது.

உலகத்தின் மத்திய பாகம் சூரியனால் அதிகம் தகிக்க ஏற்படுவதினால் காற்று உஷ்ணத்தை அதிகம் பெற்று மேலே சென்றவுடன் வட தென் துருவங்களிலிருந்து குளிர்ந்த காற்று அவ் விடத்திற்கு விரைந்து செல்லுகிறது. இதனாலேயே உலகில் சதா வட தென் காற்றுண்டாகிறது. மேலும் சமுத்திரங்களில் நீரோட்டம் உண்டாவதும் இதே காரணம்தான்.



சூடாக்கப்பட்ட நீர் அணுக்கள் இலேசாகி மேலே ஓடி, குளிர்ந்து, கனமாகி கீழே ஓடி வருகின்றன. இப்படியாக நீரோட்டம் குழாய்களைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும்.

அநேகமாய் நீரோட்டம் சூரிய வெப்பம் அதிகமாய் ஏற்படும் மத்திய ரேகை பாகத்திலிருந்து உண்டாகி வட தென் துருவங்களை நோக்கிச் செல்லுகின்றன.

(இ) உஷ்ணம் மற்றோரிடத்திற்கு யாதொரு உபகரணமுமின்றி செல்லவும் ஏற்படுகிறது. அதாவது உஷ்ணமுள்ள இடத்திற்கும் உஷ்ண மில்லா இடத்திற்கும் ஊடே காற்று முதலிய யாதொரு உபகரணமில்லாமலே உஷ்

ணம் வந்தடைகிறது. வெகு உஷ்ணம் பொருந்திய வஸ்துவிருக்கும் ஒரு அறையில் யாதொரு காற்றும் இல்லாமல் சுத்த சூன்யமாக்கி விட்டாலும் அவ் வஸ்துவின் உஷ்ணம் மற்றொரு பாகத்தை வந்தடைவதைக் காண



காற்றை வெளிப் போக்கும் கருவியின் தகட்டின் மேல் கண்ணாடிக் கூட்டை வைத்து காற்று முழுவதையும் வெளிப் போக்கி மேல் பாகத்திலோர் கம்பியை மின்சாரத்தால் உஷ்ணப் படுத்தப் படுகிறது. இவ்வுஷ்ணம் மேலேயுள்ள உள்ளவுக் கண்ணாடியால் நேர்முகப்படுத்தி கீழே யுள்ள உள் வளைவுக் கண்ணாடியில் தாக்கி முனை கூட்டப் படுகிறது. அவ் விடத்தில் 'தெர்மா மிட்டர்' நிறுத்தினால் அந்த உஷ்ணத்தின் அதிக அளவை உணர்த்துகிறது. ஆகவே

1. உஷ்ணம் நேர்முகமாக ஓடுகிறது.

2. உஷ்ணம் உபகரண மில்லாமலும் இடம் விட்டு இடம் செல்லுகிறது என்று இதனால் அறியக் கிடக்கிறது.

முடிகிறது. காற்று பூமிக்கு மேலே சுமார் 200 மைல் தூரம் வரைதானுண்டு. அதற்கு மேலே காற்றே கிடையாதென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி காற்றில்லாமலிருந்தும் வெகு தூரத்துக் கப்பாலுள்ள சூரியனின் உஷ்ணம் நம்மை வந்தடைகிறது. இவ்வாறு யாதொரு உபகரணமுமின்றி உஷ்ணம் கொண்டு செல்லப் படுவதை உணர்வது அசாத்யமா யிருப்பதை ஒருவாறு ஒழிக்க சாஸ்திர நிபுணர்கள் உலகமுழுவதையும் 'ஈதர்' என்றதோர் வஸ்துமூடியிருப்பதாகவும் மின்சார சக்தி முதலியவைகள் போன்று உஷ்ண சக்தியும் இந்த ஈதர் உபகரணத்தில் அலைகள் வடிவமாகக் கொண்டு செல்லப்படுகின்றன வென்றும் கூறி திருப்தி படுத்துகின்றனர். ஆனால் ஒன்று உஷ்ணமாயுள்ள வஸ்துவின் மேல் பாகம் மிகவும் பளபளப்பாய் இருந்தால் இம் மூன்றாவது வகையில் உஷ்ணம் வெளிப்போவதில்லை யென்று கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது உபகரணமில்லா வகையில் செல்லும் உஷ்ணம் நன்றாய் பள பளப்பாக்கப் பட்ட வஸ்துவிலிருந்து வெளிப் போகாது. மற்றொன்று: மிகவும் கறுப்பாய், மாசடைந்துள்ள வஸ்துவிலிருந்து உஷ்ணம் வெகு விரைவாக வெளிப் போகும் அதேபோல் அதிக மாக உஷ்ணத்தை—பள பளப்பான வஸ்துவைவிட அதிகமாக—கிரகிக்க முடிகிறது. இதனால்தான் சமையற் பாத்திரங்களை அடிப் பாகத்தில் கரியினால் நன்றாய் பூசி, மேற் பாகத்தை மண், சாம்பல் கொண்டு நன்றாய் தேய்த்து பளபளப்பாய் வைக்கின்றனர். ஏனெனில் பாத்திரத்தின் அடிப் பாகம் கறுப்பா யிருப்பதால் அடுப்பிலிருந்து உஷ்ணத்தை அதிகமாய்க் கிரகிக்கிறது. மேற்பாகம் பள பளப்பா யிருப்பதினால் பாத்திரத்தின் உஷ்ணம் வெளியேற சாத்திய மற்றுப் போய் பதார்த்தம் பக்குவப் படுவதற்கு உஷ்ணம் தங்கி யிருக்க ஏற்படுகிறது.

ஆகவே சூடான ஒரு பொருள் தன் உஷ்ணம் வெளிப் போகாமல் வைத்துக் கொள்ள வேண்டுமானால் மேற்கூறிய மூன்று வழிகளையும் தடுக்க வேண்டும். இது சம்பந்தமாக 'தெர்மோஸ்பிளாஸ்க்' என்னும் உஷ்ணத்தை வெளிப் போக்காப் பாத்திரத்தின் அமைப்பை எடுத்துக் கொள்ளுவோம்.



'தெர்மோஸ்-பிளாஸ்'க்கும் அதின் உள்ளமைப்பும். உள்ளிருப்பது பளபளப்பான இரட்டைச் சுவற்றையுடை. கண்ணுடிக் கூடு. இது 'கார்க்' துண்டுகள் மீது நிற்க வைக்கப் பட்டிருக்கிறது. கூட்டின் இரட்டைச் சுவற்றுக்குள் காற்றே இல்லாமல் ஆக்கப் பட்டிருக்கிறது.

இது இரு தகடு வாய்ந்த கண்ணுடிக் கூடு. அவ்விரு தகடுகளுக்கும் ஊடே காற்றே கிடையாமல் ஆக்கப் பட்டிருக்கும். இரு தகடுகளுக்கு உள்ளும் புறமும் ரசத்தால் மிகவும் பள பளப்பாய் வைக்கப் பட்டிருக்கும். இக் கண்ணுடிக் குழல் 'கார்க்' காகித அட்டை முதலியவற்றின் மீது நிற்கவைத்து தகரக் கூட்டால் மூடி விடப்படுகிறது. மேல் வாய் 'கார்க்' மூடியால் மூடப்படுகிறது. 'தெர்மோஸ்—பிளாஸ்க்' கின் அமைப்பு இவ்வளவுதான்.

கண்ணுடிக் கூட்டில் ஊற்றி வைக்கப்படும் நீரின் உஷ்ணம் வெளிப் போகாததற்கு (அ) அக்கூடு வெளிப் பாகத் தகரத்தைத் தொட்டுக் கொண்டிராமல் 'கார்க்' துண்டுகளின் மேல் நிற்க வைக்கப்படுகிறது. 'கார்க்' உஷ்ணத்தைக் கிரகிக்காததோர் பொருள். ஆகவே உஷ்ணம் முதலாவது கூறப் பட்ட வழியில் சென்றுவிடா வண்ணம் காக்கப்படுகிறது.

(ஆ) கண்ணுடிக் கூட்டின் இரு தகடுக் கூடே காற்றே யில்லாததின் நிமித்தமும், அக்கூட்டின் வெளிப் பாகத்தில் காற்று வந்து போகா வண்ணமும் ஏற்படுத்தி யிருப்பதினால் காற்றின் அணுக்களால் உஷ்ணம் கிரகிக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

(இ) கண்ணுடிக் கூடின் உள்ளும் புறமும் பிரகாசமாய்—பள பளப்பாயிருப்பதால் மூன்றுவது வகையான உபகரணமில்லாமல் உஷ்ணம் வெளிப் போவது தடுக்கப்படுகிறது. இவ்வாறு உஷ்ணம் வெளிப் போகும் வகைகளைத் தடுக்கும் உபாயங்களைத் "தெர்மோஸ்—பிளாஸ்க்"கில் ஏற்படுத்தி யிருப்பதால்தான் அதிலுள்ள நீர் உஷ்ணமாகவே யிருக்க ஏதுவாகிறது.

மொகாலய அரசாங்கம்

அதன் செல்வ நிலை

—சரித்திரக்காரன்

அக்பர் குமாரனை ஜீஹாங்கீர், மொகலாய சக்ரவர்த்தியாக ஆண்டு கொண்டிருந்த போது வில்லியம் ஹாக்கின்ஸ் என்ற ஆங்கிலேயன் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு வந்தான். இவன் 1600-ம் வருஷ முதல், 1613-ம் வருஷம் வரை சுற்றுப் பிரயாணம் செய்தான். இவன் ஜீஹாங்கீர் சமஸ்தானத்தில் ஒரு 'பிரபு' என்ற முறையில் மிக்க மரியாதையாக நடத்தப் பட்டு வந்தான். இவன் மொகலாய சமஸ்தானத்தில் கண்டவைகளைப் பற்றி ஒரு குறிப்பு எழுதி யிருக்கிறான். அதில், ஜீஹாங்கீரிடத்தில் எவ்வளவு செல்வம் இருந்த தென்பதைப்பற்றியும் பிற நலன்களைப் பற்றியும் எழுதியிருப்பதை மாத்திரம் ஈண்டுக் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறோம்.

ஃ ஃ ஃ

ஜீஹாங்கீரின் இராஜ்யத்தைச் சுற்றி வர இரண்டு வருஷங்கள் செல்லும். அவனுடைய இராஜ்யம் ஐந்து பிரிவாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய தலை நகரம் தில்லி. அவனுக்கு இராஜ்யத்தின் ஐந்து இடங்களில் உயர்ந்த அரண்மனை போன்ற கட்டிடங்கள் உண்டு. ஜீஹாங்கீருக்கு ஐந்து பிள்ளைகளும் இரண்டு பெண்களும் முந்நூறு மனைவிகளும் இருக்கிறார்கள். இவர்களில் நால்வர் பட்ட மஹிஷிகள்.

ஃ ஃ ஃ

ஜீஹாங்கீரின் செல்வம் ஏராளமாயிருக்கின்றது. அவனுடைய சொந்த நிலத்தின் வருஷ வரும்படி ஐம்பது கோடி ரூபாயாகும். அவனுடைய பொக்கிஷத்தில் பத்து ரூபா மதிப்புள்ள அறுபது லக்ஷம் தங்க மோஹராக்களும் ஆயிரம் ரூபா மதிப்புள்ள இருபதினாயிரம் தங்க மோஹராக்களும் இருபது தோலா எடை கொண்ட முப்பதினாயிரம் தங்க மோஹராக்களும், பத்து தோலா எடை கொண்ட இருபதினாயிரம் தோலா எடை கொண்ட ஐம்பதினாயிரம் தங்க மோஹராக்களும், ஐந்தாயிரம் தங்க மோஹராக்களும் இருக்கின்றன. வெள்ளியில் சலீம்ஷாவின் உருவம் அமைந்ததும் நூறு தோலா எடையுள்ளதுமான ஐம்பதினாயிரம் நாணயங்களும் ஐம்பது தோலா எடையுள்ள ஒரு லக்ஷம் நாணயங்க

களும் முப்பது தோலா எடையுள்ள நாற்பதினாயிரம் நாணயங்களும் இருபது தோலா எடையுள்ள முப்பதினாயிரம் நாணயங்களும் பத்து தோலா எடையுள்ள இருபதினாயிரம் நாணயங்களும் ஐந்து தோலா எடையுள்ள இருபத்தையாயிரம் நாணயங்களும் 'சவாய்' என்ற இரண்டு லக்ஷம் நாணயங்களும் இருக்கின்றன. இவை தவிர பதின் மூன்று கோடி ரூபாய்கள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

சிறியதும் பெரியதும் பலவித அளவுகளை யுடையதும் ஆனால் இரண்டரை காரட்டுக்குக் குறையாததுமான வைரங்கள் ஒன்றரை மணங்கும், பலவித அளவுகளையுடைய சிவப்பு இரத்தினங்கள் சுமார் இரண்டாயிரமும், பவழத்தில் பன்னிரண்டு மணங்கும், சிவப்பு வர்ணமுடைய பலவித இரத்தினங்களில் இரண்டு மணங்கும், மரகதக் கற்களில் சுமார் ஐந்து மணங்கும், சீனத்திலிருந்து வரும் 'எஷைம்' என்ற கற்கள் சுமார் ஒரு மணங்கும், யாமனி என்ற சிவப்புக் கற்களில் சுமார் ஐயாயிரமும் இருக்கின்றன. இவை தவிர வேறு பலவித இரத்தினங்கள் கணக்கிலடங்காமல் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

ஜெர்மனியிலிருந்து செய்து வரப்பட்டதும் பலவித உயர்ந்த இரத்தினங்கள் இழைக்கப்பட்டதுமான வாட்கள் இரண்டாயிரத்து இருநூறு இருக்கின்றன. குதிரைகளுக்குப்போடும்ஜேணங்கள் தங்கத்தாலும் உயர்ந்த நவரத்தினங்களாலும் இழைக்கப்பட்டு ஐந்நூறு இருக்கின்றன. குதிரைகளுக்குப் போடும் தங்கச் சட்டைகள் இரண்டாயிரம் இருக்கின்றன. தங்கத் துவஜங்களில் இருபத்தைந்து இருக்கின்றன. இவைகள் தங்க வேலைப்பாடமைந்ததாயும் இரத்தினங்களால் இழைக்கப்பட்டதாயும், அரசன் வெளிச் செல்லும்போதுகூட எடுத்துச் செல்லக் கூடியதுமாயும் இருக்கும். அரசனுக்கு நிழல் கொடுப்பதற்கென்று இருபது 'கிதாசோல்' இருக்கின்றன. அரசனைத் தவிர வேறொருவரும் இதை உபயோகிக்க மாட்டார். அரசன் உட்காருவதற்கென்று இரண்டு தங்க நாற்காலிகளும் மூன்று வெள்ளி நாற்காலிகளும், பிறர் உட்காருவதற்கென்று நூறு தங்க நாற்காலிகளும் வெள்ளி நாற்காலிகளும் ஆக மொத்தம் நூற்றைந்து நாற்காலிகள் இருக்கின்றன. உயர்ந்த இருநூறு கண்ணாடிகளும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டுச் சாராயம் முதலியவை குடிப்பதற்கென்று நூறு கிண்ணங்களும், குடிப்பதற்கென்று ஐந்நூறு கோப்பைகளும் இருக்கின்றன. இந்த ஐந்நூறு கோப்பைகளில் ஐம்பது கோப்பைகள் மிக உயர்ந்தவை. இவை ஒரே இரத்தினக் கல்லிலாவது ஒரே மரகதக் கல்லினாலாவது வேறு துருக்கியிலிருந்து வரவழைக்கப்பட்ட கல்லினாலாவது செய்யப் பட்டவையாகும். சிறந்த பவழ மாலைகளும், வேறு பல நவரத்தின மாலைகளும், கற்களாலிழைக்கப்பட்ட மோதிரங்களும் கணக்கிலடங்காமலிருக்கின்றன. இவைஎவ்வளவுஇருக்கின்றனவென்று தனதிகாரிக்கே தெரியும். வெள்ளியால் செய்யப்பட்ட கோப்பைகள், தட்டுகள், தொட்டிகள் முதலிய பாத்திரங்கள் இரண்டாயிரம் மணங்கு எடை கொண்டு இருக்கின்றன. தங்கத்தினால் செய்யப்பட்ட

மேற்கூறிய பாத்திரங்கள் ஓராயிரம் மணங்கு எடை கொண்டனவா யிருக்கின்றன.

ஃ ஃ ஃ

ஜிஹாங்கிருடைய அரண்மனையில் பன்னிரண்டாயிரம் குதிரைகள் இருக்கின்றன. இவைகளில் பாரசீகத்திலிருந்து வந்தவை நாலாயிரம்; துருக்கியிலிருந்து வந்தவை ஆறாயிரம்; காஸ்மீரத்திலிருந்து வந்தவை இரண்டாயிரம். பன்னிரண்டாயிரம் யானைகளும் இரண்டாயிரம் ஒட்டகங்களும் பதினாயிரம் வண்டி யிழுப்பதற்கு உபயோகமான எருதுகளும் ஓராயிரம் கோவேறு கழுதைகளும், விளையாட்டுக்காக வைக்கப்பட்டிருக்கும் மான்களில் மூவாயிரமும், வேட்டை நாய்களில் முந்நூறும், பழக்கப்பட்ட சிங்கங்கள் நூறும், எருமைகள் ஐந்நூறும், பாடும் பறவைகள் நாலாயிரமும் ஒரு மணி முன்னெச்சரிக்கைக்குள் இருபத்தையாயிரம் பேர் தரிக்கக்கூடிய எல்லாவித ஆயுதங்களும் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

ஜிஹாங்கீரின் சொந்தச் செலவு தின மொன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபா ஆகின்றது. அவனுடைய அன்புக்குரிய பிராணிகளுக்கும் அவன் ஏறும் யானைகளுக்கும் ஏற்படும் தீனிச் செலவுகளும் மற்றச் சில்லரைச் செலவுகளும் இதில் அடங்கும். அந்தப்புரத்தி லுள்ள ஸ்திரீகளின் தினசரிச் செலவு முப்பதினாயிரம் ரூபாயாகும்.

மேலே கூறப்பட்ட கணக்குகள் யாவும் ஆக்ரா கோட்டையில் இருப்பதையே குறிக்கும். இங்ஙனமே ஐந்து கோட்டைகளில் அரசனுக்கு ஏராளமான செல்வம் இருக்கின்றது. முக்கியமாக லாகூரிலிருக்கும் கோட்டையிலேயே அதிக செல்வம் இருக்கிறது.

ஃ ஃ ஃ

ஜிஹாங்கீர் சக்ரவர்த்தி ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குச் செல்லும்போதாவது அல்லது வேட்டையாடச் செல்லும் போதாவது பார்த்தால் ஒரு பட்டணமே பெயர்ந்து செல்வதுபோல இருக்கும். (பதினேழாம் நூற்ருண்டு) லண்டன்மா நகர அளவு எவ்வளவு இருக்குமோ அதே அளவுதான் ஜிஹாங்கீருடன் செல்லும் நகரத்தின் அளவும் இருக்கும். பிரயாண காலத்தில் அவனுடன் எல்லாவித பேர்களும் செல்கிருர்கள். சுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் அவனுடன் செல்கிருர்கள் என்று உத்தேசமாகக் கூறலாம். கிழக்குப் பிரதேசங்களில் இந்த அரசனே படையிலும் செல்வத்திலும் நிலத்திலும் மற்றெல்லா விதத்திலும் எல்லா அரசர்களைக் காட்டிலும் சிறந்தவன் என்று சொல்லப் படுகிறது. இவனுடைய அரசாங்கத்தி னுடையவும் பிரபுக்களுடையவுமான யானைகள் சுமார் நாற்பதினாயிரம் இருக்கின்றன. இவைகளில் இருபதினாயிரம் யானைகள் யுத்தத்திற்கென்று பழக்கப்பட்டவை.

ஃ ஃ ஃ

ஜிஹாங்கீர் சக்ரவர்த்தி சில சமயங்களில் நல்லவனுகவும் சில சமயங்களில் கெட்டவனுகவும் இருப்பான். இவன் தன்னுல் உபயோகிக்கப் பட்ட மிருகங்களின் மீதும் பாத்திரங்களின் மீதும் அதிக பற்றுள்ளம் கொண்டிருந்தான். ஒரு சமயம், அரசனுடைய சைனு சாமான்கள், மற்ற

கம்பளத் துணிகள் இராஜரீக உடுப்புகள் முழுவதற்கும் நிருவாகியாயிருந்த என் நண்பர் ஒருவர் (இக்குறிப்புகளை எழுதிய ஸ்ரீமான் ஹாக்கின்ஸ் என்பவரின் நண்பர்) அரசனிடத்தில் மிருந்த கஷ்டப் பட்டார். அரசன் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அரசனால் அதிக அன்புடன் பாராட்டப் பட்டு வந்ததும் சுமார் தொண்ணூறு ரூபா பெறுமானது மான சைனு கோப்பை ஒன்று யதேச்சையாய் உடைந்து போய் விட்டது. அரசன் இந்தக் கோப்பை யிடத்தில் அதிகப் பிரீதியா யிருக்கிறான் என்பதை அறிந்த இந்த அதிகாரி தன் வேலையாட்களில் ஒருவனை அழைத்து இதே மாதிரியான கோப்பை ஒன்றை வாங்கி வரும்படி சீன தேசத்திற்கு அனுப்பினான். அரசன் மறுபடியும் இந்த கோப்பையைப் பற்றி ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு முன்னர் இந்த வேலையாள் சீனத்தி லிருந்து புதிய கோப்பையை வாங்கிக் கொண்டு வந்துவிடுவான் என்பதே இந்த அதிகாரியின் எண்ணம். ஆனால் இந்த அதிகாரியின் துரதிர்ஷ்டத்தின் பயனாக இரண்டு வருஷம் கழிந்ததும் அரசன் இந்தக் கோப்பையை (உடைந்து போனதைக்) கொண்டு வரும்படி சொன்னான். இரண்டு வருஷம் சென்றும் சீன தேசத்திற்குச் சென்ற ஆள் திரும்பி வரவில்லை. தன் அன்புக்குரிய கோப்பை உடைந்து போனதை அறிந்து அரசன் அதிக கோபங் கொண்டு இந்த அதிகாரியை அழைத்து வரும்படி சொல்லி, இரண்டு மனிதர்களைக் கொண்டு சவுக்கால் அடிக்கும்படி உத்தரவு செய்தான். இங்ஙனம் இந்த அதிகாரி நூற்றிருபது அடி பட்டுக் கொண்டான். பிறகு அரசன் இருபது வேலையாட்களைக் கொண்டு பனை மட்டையால் அடிக்கச் சொன்னான். கடைசியில் இந்த அதிகாரி சாகுந் தருணத்திற்கு வந்து விட்டான். அப்பொழுது இவன் சிறைக்கு நடத்திச் செல்லப்பட்டான். மறுநாள் அரசன் இந்த அதிகாரி உயிருடன் இருக்கிறானா என்று விசாரித்தான். 'ஆம்' என்று பதில் வந்ததும் இவனை மறுபடியும் கடுஞ் சிறைக்கு அனுப்ப உத்தரவு செய்தான். உடனே அரச குமாரன் இந்த அதிகாரிக்கு நண்பனாதலால் இவனை விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பும்படி சிபார்சு செய்தான். பிறகு இந்த அதிகாரி இதே மாதிரியான கோப்பையைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தாலன்றி மறுபடியும் அரச சமூகத்தில் ஆஜராகக்கூடாதென்று உத்தரவு செய்யப் பட்டான். வேண்டுமானால் சீனதேசம் செல்வதற்கென்று ஐயாயிரம் ரூபா பிரயாணச் செலவுக்காகக் கொடுக்கப் பட்டான். இந்த அதிகாரி, உடைந்து போன கோப்பை மாதிரி பாரசீக அரசனிடத்தில் இருக்கிறது என்பதை அறிந்து அவனிடத்திலிருந்து அக் கோப்பையைப் பெற்றுக் கொண்டு வந்தான்.

ஃ ஃ ஃ

ஜிஹாங்கீர் சக்ரவர்த்தி வருஷத்திற்கு இரண்டு முறை பெரிய விருந்துகள் நடத்துகிறான். ஒன்று 'நவ ரோஸ்' என்பதாகும். புதிய வருஷப் பிறப்பின் பொருட்டு இந்த விருந்து பதினெட்டு நாள் நடத்தப் படுகிறது. இந்த விருந்தின்போது செலவழிக்கப் படும் பணமும் உபயோகப் படும் சாமான்களும் மிக ஆச்சரியமானவை. இந்த விருந்தின் போது ஒவ்வொரு பிரபுவுக்கும் தனித்தனி இடம் உண்டு.

இந்தப் பிரபுக்கள் இருக்கும் இடத்திற்கு நடுவில் ஓர் அழகிய கூடாரம் அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கூடாரம் மிக அழகாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது, உலகத்திலேயே இத்தகைய கூடாரம் இல்லையென்று கூறலாம். தங்கத்தினுலும் வெள்ளியினுலும் இரத்தினங்களாலும் பட்டினுலுமே இந்தக் கூடாரம் அமைக்கப் பட்டிருக்கிறதென்று கூற வேண்டும்.

ஃ ஃ ஃ

பிரபுக்களுக்கென்று கூடாரங்கள் சுமார் இரண்டு ஏக்கரா விஸ்தீரணமுள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடம் முழுவதும் தங்கக் கம்பங்களினுலும் பட்டுத் துணிகளினுலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இதன் நடுவில் அரசருக்கென்று ஐந்து ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இராணிமார்களுக்கென்று தனித்தனி அறைகள் இருக்கின்றன. ஏறக்குறைய ஐந்து ஏக்ரா விஸ்தீரணமுள்ள இடத்தில் இவையாவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரபுவும் தனக்கென்று பிரத்தியேகப் படுத்தப்பட்டிருக்கும் அறையை அலங்கரித்துக் கொள்ள முயற்சி செய்கிறுன். அரசன் தன் பிரபுக்களுடைய ஒவ்வோர் அறைக்கும் சென்று விருந்துண்கிறுன். பிறகு உயர்ந்த நகைகள் அவனுக்குப் பிரபுக்களால் சன்மானிக்கப் படுகின்றன. ஆனுல் அவைகளுக்குரிய விலை அப்பொழுதே கொடுத்து விடப்படுகிறது. மார்ச்சு மாதத் தொடக்கத்தில் இந்த விழா ஆரம்பிக்கிறது.

ஃ ஃ ஃ

மற்ெருரு விழா ஜிஹாங்கீரின் பிறந்த நாளைக் கொண்டாடும் பொருட்டு நடைபெறுவதாகும். இந்தச் சமயத்தில் அரசன் தன் தாயின் அரண்மனைக்குத் தன் பிரபுக்களுடன் செல்கிறுன். அங்கே அரசனுடைய தாயாருக்கு ஒவ்வொரு பிரபுவும் ஒவ்வொரு நகையைச் சன்மானிக்கிறுன். பிறகு தங்கத் தராசுள்ள வேறோர் அறைக்குச் செல்கிறுன். அங்கே ஒரு கட்டில் அரசன் அமர்கிறுன். மற்ெருரு கட்டில் தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களும் நாணயங்களும் பிறவும் வைக்கப்படுகின்றன. அரசனுடைய எடைக்குச் சமானமாக வைக்கப்பட்டுப் பிறகு இவை ஏழைகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன. சுமார் ஒரு லக்ஷத்து ஐம்பதினுயிரம் ரூபா இச்சமயத்தில் ஏழைகளுக்கு வழங்கப்படுகிறது என்று கூறலாம். தன்னுடைய பிறந்த நாளன்று அரசன் தன் பிரபுக்கள் அனைவரிடத்திலிருந்தும் பலவித சன்மானங்களைப் பெறுகிறுன்.

நல்லொழுக்கம்

(இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை)

சு. சோமசுந்தர தேசிகர்

ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்

என்பது பொய்யாமொழியார் வாக்கு. இத் திருக்குறளின் கருத்து என்ன வெனில் உயிர் எப் பொருளினுஞ் சிறந்தது; அதனினும் சிறந்தது ஒழுக்கம் என்பது. ஒழுக்கமாவது என்னை என்ற வினு எழும்போது நல்ல வழியிலே செல்லுதல் என விடை வரும். நல்ல வழி என்பது கரடு முரடு இல்லாத நல்ல தரையிலே சாலையிலே நடத்தலா? அன்றி பலர் செல்லும், செல்லுகின்ற பாதையில் செல்லுவதா? அவைக ளெல்லாம் அன்று. தீய காரியங்களைச் செய்யாது, பிறரால் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்யாது, சிலரேனும் எள்ளி நகையாடுதற்குரிய காரியங்களைச் செய்யாது பலராலும் மெச்சுதற்குரியதும், ஒப்புதற்குரியதுமான காரியங்களைச் செய்தலாம்.

ஆங்கில விற்பன்னரான ஸ்மைல்ஸ் (Smiles) என்பார் நல்லொழுக்கம் (Character) என்பது குறித்தே ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அன்னர் நூல் வெளியிட்டுள்ளதாலே ஆங்கில நாட்டில் நல்லொழுக்கமில்லை; அதனுல் அவர் ஒரு நூலெழுதித் திருத்த வேண்டி யிருந்தது; நம் நாட்டிலே, தமிழ் நாட்டிலே அவ்வாறு சொல்ல வேண்டிய நிலையில்லை யென்று பெரும் பாலோர் கருதுதல் கூடும். அங்ஙனமாயின் மிகமிகப் பழங்காலமெனக் கருதப்படும் சங்க காலத்திலுண்டான நூல்களி லொன்றன புறநானூற்றிலே 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே........நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்ற அடிகள் காணப்படல் வேண்டுவதின்றும். அன்றியும் எப்பொருளும் இடையருது வற்புறுத்தப்படா விட்டால் அது வழக்கொழிந்து விடும். இவைகளினுலே நல்லொழுக்கம், நன்னடை என்பன அடிக்கடி நினைவிற்குக் கொண்டு வர வேண்டியதொன்று என்ற செய்தி நிலைபெறும்.

இனி, நல்லொழுக்கத்துக்கு மாறன சில காரியங்களை ஈண்டு விவரிக்கின்றேன். அவைகளைக் கூறுவதற்காகச் சீற்றங் கொள்ளாது அவற்ருலுண்டாகும் நன்மைகளையே நாட வேண்டும். சிலர், பிறர் என்ன செய்கின்றனர் என்று கூர்ந்து கவனிப்பதுண்டு. ஒருவருக்குப் பல காரியங்களிருக்கலாம். அவர்கள் பலவற்றைக் கவனித்துச் செய்ய வேண்டியவர்களா யிருப்பர். நாம் எதற்காகப் போனுமோ அக் காரியத்தைச் செய்து கொண்டு அவர்களது காரியத்திற் றலையிடாமலும், யுக்தி சொல்லாமலும் வரல் வேண்டும். அவ்வாறு செய்வதென்பது நம்மவருள் பலர்க்கு இல்லை யென்றே சொல்லலாம். 'Inquisitiviness is the sign of vulgar mind' என்பதொரு ஆங்கிலப் பழமொழி. பிறர் செயலைக் கூர்ந்து காணல் கீழ் மக்கள் செய்கை யென்பது இப் பழமொழியின் பொருள். இந்தக் குணம் பலரிடத்திலு முண்டு என்பது அவரவர் மனதுக்குத் தெரியும். இவ்வாறு பிறர் செய்வதைத் தமக்குச் சம்

பந்தமில்லாத தொன்றைக் குறித்துக் கவனிப்பதால் நாம் யாரிடம் சென்ருேமோ அவர்களது நட்பைப்பெருது அருவருப்பைப் பெறுகிருேம். ஆனல் ஒருவர் அவரைக் காணச் சென்றவரிடம் ஒரு விஷயத்தைச் சொன்னபோது அதற்குத்தக்க விடையோ, யுக்தியோ, யோசனேயோ சொல்ல வேண்டாமென்பதில்லே. கேட்ட அளவுக்கு நம்மாலியன்றதைச் சொல்ல, செய்ய வேண்டியது நமது கடமையாகும். அதனைத் தாண்டி அவர்கள் செய்யுங் காரியங்களைக் கூர்ந்து கவனித்தலே அடாது என்று கூறலாம்.

சிலர் பிறர் கையில் வைத்து வாசித்துக் கொண்டிருப்பதை அவரது அனுமதியின்றி 'வெடுக்' கென்று பறிப்பதைக் காணலாம். இது மிக்க இழிவான செய்கை யென்பதை அவ்வாறு செய்பவர்கள் அறிவதேயில்லே; உணருவது மில்லே. அப்பொருள் பிறன் கையிலிருந்து பறிப்போருக்கு ஒரு விதமான பற்று, சுதந்திரம், உரிமையுடையதாக விராது என்பது உறுதியான செய்தியாக விருக்கும். அவ்வாறு தமக்குச் சொந்தமில்லாத, பிறருடைய பொருளை உடையவரது சம்மதமின்றி, அனுமதியின்றி, உத்தரவின்றிப் பிடித்திழுக்கின்ருேமே அதனுல் உடையவர் எவ்வளவு வருத்தமடைவார், அருவருப்புக் கொள்வார் என்று பிறர் நினைத்துப் பார்ப்பதேயில்லே. பின்னும் சிலர் 'தங்களுடையது தானே; நாங்கள் மெள்ள காலந் தாழ்த்துப் பார்த்துக் கொள்ளலாமே; நான் கொஞ்சம் ஒரு நிமிஷத்திலே பார்த்து விட்டுக் கொடுத்து விடுவேன்' என்று சொல்லிக் கையிலிருப்பதை யிழுக்கப் பார்க்கலாம். இது நன்கு கல்வி கற்ருேர் முதல் கல்லாதார் வரையிலும், பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் நடக்கு, மொரு நித்தியப்படி நடவடிக்கை. இது எத்துணை அருவருப்புடையது என்பது அவரவர் மனதுக்கு நன்கு தெரிந்த செய்தி. புதியதொன்றை உடையவன் படிக்கு முன் தான் படிக்க வேண்டு, மென்ருே அறிந்து கொள்ள வேண்டு மென்ருே விரும்புவது நல்லொழுக்கமாகாது. இது 'நியூஸ் பேப்பர்' என்ற பத்திரிகையைப் பற்றிய செய்தி மாத்திரமன்று. எதனை யொருவர் கையில் வைத்திருந்தாலும் அதனைப் பிறர்தான் அறிய விரும்புவதைக் குறித்தே ஈண்டு பொதுவாகக் கூறப்படுகிறது. பத்திரிகையைப் பிடுங்குவதைக் குறித்த செய்தியை பின்னர் விவரிப்பேன்.

பிறன் கையிலிருப்பது மற்ெருருவர் அறிந்து கொள்ளத் தகாததுவாக யிருப்பினுமிருக்கலாம். அன்றி அவர் அறிய ஆவலுடைய வராயிருக்கின்ருரோ அவரைக் குறித்த செய்தியாகவே யிருத்தல் கூடும். சிலருக்குக் கேடு விளைக்கக் கூடியதாயு மிருக்கும். அது எவ்வாருயினும் பிறருடைய கையிலிருப்பதை உடையவர் அனுமதியின்றி, சம்மதமின்றி பிறர் எடுத்தல் கூடாது; பறிக்கக் கூடாதென்பது ஈண்டுக் கூறியதாகும்.

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாசன்

(அன்னார் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

பிரப்ஞ்சப் போக்கு—

பன்றி நாடகத்தில் நிகழ்ந்ததோர் விநோத சம்பவம்.

முன்னொரு காலத்திலொரு மனிதன் தினந்தோறுங் கடற்கரைக்குச்சென்று உலாவுகின்ற வழக்கத்துடன் பன்றியினது கத்தல் உறுமல் முதலிய சுபாவங்களையும் சிறிது சிறிதாகப் பழகி வந்தான். இவ் விஷயத்திலவனுக்கு மிகுந்த சாமர்த்தியமுண்டாகவும் அது ஜனங்களுக்கு ஒரு விநோதமாகப் பரிணமிக்கவுஞ் செய்தது. அன்று முதல் அவனுக்குப் 'பன்றி' ('ஸூகரன்') எனப் பிரசித்தமான பட்டப் பெயருண்டாயிற்று. அப்பாலன்றி சில சீடர்களைச் சேர்த்துக்கொண்டு ஒவ்வொரு தேசங்களுக்கும் பட்டணங்களுக்குஞ் சென்று டிக்கட் வைத்துப் 'பன்றி நாடகம்' நடத்திப் பணமும் புகழும் பலவிதப் பட்டாடைகளுஞ் சம்பாதித்து வந்தான். இவ் வண்ணம் பிரபல யோக்கியதை சித்திக்கிருந்த பன்றியைத் திசைகள் தோறும் வாத்திய கோஷங்களுடன் எதிர் சென்று நல்வரவேற்றுபசரிப்பதற்காக ஹாஜராகின்ற யோக்கியர்களுடைய கூட்டமும் வரவர விருத்தியாகிப் பெருகத் தொடங்கிற்று. எங்கே சென்றாலும் பன்றியைப் பற்றிய சம்பாஷணையே கேட்கலாயிற்று. பன்றியினிடத்தில் ஜனங்களுக்குண்டாயிருந்த விசுவாசமும் அன்பும் ஒப்புவமையற்றதாயிருந்ததென்னலாம். இங்ஙனம் நடந்து வரும்பொழுது ஒரு சமயம் இதன்படியே ஒரு மஹாத்மாவிற்கு இப்பன்றி நாடகம் பார்க்க நேர்ந்தது. அன்றைய தினமும் நமது பன்றிக்கு மாமூல் பிரகாரம் ஏராளமான பண வரும்படியும் தங்க மெடல்களும் கிடைக்காமலிருக்கவில்லை. அதற்கடுத்த தினத்தன்று அம் மஹாத்மாவானவர் பின் வருமாறு ஒரு விக்ஞாபனப் பத்திரம் அச்சிட்டுத் தன்டோரா மூலமாகப் பிரசித்தப் படுத்தினார் :—

முக்கிய அறிவிப்பு

'இன்றிரவு 8-15 மணிக்கு இந் நகரத்தின் கண்ணேயுள்ள டவுன் ஹாலில் இது காறும் கனவான்கள் பார்த்திருக்கின்ற பன்றி நாடகங்களைப் பார்க்கினும் பன் மடங்கு விசேஷமாய் 'ஓர் நவீன சிங்காரப்பன்றி நாடகம்' வெகு விநோதத்துடன் நடத்துவதாக நிச்சயித்திருக்கின்றமையால் மஹா ஜனங்கள் இத்தகைய நற்றருணத்தை வீணே கழித்து விட மாட்டார்களெனமனப்பூர்வமாய் நம்புகின்றோம்.

N. A. நாடகம் பார்ப்பதற்காக யாதொரு சார்ஜும் வசூல் செய்யப் படமாட்டாது.

இங்ஙனம்,
மானேஜர்

புதிய பன்றி நாடகக் கம்பெனி.'

இவ் விக்ஞாபனத்தைக் கண்டும், கேட்டும் பல்லாயிரக் கணக்கான மஹா ஜனங்கள் மிக உற்சாகத்துடன் நோட்டீஸிற் குறிப்பிடப்பட்ட டவுன் ஹாலை நோக்கி விரைவிற் சென்று ஒருவருக் கொருவர் முட்டித் தள்ளிக் கொண்டு நாடக சபையில் எள்ளு நுழைய மார்க்கமின்றி இடத்தைப் பூர்த்தி செய்தனர்.

'டங்' என்று மணி 8 அடித்தவுடன் நாடக மாரம்ப மாயிற்று. முன் நடத்தப் பட்டு வந்த பன்றி நாடகம் திரைமறைவிற்றான் நடத்துவது வழக்கமாதலால், அந்த சாஸ்திரத்தை யனுசரித்துத் திரைக்குள்ளேயே ஆட்ட மாரம்பிக்கப் பட்டதென்று சொல்ல வேண்டும். சத்தமும் உறுமலுந் தொடங்கிய வுடன் சபையிலிருந்தவர்களுக்குக் கொஞ்சம் மனக் களிப்புண்டா யிற்றாயினும், நாடக சமாப்தியில் வெறுப்பும் ஆத்திரமும் அதிகமுண்டாயிற் றென்பது மட்டுமல்ல. ஆனால் அவர்கள் அம் மஹாத்மாவைத் துப்பியும், வைதும், அடித்தும் மற்றும் பலவாறு துன்பப் படுத்தியும் விட்டார்கள். '

இந்தச் சம்பவங்கள் ஒருவாறு ஓய்ந்த பின் அந்த மஹா புருஷன் இவ் வண்ணம் மொழியலானார்:—

சபையோர்களே !

பன்றி நாடகம் நடத்தி வருகின்ற உங்களுடைய 'பன்றியை' (இப் பெயர் கொண்டு முதலாவது கனவானை) நீங்கள் மிகவுங் கொண்டாடிச் சம்மானிக்கின்றீர்கள் நான் 'போலிப் பன்றியாக நடித்துக் காட்டாது' அசல் பன்றியைக் கொணர்ந்து அதன் இயற்கையான அற்புதச் செயல்களைக் காட்டிக் கத்தும்படி செய்தேன். 'இது உண்மையான பன்றி' என்னும் தத்துவத்தை நீங்கள் தெரிந்து கொண்டதனு லல்லவா யாதொரு குற்றமு மின்றிய என்னை இவ்வாறு உபத்திரவிக்கும்படி நேர்ந்தது ?

இவ் வண்ணம் புகன்று அம் மஹாத்மா அவ்விடம் விட்டகன்றனர்.

இதன் தத்துவார்த்தம்

ஸத்திய ஸ்வரூபனாகிய பரமாத்மாவினிடத்தில் போலியாய்த் தோற்றிக் கானற் சலம்போற் காணப்படுவதும் கணத்தில் மறைவதுமாகிய இவ் வுலகச் செயல்களை சகல ஜனங்களும் விரும்பிப் புகழுகின்றார்களே யன்றி உண்மையான சுவரூபத்தை விரும்புவதற்கோ போற்றுவதற்கோ ஜனங்கள் தயாராக இல்லை யென்பது மட்டுமின்று; ஆனால் பரமார்த்த தத்துவங்

களை யுபதேசிக்கின்ற பெரியார்களை யியன்றவாறு உபத்திரவித்தற்கும் நிந்தித்தற்கு மல்லவோ ஆளாகிவிடுகின்றார்கள்? படிப்போர்களே! இஃதன்றோ விந்தையினும் விந்தை!

கம்பீர சுபாவம்:—

சிங்கமும் மாடப் புருவும்

சிங்கம் யானையினுடைய மஸ்தக (தலை) மாம்சம் முதல் மிகக் கொழுப்பும் நெய்ச்சத்து மடங்கிய பலவிதமான இறைச்சிகளையும் இஷ்டப்படி தின்று, நிர்ப்பயமாயும், நிகரின்றியும் அடர்ந்த வனாந்தரங்களி லெங்குஞ் சுற்றித்திரியும். அது வருட மொன்றுக்கு 'உரிய (ருது) காலத்தில்' ஒரு முறை அல்லது இரு முறை மட்டுமே அதன் பேடுடன் கூடிச் சிற்றின்பம் நுகருவது வழக்கம். மாடப்புருக்களோவெனில் சிறிதுஞ் சாரமின்றிய கல் துண்டுகளையும் மற்றும் பல சிறு தானிய வர்க்கங்களையும் பொறுக்கித் தின்னும். ராஜாளி முதலிய பறவையரசுகளைக் கண்டு பயந்தும் வாழும். ஆனால், அவை நாள்தோறும் பன்முறை பேடுடன் கூடி நூற்றுக் கணக்கான முட்டைகளிட்டு வெகு சொற்ப காலத்திற் குள்ளேயே நாசமடைந்து விடுகின்றன.

அதுபோல் மனதின் சாபல்லியமின்றி கம்பீர சுபாவம் வாய்ந்த மானிடர்கள் எவ்வளவு புஷ்டியும் மஸ்துமுள்ள ஆகாரங்களைப் புஜித்தாலும் அவர்கள் 'இந்திரியங்களைஜயித்த' வீரர்களாயும் தத்துவத்தை யறிந்தவர்களாயு மிருப்பார்கள். சஞ்சல சித்தமுள்ள நரர்கப்பார வென்றால் எவ்வளவு நாள் பட்டினி கிடந்து சரீரத்தை வற்றச் செய்தாலும்—சாரமற்ற உணவுகளை யுட்கொண்டு வந்தாலும் அவர்கள் மாடப் புருக்களைப் போல் சிற்றின்பப் பிரியர்களாயும் விலையேறிய வாணாளை வீணே இழப்பவர்களாயும் ஆகின்றார்கள்.

உட் சரீரத்தைப் பாதுகாத்தல்:—

வாழைக்காயும் அதன் தோலும்.

வாழைக்காயினுடைய மேல் தோல் அதன் வளர்ச்சிக்கும் பக்குவத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றது. முற்றிப் பழுக்கின்ற வரையில் அதன் தோலைக் கிளிகள், அணில்கள் முதலிய பகைவர் அதனைத் தின்று உதிர்ந்து விடா வண்ணந் தோட்டக்காரர்கள் மிக்க ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வருவது வழக்கம். ஆனால் அவை நன்றாகப் பருத்துப் பக்குவ (பழ) மானவுடன் மேல் தோலை அலக்ஷியமாய்த் தள்ளி விடுவார்கள். அதுபோல முமுக்ஷுக்கள் (முக்தி பெற விரும்புவோர்கள்) பிரம்ம(ஸ்வரூப) மாகின்ற வரையில் அந்த பக்குவ நிலையை யடைய வேண்டிக் கிடைத்திருக்கின்ற இச் சரீரத்தை இராகத் துவேஷ (விருப்பு வெறுப்பு) முதலியனவாகிய சத்துருக்களுக் கிரையாகாமலும் ஓரளவுள்ள உணவுகளைக் கொடுத்துப் போஷித்து வந்து ஜீவன் முக்த (கைவல்லிய) பதமடைந்தவுடனேயே அச் சரீரத்தைப் பொருட் படுத்தாமலிருந்து விடுவார்கள்.

குறுகிய மனம்:—

ரப்பரும் உபதேசமும்

ஒரு ரப்பர்த் துண்டை ஒரு கையினால் பிடித்துக் கொண்டு மற்றோர் கையினா லிழுக்குந்தோறும் அது நீண்டு கொண்டே வரும். கையை விட்டு விட்டால் அது முன்போலவே

இருந்து விடும். அதுபோல, ராகத் துவேஷங்களாகிய சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கின்ற பாமரர்களின் ஹிருதயமானது ஸத்குரு முகமாக நல்ல உபதேசங்களைக் கேட்கும் போதுதான் கடவுள் விஷயத்தில் நிலை பெற்று நிற்கும். அம் மஹாத்துமாவானவர் உபதேசஞ் செய்யாது ஒழிவடையுங் காலத்தில் பாமரர்களின் ஹிருதயம் முன்போலவே சுருங்கியதாய்விடும். ஆதலின் நல்லோர் உபதேசத்தை நாள்தோறும் நாடுதல் நலமிக வளிப்பதாம்.

இயற்கை வலிது:—

காகமும் பச்சைக் கிளியும்

ஒரு மனிதன் பாலையும் சுத்த அன்னத்தையுங் கொடுத்து ஓர் காகத்தையுங் கிளியையும் வளர்த்து வந்தான். இவைகளிற் கிளியானது ஷட்ஆகாரத்தினாலேயே மனங்களித்துப் பரம திருப்தியோடு வாழ்ந்து வந்தது. காகமோ, அவ் வுணவுகளினால் திருப்தி யடையாது இடையிடையே கண்ட மலத்தையுந் தின்று கொண்டு வந்தது.

அதுபோல ஆசைகளை யொழித்தவனாகிய பக்தன் கடவுளினது உண்மை நிலையாகிய சாரத்தை மாத்திர முண்டு, 'ஞானாகாசமாகிய மெத்தையிற் படுத்து'க் கவலையற்றவனாய் சுகித்திருக்கின்றான். உலக சம்பந்தமாகிய இன்பங்களை விட்டு நீங்காத பக்தனே வென்றால் குருவின் சந்நிதானத்தி லிருந்து உத்தம உபதேசங்களைக் கேட்கும்போது மட்டுமே பிர்ஹ்மானந்தச் சுவையை யனுபவிப்பதில திருப்தி யுள்ளவனாயும் மற்றக் காலங்களில் சிற்றின்ப நுகர்ச்சியில் விருப்ப முள்ளவனாய் மிருப்பான்.

ஞானத்தைப் பருகுதல்:—

மனிதனும் நீரட்டையும்,

ஒரு நானுடைய சரீரத்தில் நீரட்டையைக் கொண்டு கடிக்கச் செய்வதாக வைத்துக் கொள்வோம். அந்த அட்டையினுடைய வேக முழுதும் இரத்தத்தினாற் பருத்து விம்மும் பொழுது அந்த அட்டையானது தானாகவே தேகத்தை விட்டு விடுகின்றது.

அவ்வாறே மானிடனும் கடவுளது சிருஷ்டியாகிய இப் பேருலகமாஞ் சரீரத்தினின்றும் ஞானமாகிய இரத்தத்தைப் புத்தியாகிய முகத்தினால் சிறிது சிறிதாய்ப் பருகத் தொடங்குகின்றான். அவனது ஹிருதயத்திற்குள் ஞானமானது நிறைந்து விட்டால் அவன் இப் பிரபஞ்சமாகிய சரீரத்தை ஒரு சிறிதுஞ் சிரமமின்றி விடுத்துக் கேவல புருஷனாகித் (தன்னில் தானே மகிழ்ந்தவனாகி) விடுகிறான்!

நல்ல புத்தி

(சரத் சந்திர சட்டர்ஜி)

வங்காளி மூலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்

—எஸ். கிருஷ்ணன்

ராமலாலுக்கு வயது குறைவாயிருந்த போதிலும் துஷ்ட புத்திக்குக் குறைவில்லை. கிராம வாசிகள் அவனைப் பயந்து வசித்தார்கள். எங்கிருந்து எந்த வேளை எந்த விதவிபத்து நேருமோ என்று ஒருவனால் எளிதில் ஊகிக்க முடியாது. அவனுடைய மாற்றாந்தாய் மகன் சாமலாலும் சாந்த சுபாவமுடையவன், என்று சொல்ல முடியாது. ஆனால் சிறு குற்றங்களுக்கு அவன் பெருந் தண்டனை விதிப்பதில்லை என்பது உண்மையே. ஜமீந்தாரிடம் வேலை பார்ப்பதுடன் தன் நில புலன்களையும் கவனித்து வந்தான், வீட்டு நிலைமை வேடிக்கையானது. குளம் வயல், தோப்பு, துறவு, பத்துப் பதினைந்து பாக்தி*க் குடிகள், சொற்பக்கையிருப்புப் பணம் இவைகள் அவனிடமிருந்தன. சுமார் பதின்மூன்று பதினான்கு வருஷங்களுக்கு முன் நடந்த சமாச்சாரம்...........சாமலால் மனைவி நாராயணி புக்ககம் வந்த அதே வருஷம் ராமனுடைய விதவைத்தாய் உயிர் நீத்தாள். தன் குடும்பத்தையும் பால் மணம் மாறாத இரண்டரை வயதுக்குழந்தையையும் பதின்மூன்று வயதுள்ள இளம் மருமகள் நாராயணியிடம் ஒப்படைத்து விட்டுப் போய் விட்டாள்.

இவ்வருஷம் எங்கும் சுரம் பரவியிருந்தது. நாராயணிக்கும் காய்ச்சல். சுற்றுப் புறங்களிலுள்ள மூன்று நான்கு கிராமங்களுக்கு நீலமணி பாபு ஒரு டாக்டர் தான். அவரும் அரை வைத்தியர். பரீக்ஷை முழுதும் தேறாதவர். சமயத்துக்குத் தகுந்தாற்போல் அவருடைய பீசும் ஒரு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் ஆக உயர்ந்தது. இத்துடன் ஆரோட்டு, மைதாமா இரண்டு சேர்ந்து கொயினைப் பொடியும் சுவையுள்ளதாகி விட்டது. ஏழு நாட்களுக்குப் பிறகும் நாராயணிக்கு சுரம் தணியவில்லை. சாமலாலுக்குக் கவலை அதிகமாயிற்று.

வீட்டு வேலைக்காரி நிர்த்திய காலி வெட்கத்துடன் திரும்பி வந்தாள். சொன்னாள்:—டாக்டர் சாபு இன்றைக்கு வருவாராம்; ஆனால் நாலு ரூபாய் கொடுத்தால், இல்லாவிட்டால் வர மாட்டாராம்.

* பாக்தி: வங்க தேசத்து கீழ் சாதியினர் மீன பிடித்தல் உழவு சண்டை போடுதல் இவையில் பேர் போனவர்கள்.

சாமலானுக்குக் கோபம் வந்து விட்டது. சொன்னார்...........அப்படியா? நாசமாய்ப் போகிறவனுக்கு நானும் நாலு ரூபாய் கொடுத்துவிடுவேனே. வந்து தொலைக்கலாகாதா? பணம் பெரிதா உயிர் பெரிதா? சனியனை அழைத்துக் கொண்டு வாப்போ.

நாராயணி உள் புறம் இருந்தபடியே விஷயத்தைக் கேட்டாள். சோர்வுற்ற நடுங்கிய குரலில் அவள் சொன்னாள் ....இங்கே வாருங்கள். ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்? இன்றில்லா விட்டால் நாளைக்கு வருகிறார். ஒரு நாள் தாமதித்தால் என்ன கெட்டுவிடப் போகிறது?

ராமலால் கொய்யா மரத்தடியில் முற்றத்தில் பறவைக் கூண்டு செய்து கொண்டிருந்தவன் எழுந்து வந்தான். சொன்னான்—'இருக்கட்டும், நான் போகிறேன்'.

மைத்துனன் குரலைக் கேட்டதும் நாராயணி பயந்து போய் எழுந்து உட்கார்ந்தாள். சொன்னாள்... ... . ராமனைத் தடுத்து விடுங்கள். அடே ராமா! நீ போகாதே. என்னுணை போகாதே. நீ எப்பேர்ப்பட்டவன் தெரியுமே. போய் சண்டை போடாதே அப்பா!

ராமன் இதைக் கேட்கவே இல்லை. வெளியே போய்விட்டான். கையில் நாணல் குச்சியுடன் உட்கார்ந்திருந்த ஐந்து வயதுள்ள அவனுடைய அண்ணன் மகன், ராமன் வெளியே செல்வதைக் கண்டு கேட்டான்—சித்தப்பா, கூண்டு பண்ணமாட்டாயா?

'பண்ணித் தருகிறேன்' என்று சொல்லிக் கொண்டே ராமன் போய் விட்டான்.

நாராயணி விதியை நொந்து கொண்டு அழு குரலில் சொன்னாள் கணவனிடம்:—நீங்கள் அவனை ஏன் போக அனுமதித்தீர்கள்? அவன் என்ன அநியாயம் பண்ணிவிடப்போகிறான் என்று பார்க்கலாம்.

சாமலானுக்கு முன்னாலேயே கோபம். இன்னும் கடுப்புடன் சொன்னார்—நான் என்ன செய்வேன்? நீ சொல்லியே கேட்காதவன் நான் சொன்னால் நின்று விடுவானா?

'அவன் கையை ஏன் பிடிக்கவில்லை? இந்தப் பாழாய்ப் போகிறவனாலே நிமிஷப் பொழுது கூட ஓய்வு கிடையாது. அமைதி கிடையாது. நான் செத் தொழிந்தால் எவ்வளவோ நல்லது! நித்தோ! நீ நின்று கொண்டு இராதே. போ அம்மா. போலாவை அனுப்பி அவனை எப்படியாவது சமாதானப்படுத்தி என்கிட்ட அழைத்துவரச் சொல்லு. கனம்வரைக் கூடப் போயிருக்க மாட்டான் என்று நினைக்கிறேன்.'

நித்திய காலி போலாவைத்தேடிச் சென்றாள்.

ராமன், நீலாமணி டாக்டர் வீட்டை அடைந்தான். டாக்டர் தன் டிஸ்பென்ஸரி—அதாவதுஒரு உடைந்த அலமாரி முன் கால் ஒடிந்த மேஜை மேல் மருந்து எடை போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். நாலைந்து நோயாளிகள் திறந்த வாயுடன் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ராமனைக் கூர்ந்து பார்த்து விட்டு நீலாமணி டாக்டர் தன் வேலையில் மூழ்கி விட்டார்.

ராமன் கணப்பொழுது பேசாமல் நின்றான்—பிறகு சொன்னான்—மதனிக்கு ஏன் இன்னும் சுரம் குறையவில்லை?

டாக்டர் , கையிலிருந்த கத்தியைப் பார்த்துக் கொண்டே பதிலளித்தார் —அதுக்கு நான் என்ன செய்வேன்? மருந்து கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன்.

'மண்ணாங்கட்டிகொடுக்கிறீர். கெட்டுப்போன மைதா மாவால் சுரம் 'நீங்கி விடுமா'?

இதைக் கேட்டதும் டாக்டருடைய முகம் சிவந்தது. கத்தி, மருந்து எல்லா வற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு ராமனை உற்றுப் பார்த்தார். இவ்வளவு முட்டாள்தனமாய் அவரிடம் பேசத் துணிபவனிருக்கிறான் என்று அவர் நினைத்ததே யில்லை.

கணப் பொழுதில் அவர் இரைந்தார்—கெட்டுப்போன மைதா மாவா? அப்படியானால் அதை வாங்க ஏன் வருகிறாய்? காலைப் பிடித்துக் கெஞ்சி அழைத்து வர உன் அண்ணன் ஆள் அனுப்புவதேன்?

'இந்தப் பாகங்களில் வேறு டாக்டர் இல்லாததால் கூப்பிட்டனுப்புகிறார். இருந்தால் அழைக்கவே மாட்டார்.'

அறைக்குள் இருந்த மனிதர் திகைப்புடன் அவன் சொல்வதைக் கேட்டனர். டாக்டரைப் பார்த்த வண்ணம் ராமன் சொன்னான்—நீ இழி குலத்தோன். ஆனதால்தான் 'காலில் விழுந்து அழைக்கிறார்' என்கிறாய். மதனி ஆணையிட்டிருக்கிறாள். இல்லா விட்டால் உன் பல்லை உதிர்த்திருப்பேன். சரி, கேட்டுக் கொள். நல்ல மருந்தை எடுத்துக் கொண்டு உடன் வீட்டுக்கு வந்து விடு. தாமதிக்காதே. இன்றைய மருந்தினால் நோய் நீங்கா விட்டால் இன்னும் நன்றாக வளராத ஒட்டுமாஞ் செடிகள் இருக்கின்றன பார்; அவைகளில் ஒன்று கூட இன்று இரவு இங்கு இராது. நாளைக்கு வந்து இந்த சிசாக்களையும் தூள் தூளாக்கி விடுவேன்.

இவ்வளவும் சொல்லி விட்டு அவன் உடன் வெளியேறினான்.

கையில் கத்தியுடன் டாக்டர் உட்கார்ந்திருந்தார்.

ஒரு கிழவன் கொஞ்ச தைரியமாய் முன் வந்து சொன்னான்:—'டாக்டர் ஸாஹெப், இன்னும் தாமதியாமல் போங்கள். நல்ல மருந்து இருந்தால் எடுத்துக் கொண்டு புறப்படுங்கள். அவன் பெயர் ஸ்ரீராமன். அவன் நினைத்ததை முடித்தே நிற்பான்.'

டாக்டர் கத்தியை வைத்துக் கொண்டு சொன்னார்—'நான் இதோ போலீசு இன்ஸ்பெக்டரிடம் போகிறேன். நீங்கள் எல்லோரும் சாட்சி.'

உபதேசித்த கிழவன் மேலும் சொன்னான்—சாட்சி சொல்லவா! யார், சாட்சி சொல்வது? கொய்னாப் பொடி சாப்பிட்டு காது இரைகிறது. ராம பாபு என்ன சொல்லி விட்டுப் போனார் என்று காதில் விழவேயில்லை. மேலும் போலீசு இன்ஸ்பெக்டர் என்ன செய்வார்? அந்தப் பையன், பார்வையில் சிறியவன்; ஆனால் அவனைச் சேர்ந்த பாக்கிச் சிறுவருடைய கூட்டம் சிறிதல்லவே; வீட்டை நெருப்பு வைத்துக்'கதவை வெளியி

விருந்து பூட்டி எரிய விட்டால் கூட போலீசு வராது. போலீசு இன்ஸ்பெக்டரால் ஒரு சுக்கும் ஆகாது. சாட்சி கீட்சி ஒன்றும் சொல்ல முடியாது. அவனைப் பயப்படுகிருர்கள். அவன் சொன்னது போல் செய்வதே நல்லது. என் நாடியைப் பாருங்கள். ரொட்டி கிட்டி சாப்பிடலாமா?

டாக்டர் கோபத்தால் குமுறிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். கிழவன் நாடி பார்க்கச் சொன்னதும் அந்தக் கோபக்கனல் தழல் விட்டெறிய ஆரம்பித்தது. அதட்டிக் கொண்டே சொன்னுர்:—குடி முழுகிப் போய் விடுமாம். சாட்சி சொன்னுல்? போ, வெளியே போ. யாருக்கும் நாடியும் பார்க்க முடியாது; கீடியும் பார்க்க முடியாது. சாகக் கிடக்கிறவனுக்கும் மருந்து கொடுக்கப் போவதில்லை. உங்கள் கதி என்னுகிறது பார்க்கிறேன்.

கிழவன் ஊன்று கோலை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றுன். 'எங்கள் குற்றமில்லை. டாக்டர் ஐய்யா! அவனை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவன் கூட்டம் பெரும் சைத்தான் கூட்டம். ஆம்; அவரிடம் அறிவித்து விடவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் தான் போலீசுக்கு தெரியப்படுத்திஞேம் என்று நினைத்து விடுவார்கள். சிறு கத்திரித் தோட்டம் இருக்கிறது. செடிகளும் பெரிதாகி விட்டன. இரவு ஒன்று விடாமல் தீர்த்துக் கட்டி விடுவார்கள். பாக்கிப் பையன்களுக்கோ இரவு தூங்குவதென்பதே தெரியாது. போலீசுக்குப் பிறகு போங்கள். மருந்து எடுத்துக் கொண்டு போய் முதலில் அவரைச் சமாதானப் படுத்துங்கள்.'

கிழவன் போய் விட்டான். மிருந்தவரும் ஒருவர் பின் ஒருவராய் சென்றனர். நீலாமணி பெரு மூச்சு விட்டார். மானிட வாழ்க்கையின் கடைசி அனுபவம்—உலகத்தின் மெய்யறிவுப் பொறியான 'உலகில் ஒரு போக்கிரிப் பயலுக்கும் உதவி செய்யக் கூடாது' என்ற மந்திரத்தை ஜபித்துக் கொண்டே வீட்டிற்குள் சென்றுர்.

நாராயணி ஜன்னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டு உள்ளம் குமைந்தாள். இப்படி இருக்கையில் ராமனும் திரும்பி வந்தான்.

'கோவிந்தா, வா, கூண்டு கூட்டுவோம்'

நாராயணி கூப்பிட்டாள்—அடே ராமா இங்கே கொஞ்சம் வா.

ராமன் சிறு மூங்கிற் குச்சிகளை வரிந்து கொண்டே சொன்னுன்.— 'இப்போ முடியாது. வேலை செய்து கொண்டிருக்கிறேன்.'

நாராயணி அதட்டிக் கொண்டே சொன்னுள்—சொன்னுல் தெரியவில்லை; உடனே வா இங்கே.

ராமன் சட்டென்று எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு எழுந்தான். மெதுவாய் மதனியின் அறையில் போய் விரிப்பில் நாராயணியுடைய கால்மாட்டில் உட்கார்ந்தான். நாராயணி கேட்டாள்—டாக்டர் வீட்டில் இருந்தாரா?

'ஆம்'

'அவர்கிட்ட என்ன சொன்னுய்?'

'வரச் சொன்னேன்'.

நாராயணிக்கு நம்பிக்கை ஏற்படவில்லை; சொன்னுள்—வர மட்டும்தான்

சொன்னுயா? வேறு ஒன்றும் பேச வில்லையா?

ராமன் பதிலளிக்க வில்லை.

'சொல்லு. இன்னும் அவரிடம் என்ன சொன்னுய்?

'சொல்ல மாட்டேன்.'

நித்திய காவி வந்து சொன்னுள்—டாக்டர் ஸாபு வருகிருர்.

நாராயணி போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு புரண்டு படுத்தாள். ராமன் ஓடிப்போய் விட்டான். சொற்ப சமயத்திற்குள் டாக்டர், சமலாவுடன் வந்தார். டாக்டர் தன் வேலையை முடித்து விட்டு சொன்னுர்—'அம்மா காய்ச்சல் தணிவதும் ஏறுவதும் டாக்டர் சொல்படியா நடக்கிறது? இரண்டு நாள் சாவகாசம் கொடுத்திருக்கிருன் உங்கள் மைத்துனன். இதற்குள் சுரம் இறங்கி விட்டால் நல்லது; இல்லா விட்டால் எங்கள் வீட்டை நெருப்பு வைத்து விடுவான்.

நாராயணி வெட்கித் தலை குனிந்தாள். சொன்னுள்—'அவன் அப்படித்தான் பேசுவான். நீங்கள் பயப்பட வேண்டாம்.'

டாக்டர் சொன்னுர்—அவனைச் சேர்ந்த ஒரு கூட்டம் இருக்கிறதாம். அவன் சொவ்வதுக்கும் செய்வதுக்கும் வேறு பாடு கிடையாதாம். இதனுல் தான் பயப்படுகிறேன். நாங்கள் மருந்து கொடுப்போம்; ஆனுல் உயிரைக் கொடுக்க முடியுமா?

நாராயணி பேசாம லிருந்தாள். பிறகு சொன்னுள்—அவன் ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள் சிறை புகுந்துதான் நிற்பான் என்று எங்களுக்குத் தெரியும். ஆனுல் அவன் எங்களையும்கூட இழுத்துக் கொண்டு போகாமலிருக்க வேண்டுமே என்றுதான் பயம்.

இன்று நீலாமணி பாப தன் அறையில் பெட்டியைத் திறந்து கலப்பில்லாத கொய்னுப் பொடியும் புது மருந்தும் எடுத்து வந்திருந்தார். அதைக் கொடுத்து சமாதானம் சொல்லி விட்டுப் புறப்படுகையில் சாமலால் அவரிடம் நாலு ரூபாய் நீட்டினுர். டாக்டர் அடங்கிய குரலில் சொன்னுர்—நீங்கள் இதென்ன செய்கிறீர்கள்? நான் வாங்கும் பீசு ஒரு ரூபாய் அதிகமாய் வாங்க மாட்டேன், அப்படி என் வழக்கமல்ல. சாம்பாபு! ரூபாய் இரண்டு நாளைக்குப் பிரயோஜனம்; ஆனுல் தர்மம் நிலை நிற்கும்'.

இதே வீட்டில் இரண்டு நாட்களுக்கு முன் இரண்டு ரூபாய் பீசு வாங்கியதையும் அவர் மறந்து விட்டார். சாம்பாபு உண்மையைஉணர்ந்து கொண்டார். எதெப்படி யானுலும் நாராயணிக்கு உடம்பு சுகமாயிற்று; வீட்டு வேலையும் முன்போல் ஒழுங்காக நடக்க ஆரம்பித்தது.

(தொடரும்)

தேனீ

அறை யறையாய்க் கூட்டினை
அழகுடனே அமைக்கவே
நிறை புலமை ஊட்டிய
நெடுந் தகையார்? சொல்லுவாய். (1)

தேன் சேர்த்து வைப்பதற்குத்
தேர்ந்து நல் மெழுகதனை;
ஊணுருக்கி உண்டாக்க
உரைத்தவரைக் கூறிடுவாய். (2)

ஆரமுதம் அளித்து நிதம்
அனைவரையுங் காத்திடினும்;
வேறு விஷந் தந்து நீ
மாறுபட லாகுமோ? (3)

அணு வணுவாய்ச் சேர்த்த நின்
அரிய பொருள் அனைத்துமே;
கணப் பொழுதில் கைவிட்ட
காரணத்தைக் காட்டிடுவாய்? (4)

கால் காசும் முடக்காது
கனத்த பொரு ளாக்குதற்குச்
சால்புடனே நீ யறிந்த
சங்கதியை சொல்லிடுவாய்! (5)

மலர்தோறும் மது வெடுத்து
மண்ணுள்ளோர் வாழ்த்திடவே
புலர் வதன்முன் னெழுந்திருந்து
பூங்காவிற் செல்லு கின்றாய். (6)

உன்னைப்போ லுழைத்திடவே
ஒருவருக்கும் ஏலாதே.
நின்னைப் போல் வருவாயை
நிலமதிலே பெற்றவர் யார்? (7)

மஹாகவி பார்வி

—சொக்கலிங்கம் பிள்ளை

வட மொழியில் கிராதார்ஜுனீயம் என்ற பெயருடைய மிகவும் பெரிய ஒரு காவியம் இருக்கிறது. அதை இயற்றிய மஹாகவி பார்வியின் பெயர் ரொம்பவும் பிரசித்தி வாய்ந்தது. அவரைப்பற்றிய ஒரு கதை அடியில் எழுதப்பட்டிருக்கிறது.

பார்வி தாரா நகரத்தில் வசித்தவர். அவருடைய தகப்பனார் பெயர் ஸ்ரீதரர். தாயார் பெயர் ஸுசீலை. அவருக்கு அந்நியத்தில் சந்திர கீர்த்தி என்ற கிருஹஸ்தருடைய பெண் ரஸிகா என்பவளை விவாகம் செய்யப்பட்டிருந்தது. பார்வியினுடைய தகப்பனார் பெரிய வித்வானாயிருந்தார். பார்வி தன்னுடைய தகப்பனாரைக் காட்டிலும் மேம்பட்ட வித்வானானார்.

சாஸ்திர வாதத்தில் பார்வி நூற்றுக்கணக்கான பண்டிதர்களை வென்றார். இந்தக் காரணத்தால் அவருடைய பிதாவுக்கு இந்த விஷயம் பிடிக்கவில்லை. அவர் பார்வியினுடைய காவத்தைப் போக்க விரும்பினார். இவர், 'கர்வம் வித்வத் தனத்திற்குப் பெரிய சத்ரு, யார் தன்னை, நானும் ஒரு பெரிய மனிதன் என்று நினைக்கிறானோ, அவனிடத்தில் இந்த கர்வம் உண்டாகிறது. அவனுடைய உயர்ந்த நிலை தடைப் படுகிறது' என்று சொன்னார்.

ஆகையால் அங்கும் இங்கும் பார்வியை குறை கூற ஆரம்பித்தார். அவர், 'உனக்கு ஒன்றும் தெரியாது. நீ பெரிய முட்டாள். நீ ஒன்றும் அறியாத பையன்' என்று சொன்னார். பிதாவினுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு பார்வி வெறுப்படையலானார். எப்பொழுது "பிறருக்கு முன்னிலையில் தன்னைக் கண்டிப்பதைப் பார்த்தாரோ அப்பொழுது அவர் மிகுந்த கோபாவேசமடையலானார். அவருடைய கோபம் தினம் தினம் வளர்ச்சியடைந்தது. கடைசியில் ஒரு நாள் மிகுந்த ஆத்திரத்தில் மூழ்கி இரவு நேரத்தில் தன்னுடைய பிதாவைக் கொலை செய்ய எண்ணங்கொண்டார். அந்த தினத்தில் அவர் மிகவும் வருத்தமுள்ளவரா யிருந்தார். ஒன்று கூடச் சாப்பிடவில்லை.

அவர் அன்று இரவு வீட்டிற்குள் தாயார் தகப்பனார் தூங்கிய பிறகு, தகப்பனாரைக் கொன்று விடும் நினைவுடன் அங்கு ஒளித்திருந்தார். இதற்குள், தன்னுடைய மாதா பிதா பேசிக்கொண்டவைகளை அடியிற் கண்டபடி கேட்டுக்கொண்டிருந்தார்:—

தாய்—இன்று பார்வி ஒன்றும் சாப்பிடவில்லை. பகல் முழுவதும் வருத்தமாக இருந்தான்.

தகப்பனார்—இதற்குக் காரணம் என்ன?

தா—இதன் காரணங்கள் தங்களுக்குத்தான் தெரியுமே?

த—எப்படி?

தா—தாங்கள் எப்பொழுதும் பார்வியை தூஷணையே செய்கிறீர்கள்.

அவனை எல்லாருக்கும் முன்னால் முட்டாள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இதனால் அவனுக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. தாங்கள் இப்படிச் செய்வதை விட்டுவிடுங்கள். தங்களுடைய இந்த வழக்கம் நன்றாக இல்லை. பையன் முட்டாள் அல்ல; பெரிய வித்வானுக்கும்.

த—பார்வி வித்வான் மட்டும் இல்லை. ஆனால் பெரிய வித்வான். இதில் சந்தேகம் இல்லை. நான் அவனுடைய வித்வத்தைப் பார்த்து ரொம்பவும் மகிழ்ச்சியா யிருக்கிறேன். ஆனால் என்னுடைய நிந்தனைக்கு ஒரு காரணம் உண்டு. பார்வி இப்பொழுது இருக்கிறதைக் காட்டிலும் பெரிய வித்வானுகி அவனுடை கீர்த்தி தூர தேசங்களிலும் பரவுவதையே விரும்புகிறேன். ஆனால் கர்வம் இந்த விஷயத்தில் ரொம்பவும் தடை செய்கிறது. யார் தன்னுடைய வித்தையால் அலங்கார மடைகிறானே, அவன் மிகுந்த உயர்ந்த நிலையை அடைய முடியாது. என்னுடைய அன்பான குழந்தையின் உயர் நிலை தடைப்படுவதை நான் விரும்பவில்லை.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் பார்வியின் தலை வெட்கத்தால் சூழப்பட்டு கீழே குனிந்துவிட்டது. அவருடைய கோபம் காற்றாய்ப் போய்விட்டது. பிள்ளையின்மேல் தகப்பனுக்குள்ள அன்பைப்பார்த்து பார்வியின் கண்களில் கண்ணீர்த் தாரை பெருக்கெடுத்து ஓடியது. அத்துடன் அவருக்கு தகப்பனைக் கொலை செய்ய மனதில் நினைத்த எண்ணமும் சேர்ந்து மிக இரக்கப்படவும் நேர்ந்தது.

அப்படி இப்படி இரவைக் கழித்தார். விடிந்ததும் பார்வி தகப்பன் முன்னிலையில் வந்தார். பிதா! மனதில் தகப்பனைக் கொலை செய்ய நினைத்ததற்கு பிராயச்சித்தம் என்ன!" என்று கேட்டார். 'ஆறு மாதம் மாமனார் வீட்டில் இருக்க வேண்டும்' என்று தகப்பனார் சொன்னார். பிறகு பார்வி தன் பிதாவினிடத்தில் எல்லா விஷயங்களையும் சொல்லிக் கேட்டார். பிதா, இந்தப் பிராயச்சித்தம் முட்டாள்களுக்கும், படியாதவர்களுக்குமல்லவோ ஏற்பட்டது. நீயோ வித்வான்; உனக்காக, இரக்கம் அல்லது பச்சாத்தாபம் எல்லா வற்றிலும் உயர்ந்த பிராயச் சித்தம் மாமனார் வீடு போக வேண்டிய அவசியமில்லை' என்று சொன்னார்.

ஆனால் பார்வியோ ஒப்புக்கொள்ளவில்லை. அவர் ஆறு மாச மிருப்பதற்காக மாமனார் வீடு போய் விட்டார். பார்வியினுடைய மனைவியும் அந்தச் சமயம் தன் தாயார் வீட்டில்தான் இருந்தாள்.

மாமனார் வீட்டில் மாப்பிள்ளைக்குரிய மரியாதை கொஞ்ச நாள்வரைதான் நடக்கிறது. பார்வி போனதோ ஆறு மாதம் இருக்கிறதற்கு. ஐந்து பத்து நாள் வரை அவர் ரொம்ப ஆடம்பரமாக நடத்தப் பட்டார். ஆனால் பிறகு அவருக்கு மாமனார் வீட்டில் பசு மேய்க்கிற வேலை கிடைத்தது.

பார்வி தினந்தோறும் தனது மாமனார் வீட்டுப் பசுக்களை மேய்க்க ஓட்டிப்போய் மாலையில் திரும்புவார். தினந்தோறும் பகல் முழுதும் அங்கே காட்டில் உள்ள ஏதாவது ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஸ்லோகம் செய்வார். முடிந்த ஸ்லோகத்தை அவர் ஓலையில் எழுத்தாணியால் எழுதுவார். இந்தமாதிரி எழுதப்

பட்ட நூற்றுக் கணக்கான ஸ்லோகங்கள் எழுதிய ஓலைகள் அவர் பக்கத்தில் குவிந்து கிடந்தன. இந்த ஸ்லோகங்களின் தொகுதியைச் சேர்த்தே கிராதார்ஜுனீயம் என்ற காவியம் செய்தார்.

ஒரு நாள் பார்வியின் மனைவிக்கு கொஞ்சம் பணம் வேண்டியிருந்தது. அவள் பார்வியிடம் ரூபாய் கேட்டாள். ஆனால் பார்வியிடத்தில் பணம் ஏது? இதனால் பார்வியின் ஸம்ஸாரம் ரொம்பவும் துக்கப்பட்டாள். இதைப் பார்த்து, பார்வி, 'நல்லது, உன்னுடைய காரியம் பணமில்லாமல் நடக்க மாட்டாதென்றால், இதோ நான் செய்த பாதி ஸ்லோகத்தை யார் வீட்டிலாவது அடகு வைத்து செலவுக்காக ரூபாய் வாங்கிவா, என்று சொன்னார். அந்தச் சமயம் பார்வி, கிராதார்ஜுனீயத்தின் இரண்டாவது பாகத்தில் முப்பதாவது ஸ்லோகத்தைப் பண்ணிக் கொண்டிருந்தார். அதுவரை பாதி ஸ்லோகம் மட்டுமே செய்தார்.

ஓலையில் எழுதப்பட்ட அந்த ஸ்லோகத்தையும் தன்னுடைய பத்னி ரஸிகாவினுடைய கையில் கொடுத்து விட்டார். ஸ்லோகத்தினுடைய அர்த்தம் இதுவாக இருந்தது—'எந்தவேலையையும் ஆராயாமல் திடீரென்று செய்யாதிருக்க வேண்டும். ஏனென்றால் தெரியாத்தனம் ஆபத்தின் வீடாக இருக்கிறது. யார், நினைத்துப் பாராமல், தெரியாமல் ஏதும் செய்கிறார்களோ, அவர்கள் பிறகு பச்சாத்தாபப் படவேண்டியிருக்கிறது;

ரஸிகா இந்த ஓலைகளை எடுத்துக் கொண்டு வர்த்தமானன் என்ற பெயருள்ள தனவணிகருடைய மனைவியிடம் போய் அதை ஈடுவைத்து தன்னுடைய தேவைக்கு வேண்டிய பணத்தை வாங்கி வந்தாள். வர்த்தமானனுடைய மனைவி அந்த ஓலைகளைத் தன்னுடைய கட்டிலின் தலைப்பக்கமுள்ள ஆணியில் தொங்க விட்டிருந்தாள்.

வர்த்தமானன் வேற்று நாடுபோய் 14, 15 வருஷங்கள் ஆய்விட்டது. அவன் வியாபார நிமித்தம் அந்நிய தேசம் போயிருந்தான். அவன் மனைவி கருவுற்றிருந்தாள். அவன் போன பிறகு அவன் மனைவிக்குக் குழந்தை பிறந்தது. இந்த விஷயம் நடந்த பொழுது அந்தக் குழந்தைக்கு, 14 15 வயது முடிந்திருந்தது. ஆன போதிலும் அவன் தன் தாயாருடன் கூட ஒரே கட்டிலில் நித்திரை செய்தான்.

எந்தத் தினத்தின் மாலைக்காலத்தில் வர்த்தமானனுடைய ஸ்திரீ அந்த ஸ்லோகத்தை அடகு வாங்கினாளோ, அந்த ராத்திரியிலேயே அவளுடைய கணவன் திரும்பி வந்து விட்டான். எப்பொழுது தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்தானோ அங்கே தனது மனைவியின் பக்கலில் ஒரு புருஷன் படுத்திருந்ததைப் பார்த்தான். இரண்டு பேர்களும் ஒரே போர்வையில் போர்த்திக் கொண்டிருந்தார்கள். இதைப்பார்த்து அவனுக்குக் கோபம் பொங்கி வந்தது.

அவன் உறையிலிருந்து கத்தியை எடுத்து அப்பொழுதே அந்த இருவர்களையும் கொன்று விட கத்தியை ஓங்கினானோ இல்லையோ உடனே அந்த ஆணியில் மோதி அந்த ஓலை அறுந்து கீழே விழுந்தது. அறையில் சிறு

விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வர்த்தமானன் அந்த ஓலையை எடுத்து அதில் எழுதி உள்ள ஸ்லோகத்தைப் படிக்கவும் அவனுடைய எண்ணம் மாறி விட்டது.

அவன், 'நல்லது இவர்கள் நித்திரை செய்யும் போது கூடாது; எழுப்பி விட்டுக்கொல்கிறேன்' என்று நினைத்துக் கொண்டு தன்னுடைய மனைவியை எழுப்பினன். மனைவி எழுந்து தன்னுடைய பர்த்தாவைத் தெரிந்து கொண்டு அப்பொழுதே தூங்கிக் கொண்டிருக்கிற தன் மகனை, 'குழந்தாய்! எழுந்திரு; உன்னுடைய பிதா வந்து விட்டார்' என்று சொல்லி எழுப்பினள். மகன் எழுந்து தகப்பனை மரியாதையாக வணங்கினன்.

கேட்டதும், வர்த்தமானனுடைய மனைவி, பிள்ளை பிறந்த எல்லாச் செய்திகளையும் சொன்னன். வர்த்தமானனுக்கு ரொம்ப வருத்தமாய் விட்டது. அவன், இந்த ஓலை, தரையில் விழாவிட்டால், இதில் எழுதியுள்ள ஸ்லோகம் நினைத்துப் பார்த்து இதைத் தடுக்கா விட்டால், இன்று உங்கள் இருவர்களுடைய உயிரும் போயிருக்கும். யாரிடம், எப்படி அந்த ஓலை கிடைத்தது என்று தெரிந்த பிறகு, அவன் தன்னுடைய மனைவியும் மகனும் உயிர் தப்பியதற்கு பார்வியே காரணம் என்று தெரிந்து கொண்டு அவருக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தான்.

இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி

கோடி ரூபாய்

நாடு	1936–37		1937–38	
	ஏற்றுமதி	இறக்குமதி	ஏற்றுமதி	இறக்குமதி
பிரிட்டன்	60	44	64	52
பர்மா	11	27	11	26
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட மற்ற நாடுகள்	20	13	24	17
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மொத்தம்	91	84	99	95
ஐரோப்பா	39	23	37	33
அமெரிக்கா	19	7	19	13
ஜப்பான்	28	19	19	22
மற்ற அந்நிய நாடுகள்	15	15	15	11
அந்நிய நாடுகளின் மொத்தம்	101	58	90	79
மொத்தம்	192	142	189	174

உலகத்தின் மொத்த ராணுவச் செலவு

உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் சேர்ந்து 1937ம் வருஷத்தில் 80,000 லட்சம் தங்க டாலர்கள், ராணுவ முஸ்தீபுக்கென்று செலவழித்திருக்கின்றன. ஆனல் 1918ம் வருஷம், இந்தத் தொகையானது 95,000 லட்சம் தங்க டாலர்களாக அதிகப்பட்டிருக்கின்றன. அதாவது இந்த 1938ம் வருஷம் ராணுவ முஸ்தீபுகளுக் கென்று 34,000 லட்சம் பவுன் செலவழிந்திருக்கிறது.

இந்த ராணுவப் பெருக்கத்தின் பூர்வீக சரித்திரத்தைச் சிறிது கவனிப்போம். எல்லா நாடுகளும் தங்கள் தங்கள் ஆயுத பலத்தைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1932ம் வருஷம், ஆயுதப் பரிகரண மகாநாடு கூட்டப்பட்ட தல்லவா? அதற்கு முந்திய ஐந்து வருஷங்களில்—அதாவது 1927ம் வருஷம் முதல் 1931ம் வருஷம் வரை, பிரதி வருஷமும் சராசரி 41,000 லட்சம் பவுன் செலவழிக்கப் பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு—அதாவது ஆயுதப் பரிகரண மகா நாட்டினல் எவ்வித பயனும் உண்டாக வில்லை யென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு 1934ம் வருஷத்திலிருந்து 1938ம் வருஷம் வரை ஐந்து வருஷங்களில் சராசரி பிரதி வருஷமும் 65,000 லட்சம் டாலர் ராணுவத்திற் கென்று செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஆயுதப் பரிகரண மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அதாவது 1930ம் வருஷத்திலிருந்து 1932ம் வருஷம் வரை, உலகத்தின் ராணுவச் செலவு 42,000 லட்சம் டாலரிலிருந்து 42,000 டாலர் வரையில் ஏறியும் இறங்கியும் வந்திருக்கிறது.

இனி, நாடு வாரியாக, இந்த ராணுவச் செலவு எப்படி பங்கிடப்பட்டிருக்கிறதென்பதைச் சிறிது கவனிப்போம். உலகத்திலுள்ள மொத்த நாடுகள் 64. 1938ம் வருஷத்து ராணுவச் செலவை ஈவுபடுத்திப்பார்த்தால், ஏழு வல்லரசுகள் மட்டும் 74,000 லட்சம் தங்க டாலர்களைச் செலவழித்திருக்கின்றன. நூற்றுக்கு 78½ விகிதம், இந்த ஏழு நாடுகளும் சேர்ந்து செலவழித்திருக்கின்றன. பத்து வருஷங்களுக்கு முன்னர், அதாவது 1928ம் வருஷம் இந்த ஏழு வல்லரசுகளும் சேர்ந்து 42,000 லட்சம் டாலர்கள்—அதாவது நூற்றுக்கு 66½ விகிதம்—செலவழித்தன. சென்ற பத்து வருஷத்தில் 1929ம் வருஷத்திலிருந்து 1338ம் வருஷம் வரை, மேற் கூறப்பட்ட ஏழு வல்லரசுகளும் சேர்ந்து 41,000 லட்சம் தங்க டாலர்கள் செலவழித்திருக்கின்றன. உலகத்திலுள்ள மற்ற 57 நாடுகளும் சேர்ந்து பத்து வருஷத்திற்கும் 145,000 லட்சம் டாலர்களை செலவழித்திருக்கின்றன. அதாவது சராசரி பிரதி வருஷமும் 2,540 லட்சம் டாலர் செலவழித்திருக்கின்றன. 1938ம் வருஷத்து உலகத்து மொத்த ராணுவச் செலவில் 100க்கு 72 சதவிகிதம் ஐரோப்பிய நாடுகளே செலவழித்திருக்கின்றன.

தபால் செலவில்லாத நாடு!

—எ.

நாம் எழுதுகிற கடிதங்களுக்கும் நமக்கு வருகிற கடிதங்களுக்கும் தபால் முத்திரைகளோ, அதற்கான செலவு வகைகளோ இல்லையென்று ஓர் உத்திரவு பிறக்குமானால் நாம் எவ்வளவு சந்தோஷப் படுவோம்! ஆனால் இப்படிக் கூட நடக்குமா, காசு செலவின்றி தபால் போக்கு வரத்து நடத்த முடியுமா என்று வாசகர்கள் கேட்கலாம்.

உலகத்திலே ஒரே ஒரு நாட்டில்தான் இந்தமாதிரியான சௌகரியம் இருக்கிறது. அதுதான், பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் மத்தியில் ஒரு கணவாயில் உள்ள அண்டோரா என்ற சிறிய குடியரசு நாடு. இந்த நாட்டைப் பற்றி விளக்குவதே இந்தக் கட்டுரை.

ராஜதந்திர நாணயச் செலாவணியில் சிறிய நாடுகள் சில்லரை நாணயங்களைப் போல. ஆனால் சர்வதேச அரசியல் விவகாரங்களில், சிறிய நாடுகளின் முக்கியத்துவம் அவற்றின் இருப்பிடத்தைப் பொறுத்தே இருக்கின்றன. ஜெக்கோஸ்லேவேகியா, அதன் பழைய எல்லைகள் சிதைக்கப்படாமலிருந்ததற்கு முன்னர் 55,000 சதுர மைல் விஸ்தீரண முடையதாயிருந்தது. 213,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரான்ஸையும், 182,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஜெர்மனியையும் உத்தேசிக்கையில், ஜெக்கோஸ்லேவேகியா ஒரு சிறிய நாடுதான். ஆனால் 60 சதுர மைல் விஸ்தீரணமுள்ள லீஷ்டென்ஸ்டீன் என்ற நாட்டையும், 38 சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஸான்மாரினோ என்ற நாட்டையும், நான்கே சதுர மைல் விஸ்தீரணமுடைய மொனாகோ என்ற நாட்டையும், 109 ஏகரா விஸ்தீரணமுடைய 'போப்பரசரின் ராஜ்ஜியத்தையும் உத்தேசிக்கையில், ஜெக்கோஸ்லேவேகியா 'பெரிய நாடுதானே. ஒரு விந்தை. இந்தச் சிறிய நாடுகள், எந்த அரசியல் காரணங்களுக்காக இங்ஙனம் சுதந்திரமாக விட்டு வைக்கப்பட்டிருக்கின்றனவென்பது மட்டும் தெரியவில்லை.

அண்டோரா, ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளில் மிகப் பெரியது என்று சொல்லலாம். இதன் விஸ்தீரணம் 175 சதுர மைல். ஐரோப்பாவில் சாதாரணமாக, ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் எல்லை வகுக்கப்படுகிறபோது, ஜனங்களின் பாஷை, பொருளாதார நிலை, அரசியல் விவகாரம் முதலிய எல்லா விஷயங்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் எல்லை வகுக்கிறார்கள். ஆனால் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் மத்தியிலுள்ள இந்த அண்டோரா நாட்டின் வழியாகத்தான், பிரான்ஸையும் ஸ்பெயினையும் ஒன்று சேர்த்து இணைக்கும் பெரிய ரோட் 32 மைல் நீளம் வரை செல்கிறது.

இந்த நாட்டின் ஜனத்தொகை 5,000 தான். ஸ்பெயினிலுள்ள காடலான் மாகாணத்தில் வசிக்கும் காடலோனியர்களுக்கும் இவர்களுக்கும் அதிக வேற்றுமை இராது. இவர்கள் பேசும் பாஷையும் காடலான் பாஷை. ஒரு சிலர் மட்டும் பிரெஞ்சு பாஷை பேசுகிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும் அண்டோரா ஒரு சுதந்திரக் குடியரசு நாடாக இருக்கிறது. ஆனால் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் இது வயப்பட்ட நாடாகவே இருக்கிறது. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரும், ஸ்பெயின் தேசத்துப் பிரதம பாதிரியும், தங்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலமாக, தங்கள் ஆதிக்கத்தை இந்த நாட்டில் செலுத்துகிறார்கள்.

இந்த நாடுகளில் ஏதேனும் ஒன்று தாங்கள் விரும்பினால், இந்த நாட்டை உடனே தங்கள் நாட்டுடன் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாமலிருப்பது ஒரு வித ஆச்சரியந்தான். அண்டோராவின் அரசியல் நிருவாகத்தை யெல்லாம் பிரான்ஸ் எடுத்துக் கொண்டு அண்டோரா ஜனங்களின் ஆத்மாக்களை மோட்ச உலகத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் பொறுப்பை ஸ்பெயின் பாதிரியிடம் ஒப்படைத்துவிடுவதென்று 1930ம் வருஷத்திலிருந்தே ஒரு பேச்சு இருந்து வந்தது. 1933ம் வருஷம் அண்டோராவிலுள்ள டெலிபோன் வசதிகள் சம்பந்தமாக ஒரு தகராறு ஏற்பட்டது. அப்பொழுது பிரெஞ்சுத் துருப்புகள் சில வரவேண்டியதாயிற்று. இது அண்டோராவை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் அனுப்பப்பட்டதென்றே சொல்லப்பட்டது. ஆனால் அப்படியொன்றும் நிகழ்ந்து விடவில்லை. இப்பொழுது அண்டோரா, பிரெஞ்சுப் போலீஸாராலேயே பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் ஸ்பெயின் யுத்த மும்முரத்தில் அண்டோரா பாதிக்கப்படக் கூடாதென்பதுதான்.

பிரான்ஸும் ஸ்பெயினும் சேர்ந்து நடத்துகிற இந்த இரட்டை ஆட்சி எப்படி நடைபெறுகிறதென்பதைச் சிறிது கவனிப்போம். இந்த இரண்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளாக இரண்டு 'பெயிலிப்'கள் (Baliffs) இருக்கிறார்கள். இவர்கள்தான், அண்டோரா நாட்டின் நீதிபதிகள். ஆனால் அண்டோரியர்களிடத்தில் அதிகமான குற்ற நிகழ்ச்சிகள் காணப்படுவதில்லை. இந்த நாட்டின் அமைதியைக் காக்க ஏழு போலீஸாரே இருக்கின்றனர். இதற்குத் தகுந்தாற் போல் சிறைச்சாலையென்று தனிக் கட்டிடமும் இல்லை. 'பார்லிமெண்ட் ஹவுஸ்' என்ற கட்டிடத்தின் கீழ் தளத்தில் மூன்று அறைகள், சிறைச்சாலையாக உபயோகிக்கப்படுகிறது. இங்குக் குற்றவாளிகள் சிறை செய்யப்பட்டு இருக்குங் காலத்தில், நண்பர்களிடமிருந்து உணவு, ஒயின், முதலிய சௌகரியங்களைப் பெற உரிமையுடையவர்கள். விவாகமானவர்களாயிருந்தால், தங்களுடைய மனைவிமார்களை வரவழைத்து ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருக்கலாம்.

மேலே பார்லிமெண்ட் ஹவுஸ் என்று சொன்னோமே, அங்கு 'நேஷனல் கவுன்சில்' என்றொரு சபை கூடுகிறது. 'இது ஒரு நியாய ஸ்தலம் மாதிரி. சொத்துரிமை, வார்சு பாத்தி

யதை முதலியவை சம்பந்தமாக அவ்வப்பொழுது எழும் பிரச்னைகளைப் பற்றி இவை தீர்ப்பளிக்கின்றன. இதே காலத்திலிருந்து, அந்நியர்களுக்கு அண்டோராவில் என்னென்ன சலுகைகள் கொடுக்கலாம் என்பன போன்ற விஷயங்களைப் பற்றி முடிவு கட்டத் தொடங்கியிருக்கிறது. சென்ற வருஷத்திலோ என்னவோ, அமெரிக்காவிலுள்ள ஒரு கோடீசுவரன், அண்டோராவின் அரசனாகத்தான் ஆக வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒரு பெருந் தொகையை இந்த அண்டோரா வாசிகளுக்குக் கொடுப்பதாகக் கூறினான். ஆனால், மேற்படி தேசிய சபையானது, இதனை நிராகரித்து விட்டது! பணத்தைப் பெற்றுக் கொண்டு சுதந்திரத்தைப் போக்கடித்துக் கொள்வது உலகத்தின் பரிகாசத்தைப் பெற்றுக் கொள்வதாகும் என்று இந்தச் சபை, தன் தீர்ப்பில் குறிப்பிட்டது.

ஆனால் அண்டோரியர்கள், தங்களை பிரான்ஸும் ஸ்பெயினும் சேர்ந்து நிருவாகம் செய்வதைக் கூட விரும்பவில்லை. இவர்களுடைய கட்டுப்பாட்டினின்று விலகி, பூரண பொறுப்பாட்சி தாங்கள் பெறவேண்டுமென்ற எண்ணம் அண்டோரியர்களுக்குள்ளே நிறைய இருக்கிறது. இவர்களிலே புரட்சிக் காரர்களென்றும், மிதவாதிகளென்றும் பலவித மனப்பான்மையுடையவர்கள் இருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட தேசிய சபைக்கு ஒவ்வொரு குடும்பத் தலைவரும் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் 75 வயதுக்கு மேற்பட்டவராயிருந்தால், இவர்கள் தங்களுடைய சந்ததி யாருக்குத் தங்கள் பதவிகளை மாற்றிக் கொடுக்கலாம் என்று ஒரு விதி இருக்கிறது. ஆனால் இது கட்டாய வழியல்ல. மூத்தவர்கள் தாங்களாக மேற்படி பதவியிலிருந்து விலகிக் கொள்ளா திருக்கையில் இளைஞர்கள் முணு முணுக்க ஆரம்பிக்கிறார்கள். எனவே, இளைஞர்கள், தங்களுக்கு அரசாங்க நிருவாகத்தில் இன்னும் அதிகமான பங்கு வேண்டுமென்று கேட்கிறார்களென்றால் அதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? இவர்களுடைய கிளர்ச்சியின் பயனாக, 1933ம் வருஷத்தில் 25 வயதுக்கு மேற்பட்டவர்களெல்லாருக்கும் ஓட்டுரிமை உண்டு யென்று தீர்மானிக்கப் பட்டது.

அண்டோராவின் முக்கியமான அமிசம் அதன் வறுமைதான். அண்டோரியர்கள் எப்படித்தான் வாழ்கிறார்கள் என்பதுவே, வெளியார்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இந்த நாட்டினருக்கு முக்கியமான வருமானம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு (ஸ்பெயின்—பிரான்ஸ்) தீர்வை கொடாமல் சாமான்களை ஒளி மறைவாகக் கொண்டு செலுத்தி அதன் மூலமாகப் பணம் சம்பாதிப்பதே யாகும். இது, நியாயமற்ற வருமானம் என்று யாருமே கருதுவதில்லை. இதன் மூலமாக ஜனங்களுக்கு அதிகமான வருமானம் கிடைக்கிறதென்று தெரிந்து, அரசாங்கத்தார் இந்த வருமானத்தின் மீது தீர்வை விதித்திருக்கின்றனர்.

அண்டோராவில் விவசாயம் மிகக் குறைவு. சமுத்திர மட்டத்திற்கு மூவாயிரம் அடிக்கு மேலுள்ள இந்த நாட்டில் அதிகமான விவசாய உற்பத்திக்கு இடமே இருக்க முடியாது.

புகையிலை கொஞ்சம் விளைகிறது. காட்டுப் பிரதேசங்களும் அதிகமா யில்லை.

கைத் தொழிலோ, ஒன்றுமே இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். அண்டோரா வழியாக வாலிரா என்ற ஒரு நதி ஓடுகிறது. இதிலிருந்து, பிரெஞ்சு—ஸ்பானிஷ் மூலதனத்தைக் கொண்டு மின்சார உற்பத்திக் கம்பெனியிலிருந்து பார்சிலோனா நகரத்திற்குக் கூட மின்சாரம் சப்ளை செய்யப்பட்டு வந்தது.

அங்கோராவின் வருங்காலம், ஸ்பெயின் யுத்தத்தின் முடிவைப் பொறுத்திருக்கிறது. தளபதி பிராங்கோவுக்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையினர் அண்டோராவில் இருக்கின்றனர். ஆனால் இதற்கு எதிர் கொண்ட அபிப்பிராயமும் நாட்டில் இல்லாமல் இல்லை. தளபதி பிராங்கோ பூரண வெற்றி யடைந்தால்; தற்போது ஸ்பெயினின் பிரதிநிதியாக இருந்துவரும் பாதிரியின் நிலைமை ஆபத்துத்தான்.

பெரிய காரியங்களைச் சாதித்தவர்கள்

உலகத்தில் மிகப் பெரிய காரியங்களைச் சாதித்தவர்களும், தற்போது சர்வாதிகாரிகளா யிருக்கப்பட்டவர்களும் மத்திய வயதிலேயே—அதாவது35 வயதுக்கு மேல் நாற்பத்தைந்து வயதுக் குட்பட்டே, மகத்தான காரியங்களைச் சாதித் திருக்கிறார்கள். சில உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். கெமால் அத்தாதுர்க், 40 வயதில் துருக்கியப் புரட்சியை நடத்தினான். நெவில்லி சேம்பர்லேன், தனது 49 வயதில் பார்லிமெண்டரி தேர்தலில் முதல் வெற்றி பெற்றான். லார்ட் பால்ட்வின், 39வது வயதில் காமன்ஸ் சபையில் அங்கத்தினனானான். ருஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலின், 18வது வயதில் மார்க்ஸ் கட்சியினரின் தலைவனாகி, 24வது வயதில், சைபீரியக் குளிர்ப் பிரதேசத்தில் காப்பில் வைக்கப் பட்டான். 38வது வயதில், ருஷ்ய ஏகாதிபத்தியத்தை உடைத் தெறிந்து, சோவியத் ஆட்சி முறைக்கு அடி கோலினான். ஹிட்லர், தனது 44வது வயதில் ஜெர்மனியின் சர்வாதிகாரியானான். முஸோலினி, இத்தலியின் சர்வாதிகாரியானது 38வது வயதில். இப்பொழுது ஸ்பெயினில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கும் தளபதி பிராங்கோவின் பெயர், சென்ற மூன்று வருஷத்திற்கு முன்னர் எத்தனை பேருக்குத் தெரியும்? இவனுடைய பெயர் வெளிப்பட்டது இவனுடைய 44-வது வயதில் தான்.

உலகத்திலுள்ள பணக்கார குடும்பம்

அமெரிக்காவில் ட்யூ பாண்ட்ஸ் என்ற ஒரு குடும்பம் இருக்கிறது. உலகத்திலே மிசப்பணக்கார குடும்பம் என்று ராக்பெல்லர் குடும்பத்தின் பெயர் அடிபட்டதே தவிர, உண்மையில் இந்த ட்யூ பாண்ட்ஸ் குடும்பத்தினர்தான் உலகத்தில்மிகப் பெரிய பணக்காரர்கள். இவர்களுக்குச் சொந்தமாக ஏராளமான கம்பெனிகள் இருக்கின்றன. இவைகளி லிருந்து வருஷத்திற்கு 30,000,000 பவுன் வருமானமாகக் கிடைத்திருக்கிறது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்திருந்தவர்கள் எப்பொழுதும் அவிபக்த குடும்பத்தினராகவே இருந்தபடியால் இவர்களுடைய செல்வம் ஏராளமாகப் பெருகத் தொடங்கியது. இங்கிலாந்தின் குடியேற்ற நாடாக அமெரிக்கா இருந்த காலத்தில் இந்தக் குடும்பத்தினர் அமெரிக்காவில் சென்று குடியேறி அப்பொழுதிருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகள், மோட்டார்கள், வர்ணங்கள், செயற்கைப்பட்டுகள், ஸெல்லபோன் காகிதங்கள் முதலிய உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளை ஆரம்பித்தனர். இப்பொழுது அமெரிக்காவிலுள்ள எல்லா முக்கிய தொழிற்சாலைகளிலும் ட்யூபாண்ட் குடும்பத்தினருக்குப் பங்கு உண்டு என்று சொல்லலாம்.

இந்த ட்யூபாண்ட் குடும்பத்தினர், தற்போது அமெரிக்காவின் பிரசிடெண்டாக இருக்கிற ரூஸ்வெல்டுக்கு பரமசத்துருக்களாக இருக்கின்றனர். சென்ற குடியரசு பிரசிடெண்ட் தேர்தலில், இந்தக் குடும்பத்தினர், ரூஸ்வெல்டைத் தோற்கடிக்க ஒரு லட்சம் பவுன் செலவழித்தனர். இப்படி இந்த அரசியல் விரோத உணர்ச்சி இருந்த போதிலும், ரூஸ்வெல்ட்டின் மூன்றாவது குமாரனுக்கும் மேற்படி ட்யூபாண்ட் குடும்பத்தைச் சேர்ந்த ஈதல் என்ற பெண்ணுக்கும் விவாக முகூர்த்தம் நிச்சயிக்கப் பட்டது. பின்னர் இவர்களுக்கு விவாகமும் நடைபெற்று இப்பொழுது ஒரு குழந்தையும் பிறந்திருக்கிறது.

இந்த ட்யூபாண்ட் குடும்பத்தின் ஆதி வரலாற்றைக் கேட்டால் மிகவும் ஆச்சரியமாயிருக்கும். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன், அன்னு டி மாண்ட்சானின் என்ற ஒரு பிரெஞ்சுப் பெண், பாரிஸிலிருந்தவனும் கடிகாரத் தொழில் நடத்திக் கொண்டிருந்தவனுமான ட்யூபாண்ட் என்ற ஓர் ஏழையை விவாகம் செய்து கொண்டாள். இவர்களுக்கு பியரி சாமியல் என்ற ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையை தாயார் மிக அருமையாக வளர்த்து வந்ததோடு, இவனை எப்படியாவது பிரபலப் படுத்த வேண்டுமென்று தீர்மானித்து நல்ல முறையில் கல்வி கற்பித்து வரத் தொடங்கினாள். ஆனால் திடீரென்று பியரி என்ற இந்தக் குழந்தைக்கு அம்மை போட்டி நிரம்ப ஆபத்தான நிலைமைக்கு வந்தது.

குழந்தையும் இறந்து விட்டதென்று வைத்தியர்கள் முடிவு கூறிவிட்டார்கள். எனவே, மதாசாரப்படி ஈமச் சடங்குகள் யாவும் நடைபெற்றன. இங்ஙனம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், குழந்தை, தன் கைகால்களை அசைத்துக் கொடுக்கத் தொடங்கியது. மீண்டும் உயிர் வந்ததென்று பலரும் ஆச்சரியப் பட்டார்கள். கடைசியில் இந்தச் சிறுவன், நன்றாகப் படித்து ஓர் உத்தியோகத்திலமர்ந்தான். இவனுக்கு இரண்டு பிள்ளைகள். இவர்களில் மூத்தவனாகிய பியரி சாமியல் என்பவன், பிரான்ஸில் ஜீவனோபாயத்திற்குத் தகுந்த மார்க்கமில்லை யென்று அமெரிகாவுக்குச் சென்றான். இவனுடன் இவனது இளைய சகோதரனாகிய இரேனி என்பவனும் சென்றான்.

அமெரிக்காவில் சென்று குடியேறிய சில நாட்களுக்குப் பிறகு, சகோதரர்கள் இருவரும் ஒருநாள் வேட்டையாடச் சென்றனர். அப்பொழுது இளையவனான இரேனியன் துப்பாக்கியில் வெடி மருந்து இல்லாமல் போய் விட்டது. அமெரிக்காவிலேயே உற்பத்தி செய்யப் பட்ட கொஞ்சம் வெடி மருந்தை வாங்கித் தன் துப்பாக்கியில் நிரப்பிக் கொண்டான். இந்த அமெரிக்க மருந்து, இங்கிலீஷ் வெடி மருந்தைவிட விலை கிராக்கியா யிருந்ததோடு, சரக்கும் மட்டமா யிருந்தது. உடனே, இரேனி ஒரு சிறிய மூலதனத்தைக் கொண்டு வெடி மருந்துத் தொழிற் சாலையை ஆரம்பித்தான். ஆரம்பித்த சிறிது காலத்திற்குள் பிரான்ஸுக்குத் திரும்பி வந்து, தனது தொழிற்சாலைக்கு நிறைய ஆதரவு தேட முயற்சி செய்தான். இவன் எதிர்பார்த்தபடியே பிரெஞ்சு அரசாங்கத்தாரும் அதிகமான ஆதரவைக் கொடுத்தனர். இவனுக்கு அநுகுணமாகவே, தொழிற் சாலை முதலாளிகள், அசல் விலைக்கே, இவனுக்கு வேண்டிய இயந்திரச் சமான்களை விற்றனர்.

இந்த ஆதரவுடன் இரேனி ட்யூபாண்ட் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்து தன் தொழிலை அபிவிருத்தி செய்யத் தொடங்கினான். முதல் ஆறு வருஷத்தில், நூற்றுக்கு இருபது விகிதம் லாபம் கிடைத்துக் கொண்டிருந்தது. இது முதற் கொண்டு ட்யூபாண்ட் குடும்பத்தினருடைய அதிருஷ்டம் பெருகத் தொடங்கியது. இந்த குடும்பத்தைச் சேர்ந்த ஹென்ரி ட்யூபாண்ட் என்பவன், சுமார் 40 வருஷ காலம், இந்தக் கம்பெனியின் நிருவாகத்தை நடத்தி வந்தான். இவன் ஒரு விநோத புருஷன். கம்பெனியைச் சேர்ந்த ஒவ்வொரு கடிதத்தையும் இவனே எழுதுவான். இறகுப் பேனாக்களையே உபயோகிப்பான். ஸ்டீல்பேனாக்களை உபயோகிக்க மாட்டான். புதிய மாதிரி வெடி மருந்துகளைத் தன் தொழிற்சாலையில் தயாரிப்பதை விரும்பமாட்டான்.

ஐரோப்பிய யுத்தகாலத்தில் இந்தக் கம்பெனியின் லாபம் மிக அதிகமாகப் பெருகத் தொடங்கியது. பின்னர், இந்த ட்யூபாண்ட் குடும்பத்தினர் ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியை அப்படியே வாங்கி நடத்தினர். இது தவிர, இன்னும் சில கைத் தொழிற் சாலைகளை வாங்கி நடத்தி, இப்பொழுது உலகத்திலேயே மிகப் பெரிய பணக்காரர்களா யிருக்கின்றனர்.

ஸ்ரீ இராமசந்திரன் மகிமை

பண்டிதர்——வ. மு. இரத்திநேசுவரையர்

இவ்வுலகில் உத்தமர் சரிதங்கள் பலவுள. அவதாரங்களும் பல. தேவ அவதாரங்கள் நல்லறிவை யூட்டுவன. பெரியார் பலர் அற்புதங்களால் அறிவுச் சுடர் கொளுத்தியமையும் நாம் போற்றத்தக்கதே. காத்தற் கடவுளாகிய திருமால் பத்து அவதாரங்களுடையர். அவற்றுள், துஷ்டர்களைக் கண்டித்துச் சிஷ்டர்களைக் காக்கவும், பிதாமாதாக்களின் வாக்கைத் தட்டாது நடத்திக் காட்டவும், ஏக பத்தினி விரதத்தைக் கைக்கொண்டு உலகியல் நாட்டவும் அவதரித்த ஸ்ரீ ராமசந்திரனின் பெருமை எழுதி முடிவு காண்பதற்கரிதாகும். மனித வகுப்பில் உள்ளயாவரும் ஆஸ்திக புத்தியுடன் வாழ்ந்தால் நன்மை பெறலாம். இந்திய சரித்திரத்திலும் இராமபிரான் வரலாறு இடம் பெற்றிருக்கிறது. வடமொழியில் வால்மீகி முனிவர் கூறிய ஒரு சுலோகம் பின்பு காட்டப்படும். ராமன் என்னும் 'சொல்' சந்திரன் என்ற சொல்லோடு கூடி அடியாரின் மனதைச் சந்தோஷிக்கச் செய்து குளிர்விக்கின்றது. 'ராமம் சத்ய பாராக்ரமம், ராமோதர்ம விக்ரஹவான்' என்று வருவனவற்றில் இராமபிரான் சத்தியமும் வலிமையும் உடையவர், இராமன் தர்மஸ்வரூபி என்பனாதிய சிறப்புரைகள் காணப்படுகின்றன.

உலக ரக்ஷகராகிய நாராயணக் கடவுளின் பாதி அம்சமாக இராமபிரான் அவதரித்தார் என்பது மேதாவிகளின் கருத்து. ஆனால், தசரத சக்கிரவர்த்தித் திருமகனைத் தோன்றிய ராமனிடம அரச இலக்கணங்கள் குறைவின்றி இருந்தன. வீரம், தீரம், பிரதாபம் என்பனவும் கருணை விலாசமும் இராமனிடம் துலங்கின. நீர் வாழ் கொடிய பிராணிகளும், உயர்ந்த இரத்தினங்களும் உள்ள சமுத்திரத்திற்கு ராஜன் ஒப்பாக இருக்க வேண்டும் என்று மகாகவி காளி தாசர் கூறினர். 'அதிர்ஷயச் சாபிகம் யச்சயாமோதா ரத்நைரிவார்ணவம்' என்பதின்படி ராமபிரான் விளங்கினர். முனிவர்களின் மனம் எவனிடம் ரமிக்கின்றதோ அவனே இராமன் என்றும் நாம் அறிய முடியும். கலியுகத்தில் ராம நாம சங்கீர்த்தனம் மிக்க பயனை அளிக்கும். மார்கழி மாதம் புரட்டாசி மாதங்களில் பஜனையும், ராமாயண படனமும் செய்வது நலமாகும்.

கூஜந்தம் ராமராமேதி மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதாசாகாம் வந்தே வால்மீகி
[கோகிலம்.

'கண்டேன் சீதையை' என்று கம்பநாடார் அனுமான் கூறியதாகப் பாடியதுபோல 'கூவி நிற்கும் ராம ராம வென்று' சுலோகம் ஆரம்பிப்பது ஒரு விசேஷமாகும். இதை வடிவில் எழுந்த இராமாமிர்தம் பிறவிக் கடலைக் கடக்கச் செய்வதே அன்றி அவ் வுயிரை மிகவும் குளிர்விக்கும். இன்னும் ராம நாமம் ஒப்பு உயர்வில்லாத சஞ்சீவி எனினும் அமையும். பக்திக்கு அனுபானம் என்றும் கூறலாம். (Vehicle) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும்.

பரந்த நோக்கம் பற்றியே வான்மீக முனிவர் 'ராம ராம' என்று அடுக்குத் தொடராகச் சுலோகம் இயற்றி வைத்தார். கோகிலம் என்ற எழுவாய்க்கியையக் கூஜந்தம் என்ற பதம் பிரயோகிக்கப் பட்டது. கூவி நிற்கும் ராம ராம மந்திரம் மதுரப் பயனளிப்பதைத் தியாகராஜப் பிரமம் அருளிய கீர்த்தனங்கள் இன்றும் விளங்குகின்றன. 'நமோ நாராயணாய' என்ற மகா மந்திரமும், 'நம: சிவாய' என்ற மகா மந்திரமும், உயர்ந்தவையாகும். நாராயண மந்திரத்து, ரா என்பதும் சிவமந்திரத்து ம என்பதுங் கூடியே ராம நாமமாயிற்று என்பது உண்மை; அறிவுடையார் கருத்து.

அகர உகர மகர சம்யோகத்தால் விளங்கும் பிரணவம் போல ராம என்பது விண்டு, சிவ நாமங்களின் வரும் பிரதம எழுத்துக்களின் சேர்க்கையால் திகழுதலின், ராம பஜனை உயர்வு காட்டும்.

இராம நாமமானது பிறவிக் கடலுட் பட்டுக் கரையேற அறியாது தத்தளிப்பவர்களைக் கரையேற்றும் பெரு நண்பனை ஒத்தது; சுகம் செல்வம் முதலியவற்றைக் கொடுக்கத் தக்கது; இயம தூதர்களை வெருட்டித் துரத்தும் சக்தியுடையது. இக் கருத்தைப் பின் வருஞ் சுலோகம் புலப்படுத்தும்.

ஸ்ஜ்ஜநம் பாவபீதாநாம் ஆர்ஜனம்
ஸுஹ ஸம்பதாம்!
தர்ஜநம் யமதூதாநாம் ராமராமேதி
கர்ஜனம்!!

ஸ்ரீ ராம பிரானுடைய புயவலி கூறுவோர் இம்மை மறுமை இன்பங்களைச் சிறக்க அடையக் கூடும் என்று கம்ப நாடாரும் கவியாத்தளித்தனர்.

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழு
[முண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே

நாடிய பொருளும், புகழும், இலக்குமி கடாட்சமும் இம்மையில் நிறைந்து நிற்கவும், வீடு இயல் வழியதாக்கும் ஞானம் மறுமைப் பயனைத் திகழவும் ராம வாசகம் துணையாகும். வாச்சியப் பொருள் ஸ்ரீமந் நாராயணன் என்பது வெளிப்படை.

இராமபிரான் தசரதனுடைய ஆத்மாவாக இருந்தமையால் அவர் காடு சென்றார் என்பது கேட்டவுடன் தசரதர் உயிர் நீத்தார். இன்னும் வேறு பல காரணங் கூறுவர்.

இனிச்சந்திரன் என்பதில் உபமான தோஷம் உளது என்பது பொருந்தாது. சந்திரனின் களங்கம் போல வாலி வதம், விபீஷணர் சேர்த்தல் முதலிய சில மறுக்கள் இராம பிரான்பால் காணப்பட்டன. அவை விரிப்பிற் பெருகும்.

மாஜி கெய்ஸர்

—ஜே. வி. கே.

1918ம் வருஷம் நவம்பர் மாதம் 10ந் தேதி விடியற்காலை. ஹாலந்து தேசத்தின் தெற்குக் கோடியிலுள்ள ஐஸ்டன் என்ற ஒரு ஸ்டேஷனில் ஒரு ரெயில் வண்டி வந்து நின்றது. மற்ற வண்டிகள் வரும் நேரத்தில் இந்த வண்டி வரவில்லை. தவிர, யாரோ பெரிய மனிதர்கள் ஸ்பெஷல் வண்டி பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்றெண்ணும் படியாகவே இந்த வண்டி இருந்தது. இந்த வண்டியிலிருந்து கெய்ஸரும், அவருடைய பரிவாரங்கள் சிலரும் வந்திறங்கினார்கள். கெய்ஸர் முடி துறந்து, யுத்தத்தில் நடு நிலைமை வகித்த ஹாலந்துக்குள் பிரவேசித்து விட்டார் என்று எல்லாருக்கும் பின்னரே தெரிந்தது. கெய்ஸரும் அவர் பரிவாரங்களும் வந்திறங்கி யிருக்கிறார்கள் என்று தெரிந்ததும், ஸ்டேஷன் மாஸ்டர்; ஹாலந்து தேசத்து அந்நிய நாட்டு மந்திரிக்கு டெலிபோன் மூலம் தகவல் கொடுத்தார். அந்நிய நாட்டு மந்திரியும் இந்தச் செய்தியைக் கேட்டு ஆச்சரியப் பட்டுப்போய், ஹாலந்து பிரபுக்கள் சிலருக்கு டெலிபோன் செய்து, அவர்களுடைய மாளிகைகள் ஏதேனும் காலியாயிருக்குமா வென்றும் மாஜி கெய்ஸருக்கு இடங் கிடைக்குமா வென்றும ஆவலோடு விசாரித்தார். இவர் இங்ஙனம் டெலிபோன் செய்து கொண்டிருக்கிற அதே சமயத்தில், மாஜி கெய்ஸரோ, மேற்படி ஸ்டேஷன் பிளாட்பாரத்தில், தன் கதி யாதாகுமோ வென்று கவலைப்பட்ட வண்ணம் உலவிக் கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவம் நடந்து இருபது வருஷங்களுக்கு மேலாயின. அந்தக் காலத்திலிருந்து, நாளதுவரை ஹாலந்து நாட்டிலே ஒரு தனி மனிதன் என்ற முறையில் அமைதியாகக் காலங் கழித்து வருகிறார். இப்பொழுது இவருக்கு எண்பது வயதாகிறது. ஒரு சக்ரவர்த்தி என்ற முறையில் இவரிடத்தில் என்ன குறைகள் இருந்த போதிலும், இப்பொழுது இவர் நடந்து கொள்கிற பெருந்தன்மை முதலியவற்றை உத்தேசிக்கையில், இவரிடத்தில் அநுதாபஞ் செலுத்துவோர் அதிகமாகிக் கொண்டு வருகின்றனர். 1920ம் வருஷம் டூர்ன் என்ற கிராமத்தில் ஒரு சிறிய பங்களா வாங்கிக் கொண்டு அங்கு நிரந்தரமாகக் குடி புகுந்தார். இந்த டூர்ன் என்ற கிராமம், 7,000 பிரஜைகளைக் கொண்டது. ஹாலந்தின் மத்தியப் பிரதேசத்திலுள்ளது. இந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு சிறு குழந்தைக்கும், இந்த 'டூர்ன் அரண்மனை' நன்றாகத் தெரியும். இந்த

'அரண்மனை'க்கு முன்னுடி ஒரு 'கேட்' உண்டு. இங்கு போலீஸ் உடை யணிந்த ஒரு காவலாளி, போவோர் வருவோரைப் பரிசோதனை செய்து பார்க்கிறுன். உள்ளே சென்ருல், 'விசிடர்கள் குறிப்புப் புத்தக'த்தில் 'தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்தப் புத்தகத்தை நாம் சிறிது புரட்டிப் பார்த்தோமாஞல், எத்தனையோ மன்னர்கள், பிரபுக்கள் முதலிய பலர் மாஜீ கெய்ஸரைப் பார்க்க வந்திருக்கிருர்கள் என்பது நன்கு புலப்படும். இந்த 'விசிடர் புத்தகம்' பிரதி மாலை வேளைகளிலும் கெய்ஸர் முன்னிலையில் வைக்கப் படுகிறது. இதை கெய்ஸர் மிகவும் ஜாக்கிரதையாகப் படிக்கிருர்.

கெய்ஸர் வசிக்கிற அரண்மனை இரண்டு மாடியுடையது. சிவப்பு வர்ணம் இதற்குப் பூசப்பட்டிருக்கிறது. இங்குச் சென்றவுடன் இரண்டு சேவகர்கள், நம்மைப்புன்முறுவலுடன் வர வேற்கிருர்கள். இவர்கள் முன் செல்ல நாம் உள்ளே நுழைகிறோம். முதலில் பெரிய ஹால். இதன் நடுவில் ஒரு பெரிய மேஜை. இதன் உலகத்துப் பூகோள படம் விரிக்கப்பட் டிருக்கிறது. இத்தலி அபிசீனியாவை ஜெயித்ததும், ஸ்பெயின் யுத்தம் எவ்வளவு தூரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தென்பதும், சீன ஜப்பானிய யுத்தம் என்ன நிலையி லிருக்கிற தென்பதும், அன்ருடம் இந்தப் பூகோள படத்தைப் பார்த்துக் கெய்ஸர் தெரிந்து கொள்கிருர். இவர் சக்ரவர்த்தியா யிருந்த போது, யுத்த விஷயங்களில் எவ்வளவு கவனஞ் செலுத்தி வந்தார் என்பது நன்கு புலனுகும்.

சாப்பாட்டு ஹால் மிக எளிமை பொருந்தியதாயும் ஆனுல் இயற்கையாயும் இருக்கிறது. மாலைப் போஜனத்தின் போது, சில பீங்கான் சாமான்கள் கொண்டு வைக்கப்படுகின்றன. இவைகளைக் கண்டு, இஃதென்ன ஆடம்பர வாழ்க்கையென்று சிலர் நினைக்கிருர்கள். அது தவறு. சாப்பாடும் மிகச் சாதாரணந்தான். தோட்டத்திலே விளைகிற பொருள்கள் தான் பெரும்பாலும் சமையலுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன.

கெய்ஸரின் இரண்டாவது மனைவியாக அமைந்திருக்கிற ஹெர்மைன் சீமாட்டி மிகப்படித்தவள். எல்லா விஷயங்களைப்பற்றியும் மாஜீ கெய்ஸருடன் கலந்து பேசுவாள். இருவரும் இலக்கிய விசாரம் செய்வார்கள். இவளுக்கு ஹிட்லரை நேராகத் தெரியும். தற்போது ஜெர்மனியில் நடைபெறுகிற மாற்றங்களை யெல்லாம் இவள் பெரிதும் அங்கீகரிக்கிருள். இவள், டூர்ன் அரண்மனையில் 'சக்ரவர்த்தினி' என்றே அழைக்கப் படுகிருள். இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்துதான் மாலை வேளையில் 'டீ' சாப்பிடுவார்கள்.

எண்பது வயதான போதிலும், கெய்ஸர், எவ்வளவு சுறு சுறுப்புடனும் உற்சாகத்துடனும் இருக்கிருர்! அவர் கண்களில் எவ்வளவு பிரகாசம்! தன்னைப்பற்றி அதிகமான புஸ்தகங்கள் எழுதப்பட் டிருக்கின்றனவென்றும், ஆனுல் இங்ஙனம் நூலெழுதியவர்கள், தன்னைப்பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமலே எழுதியிருக்கிருர்கள் என்றும் சொல்லிக் கொண்டே ஒரு பரிகாசச் சிரிப்பு

சிரிக்கிறார். இந்த பரிகாசச் சிரிப்பிலே எவ்வளவோ அர்த்தம் அடங்கியிருக்கிறது. தம்மைப்பற்றி எழுதப் பெற்ற எல்லா நூல்களையும் இவர் படித்து வருகிறார் என்பது இதனால் நன்கு புலனாகவில்லையா?

மாஜி கெய்ஸர் பேசுகிற போது வேகமாகவும் தட்டுத் தடங்கலின்றியும் பேசுவார். இவர் பேசுகிற போது யாரும் குறுக்கிட முடியாது. தேதி, நாள், கிழமை முதலியன எல்லாம் இவருக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றன. பேசுகிற போது, இவருக்குச் சுபாவமாயமைந்த கொச்சை மொழிகளையும் கலந்தே பேசுவார். தற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றித்தான் பேசுவாரே தவிர, 1918ம் வருஷம் நவம்பர் மாதத்திற்குப் பிறகு என்ன நடைபெற்றதென்பதைப் பற்றிப் பேசவே மாட்டார். சில சமயங்களில் கோபம் வருகிறது. ஆனாலும், முதுமை காரணமாக தமக்கு ஏற்படுகிற கோபத்தை மிக்கப் பொறுமையுடன் அடக்கிக்கொள்கிறார். தாம் முடி துறந்த பிறகு, தம்முடன் கூட இருந்தும் தாமிடத்தில் ராஜ விசுவாசம் காட்டியும் நடந்து கொண்டு வந்தவர்களை இவர் அடிக்கடி பாராட்டுவார். இங்கிலீஷ் அரசியலைப் பற்றியும், பிரிட்டிஷ் அரசியலைப் பற்றியும் தாம் பேசுவதென்றால் அது மிகவும் நாசூக்கானதென்று கெய்ஸர் கருதுகிறார். ஏனென்றால் இவர், தம்மை பாதி இங்கிலீஷ்காரராகவே நினைத்துக் கொண்டிருக்கிறார். ஆங்கிலேயருடைய தினசரி வாழ்க்கையை இவர் அதிகமாக விரும்புகிறார்.

மாஜி கெய்ஸர், தினந் தோறும் காலையில் எட்டு மணிக்கு மேல் ஒன்பது மணிக்குள்ளாக எழுந்திருக்கிறார். காலை ஆகாரம் அருந்தியவுடன் தம் தோட்டத்தில் சுற்ற முற்படுகிறார். அப்படி உலவுகிற போது, வேகமாகத்தான் நடப்பார். கிராமத்திற்குள்ளே நடந்து செல்கிற போது, போலீஸுக்குத் தகவல் தெரிவித்து விட்டுத்தான் செல்வதாகத் தெரிகிறது. ஆனால் இவருக்கென்று விசேஷப்பாதுகாப்பு ஒன்றுந் தேவையில்லை. ஏனென்றால் எல்லாக் கிராமவாசிகளும் இவரை அதிகமாக நேசிக்கிறார்கள். இவரும் அவர்களிடம் மிக அன்பாக நடந்து கொள்கிறார்.

இவருக்குத் தினந்தோறும் ஏராளமான தபால்கள் வருகின்றன. இரவுப் போஜனமானவுடன் இவர், முக்கியமான நூல்களை ஆர்வத்துடன் படிக்கிறார். புராதன சிலா சாஸனங்களில் இவருக்கு அதிகமான ஆராய்ச்சி இருக்கிறது. விஞ்ஞான சாஸ்திரத்திலும் இப்பொழுதும் இவர் அதிகமான அக்கறை கொள்கிறார். அடிக்கடி இவர் விஞ்ஞான சாஸ்திரிகளை விருந்துக் கழைப்பார்.

செயற்கை ஆடம்பரத்திலே வாழ்ந்து கொண்டிருந்த இவர், இப்பொழுது இயற்கை இனிமையிலே அமைதியாகக் காலங் கழிக்கிறார்.

நடுவில் இருப்பவர் தான் மாஜி கெய்ஸர், ஐரோப்பிய யுத்தகாலத்தில்எடுத்த படம் இது. இரு பக்கங்களிலும் நிற்பவர்கள் முறையே ஹிண்டென்புர்க்கும் லுடன்டார்ப்பும்.

மாஜி கெய்ஸரின் 80 வது வருஷ தினக் கொண்டாட்டத்தின் போது எடுத்த படம். தமது இரண்டாவது மனைவி ஹெர்மைன் சீமாட்டியுடன் நிற்கிறார்.

டூர்ன் என்ற கிராமத்தில் மாஜி கெய்ஸரின் பங்களா இது தான்.

நமது நிருபர்களுடன்

பிள்ளையார் நோன்பு

ஆசிரியரவர்களே!

செட்டியார்கள் சமூகத்தினர் மட்டிலும் மார்கழி மாதத்தில் பிள்ளையார் நோன்பை விசேஷமாகக் கொண்டாடுவதின் காரணமென்ன? அதில் அர்த்த மிருக்கிறதா? கொண்டாட வேண்டுவது அவசியம் தானா? எவ்வளவு நாட்களாக இருந்து வருகிறது? ஹிந்து சமயத்தை சார்ந்ததென எண்ணா அனைவரும் கொண்டாடுவதாகக்காணோமே! சில திருநாட்களைப் போல இதுவும் அவரவர் கொள்கையை பொருத்ததென முடிவுகட்ட வேண்டியதில் ஒன்றா? விளக்க வேண்டுகிறேன்.

—முறசை

கார்த்திகை மாதத்தில் வரும் (திருக்) கார்த்திகை முதல் **20** நாட்கள் உபவாசமிருந்து **21**ம் நாள உபவாசத்தை முடித்துக் கொள்வதே பிள்ளையார் நோன்பு ஆகும். செட்டியார்கள் தங்களின் ஆதி மரகதப் பிள்ளையாரை வேண்டி விசேஷமாகக் கொண்டாடலாம். தமிழ் நாட்டில் பற்பல இடங்களில் ஹிந்து மதத்தின் பற்பல வகுப்பாரால் இது கொண்டாடப் படுகிறது. அன்று மாணவர் கட்கு நல்ல தின பண்டங்கள் கிடைக்கும். அநேகமாக விநாயக புராணம் எழுதப்பட்ட காலந் தொட்டு இந்த நோன்பு அநுஷ்டானத்திலிருந்து வரக் கூடும்.

—ஆசிரியர்

புகையிலை

அன்பார்ந்த ஐயா,

புகையிலையை முதன் முதலாக இந்தியாவுக்கு கொண்டு வந்தவர் யாவர்? எவ்வருடத்தில்? புகையிலைப் புகைப்பதனால்உண்டாகும்கெடுதல்கள் என்னென்ன? புகையிலையில் எத்தனை விதமான பாஷாணங்கள் கலந்திருக்கின்றன? அவைகளின் பெயர்கள் என்னென்ன? சிலர் புகையிலைப் புகையை உபயோகிப்பதினால் மிகவும் நன்மைகள் உண்டென்று சொல்லிக் கொள்கிறார்கள். புகையிலைப் புகையை உபயோகிப்பதால் நலமா, கெடுதலா? இவைகளை நமது "ஜோதி"யில் விளக்கித் தரும்படியாய் கேட்டுக் கொள்கின்றேன்.

—வீர. சுந்தரராஜ்

புகையிலையை உபயோகிக்கிற பழக்கம் நீண்ட காலமாக உலகத்தின் பல பாகங்களிலும் பரவி வந்திருக்கிறது. இந்தியாவுக்குள் எப்பொழுது நுழைந்தது, யார் நுழைத்தது என்ற விவரம் இப்பொழுது தெரியவில்லை. ஆரம்பத்தில் அமெரிக்காவிலுள்ள சுதேசிகள் இதனை உபயோகித்து வந்ததாகவும், பின்னர் **16**-வது நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் கொண்டு நுழைக்கப் பட்டதாகவும் தெரிகின்றன. முதலில், புகையிலையை புகைக்கிற பழக்கம் பலமாக எதிர்க்கப் பட்டது. இந்தப் பழக்கத்தை உடையவர்கள் சமூக பகிஷ்காரஞ் செய்யப் பட்டார்கள். பின்னர் எப்படியோ இது

சமூகத்தில் வேருன்றி விட்டது. தோத்து வியாதிகள் பரவாதென்ற கொள்கையை மக்களிடையே பரப்பி இந்தப் புகை பிடிக்கும் வழக்கத்தை ஒரு சிலர் சமூகத்தில் வேரூன்ற வைத்தார்கள் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். எபபடியும் புகைக்கிற வழக்கம் மிக மிகக் கெடுதல். நாளா வட்டத்தில் இது சரீரத்தை உளுத்துப் போகும்படி செய்து விடுகிறது. புகையிலையில் 'நிகோடைன்' (Nicotine) என்ற ஒரு வகை விஷம் இருக்கிறது.

—ஆசிரியர்

இரண்டு சந்தேகங்கள்

ஐயா,

(1) 1938ம் வருஷத்திற்காக பர்மா காங்கிரஸ் கமிட்டிக்கு 1938ம் வருஷத்தில் காங்கிரஸ் நான்கணா அங்கத்தினர்களின் யெண்ணிக்கை யெவ்வளவு? அதில் பர்மியர்கள் யெத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்?

(2) தற்போது ரெங்கூன் நகரில் மொத்தம் எத்தனை பத்திரிகைகள் நடைபெற்றுவருகின்றன? அதில் தமிழ் ஆங்கிலம், பர்மிய பாஷை, உருது, ஹிந்தி, தெலுங்கு இவைகளின் யெண்ணிக்கை எவ்வளவு? மேற்கண்ட இரு கேள்விகளுக்கும் "ஜோதி" வாயிலாக அறிவிக்க வேண்டுகிறேன்.

—மு. கணேசன்

1. பர்மாவில் மொத்தம் 5929 பேர் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களில் 114 பேர் பர்மிய அங்கத்தினர்கள். அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்களில் இரண்டு பேர் பர்மியர்கள்.

2. இதைப் பற்றிய விவரங்கள் இப்பொழுது நம்மிடத்தில் இல்லை.

—ஆசிரியர்

பர்மாபற்றி

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

நமது "ஜோதி"யில் பர்மா நாட்டு விஷயங்களைப்பற்றி அதிகமாகப் பிரசுரிக்காம லிருப்பது எக்காரணம் பற்றியோ, அதை அன்புடன் 'ஜோதி' மூல்யமாய் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—தி. மு. சம்பந்தன்

ஒரு காரணமும் நமக்கு புலப்படவில்லை. எல்லா நாட்டு விஷயங்களும் "ஜோதி"யில் இடம் பெறுகின்றன.

—ஆசிரியர்

நெல் விலை

அன்புமிக்க ஆசிரியரவர்களே,

"ஜோதி"யின் சுடர்-2 கதிர்-5ல் நூறு வருஷங்களுக்கு முன், பர்மாவில் அரிசி விலை 46 பவுன் நிறையுள்ள கூடை 100க்கு ரூபாய் 8ல் இருந்து 95 வரையிலும் காட்டுகிறது. அது அரிசி அல்லது நெல் என்பது விவாத சந்தேகமாகையால் அடுத்த "ஜோதி"யில் விளக்கிக் காட்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—கா. சுப்பய்யன்

இது சம்பந்தமாக 'ஜோதி' சுடர் 2-கதிர்-6ல் விடை காண்க.

—ஆசிரியர்

சிதம்பர ரகசியம்

ஆசிரியர் அவர்களே !

'சிதம்பர ரகசியம்' என்று சொல்லிக் கொள்ளுகிருர்களே; அதன் உண்மை என்ன? அதைப்பற்றி ஏதாவது 'நூல்கள்' வெளிவந்திருக்கிறதா? இதை நமது "ஜோதி"யின் மூலம் தெரியப்படுத்துவீர்களாக.

—சின. மாணிக்கம்

'சிதம்பர ரகசியம்' எனும் வார்த்தை ஒரு பழமொழி. வெட்ட வெளியில் ஆடுகிருர் நடராஜர் என்பதைக் குறிப்பிக்கு முகத்தால் வேதாந்திகள் அடிக்கடி இச்சொல்லைக் கையாள்வதுண்டு நமக்குத் தெரிந்த ஒரு சமாச்சாரத்தை இன்னொருவர் மிக ரகசிய மானது என்று சொல்ல வந்த போது 'சிதம்பர ரகசியமல்லவோ' என இந் நாட்களில் கூறுகிறோம். குடியரசு பத்திரிகையின் ஆதரவில் இதைப்பற்றி ஒரு புத்தகம் வெளியா யிருக்கிற தென்று ஞாபகம்.

ஆசிரியர்.

தார்த்தாரியர்கள்

பத்திராதிப,

நவம்பர் மாத ஜோதியில் 'பர்மா பற்றி' என்ற வியாசத்தில் 13ம் நூற்ருண்டில் 'தார்த்தாரியர்' என்பவர்கள் பர்மாவின் மீது படையெடுத்து வந்ததாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறதே; அவர்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்கள்? அந்தச் சார்பினர் இன்னும் இருக்கிருர்களா? என்ற விவரங்களைத் துலக்க விழைகிறேன்.

—"சேகர்"

தார்த்தாரியர்கள் என்ற தனிப்பட்ட ஜாதியினர் இப்பொழுது எங்கும் இல்லை. சைபீரியா, துருக்கி ஸ்தானம் முதலிய பிரதேசங்களில் வசிக்கும் கலப்பு ஜாதியினர், இந்தத் தார்த்தாரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்று சரித்திராசிரியர்கள் கருதுகிருர்கள்.

—ஆசிரியர்.

சுதந்திர இந்தியாவில்

அய்யா,

ஹிந்து-முஸ்லீம் வேற்றுமையும், ஹிந்துக்களுக்குள் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதியென்ற பாகுபாடுகளும் நமது பாரத நாட்டில் மலிந்து கிடக்கின்றனவே! அதைச் சீர்திருத்தாத வரை, நாம் கோரும் பூரண சுதந்தரம் கிடைக்குமா? அப்படி கிடைத்து விட்டாலும் அச் சுதந்தர இந்தியாவை வேற்றுமையும், பாகுபாடுகளும் உள்ள நாம் எப்படி ஐக்கியத்துடன் நடத்த முடியும்?

—எஸ். ராமன்

வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற பிரிட்டிஷ் அன்பர்கள் கிளப்புகிற சந்தேகத்தைத்தான் அன்பரும் கிளப்புகிருர். இந்தியாவில் மட்டுந்தான் ஜாதி வேற்றுமைகளும் மத வேற்றுமைகளும் இருக்கின்றன வென்று அன்பர் நினைக்கிருரா? சுதந்திரத்தோடு வாழ்கிற எல்லா நாடுகளிலும் இத்தகைய வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆகையால், இந்தியா சுதந்திர மடைந்தவுடன் இந்த வேற்றுமைகளெல்லாம் பனி

போல் பறந்து போகும். நண்பர் சந்தேகப் படாமல் சுதந்திர இயக்கத்தில் ஈடுபடுவாராக.

—ஆசிரியர்.

அந்தரார்த்தம்

ஐயா!

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதாநந்தயோகீஸ்வரரால் இயற்றப்பட்ட பகவத்கீதை வசனம் 2-வது அத்யாயம் 174-வது பக்கத்தில்

"பாவத்தினால் நரகத்தை அநுபவித்து முடிந்தவுடன் மறுபடியும் பூமியில் எப்படி ஜன்ம முண்டாகின்றதோ அது போல் புண்ணியங்களினாலும் சொர்க்காதி போகங்கள் உண்டாய அப்படிப்பட்ட அநுபவம் பூர்த்தியான வுடனே மறுபடியும் பூமியில் ஜனிக்க வேண்டும்' என்றும்,

175-வது பக்கத்தில்

'புண்ணியம் செய்வதினால் அந்தப் புண்ணிய பலத்தையும் பாவம் செய்வதினால் அந்தப் பாவ பலத்தையும் ஜனன மெடுத்து அநுபவிக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டிருக்கிறது. மேற்படி இரண்டு வாக்யங்களின் அந்தரார்த்தம் யாது? பாவ புண்ணிய பலான்பலன்களை பரலோகத்தில் அநுபவித்து முடிந்த பின் பூமியில் பிறப்பதா? அல்லது பிறந்து மேற்படி பலாபலன்களை அநுபவிப்பதா? என்ற ஐயத்தை "ஜோதி" வாயிலாய் நிவர்த்திக்கக் கோருகின்றேன்.

—'சோமேசன்'

துரதிருஷ்ட வசமாக நாம் ஸ்ரீ யோகீஸ்வரருடைய பகவத்கீதை வசனத்தைப் படிக்கவில்லை அதனால் நண்பர் குறிப்பிட்டுள்ள வாக்கியங்களின் அந்தரார்த்தத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் வாக்கியங்களின் பாஹ்யார்த்தத்தை மட்டும் காண்போமானால், ஒன்றுக் கொன்று முரண்பாடா யிருக்கிறது. அவ்வளவு தான் நாம் இப்பொழுது கூறமுடியும். ஆனால் நம்மைப் பொறுத்த மட்டில், சொர்க்கலோகம் என்றும் நரகலோகம் என்றும் தனித்தனி உலகங்கள் இருப்பதாகிற நம்பிக்கை நமக்கு ஏற்படவில்லை. எல்லாம் இந்த உலகத்திலேயே தான், நம் கண் முன்னர் தான் இருப்பதாக நமது நம்பிக்கை. இந்த நம்பிக்கையை மாற்றிக் கொள்ளக் கூடிய அநுபவம் இன்னும் நமக்கு ஏற்படவில்லை.

—ஆசிரியர்.



1939

ஜனவரி

28 ஸ்பெயின் யுத்தத்தில், பிராங்கோ கட்சியினர், பார்சிலோனா நகரத்தைக் கைப்பற்றியதைப் பாராட்டி, ஹிட்லர் தளபதி பிராங்கோவுக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்.

காங்கிரஸ் தேர்தல்களில் அதிகமான ஊழல்கள் நடைபெறுகின்றன என்று வருந்தி காந்தியடிகள் இன்றைய 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

29 இன்று காங்கிரஸ் பிரசிடெண்ட் தேர்தல் நடைபெற்றது. திரு போஸுக்கு 1575 ஓட்டுகளும், திரு பட்டாபிக்கு 1376 ஓட்டுகளும் கிடைத்தன.

30 காங்கிரஸில் எவ்விதமான பிளவும் ஏற்படாதென்று திரு. போஸ் இன்று ஓர் அறிக்கை விடுத்தார்.

பர்மாவில் நடைபெற்ற கலக சம்பந்தமாக விசாரணை செய்ய நீதிபதி பிராண்ட் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி, தற்காலிக யறிக்கை யொன்று இன்று வெளியிட்டது.

31 மஹாத்மா காந்தி தமது வாசஸ்தலத்தை சிவ கிராமத்தி லிருந்து பார்தோலிக்கு மாற்றி விட வேண்டு மென்று, பார்தோலி வாசிகள் சிலர் அவரைப் பேட்டி கண்டு பேசினார்கள்.

1939

பிப்ரவரி

1 சேத் யமுனாலால் பஜாஜ், ஜயபூர் சமஸ்தான எல்லைக்குள் நுழையக் கூடாதென்று, மேற்படி சமஸ்தானத்தினரால் தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததை மீறி இன்று சமஸ்தான எல்லைக்குள் பிரவேசித்ததன் காரணமாகக் கைது செய்யப்பட்டார்.

காந்தி கட்சியைச் சேர்ந்தவர்கள் திரு போஸின் வெற்றி காரணமாக, தடைமுறைகளைக் கையாள மாட்டார்கள் என்று பாபு ராஜேந்திர பிரசாத் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

திரு. போஸின் வெற்றி காரணமாக காந்தி கட்சியினர், காங்கிரஸின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று சங்கர ராவ் தேவ் கூறினார்.

இன்று இந்தியா வெங்கணும் பக்ரீத் தினம் கொண்டாடப்பட்டது, பாட்னாவில் சிறு கலவரம் ஏற்பட்டது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், சீனர்களுக்கு எவ்விதத்திலும் தோல்வி ஏற்படாதென்று சியாங்-கை-ஷேக் கட்சியினர் இன்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

2 பிராங்கோ கட்சியினர், பார்சிலோனா நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்ட போதிலும் குடியரசு அரசாங்கத்தார் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவர் என்று மேற்படி அரசாங்கத்துப் பிரதம மந்திரியான டாக்டர் நெக்ரின் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எகிப்தும் லிபியாவும் சந்திக்கிற இடத்தில், எகிப்து அரசாங்கத்தார் பலமான ராணுவ முஸ்தீபுக்கள் செய்து வருகின்றனர்.

இன்று திரு. போஸூம் பண்டித நேருவும் சாந்தி நிகேதனத்தில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காங்கிரஸ் பிரசிடெண்டு தேர்தல் சம்பந்தமாகக் காந்தியடிகள் இன்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

3 திரு. போஸ் காந்தியடிகளின் அறிக்கைக்குப் பதில் அறிக்கை விடுகிற போது, காந்தியடிகள் நம்பிக்கையைப் பெறுவதே தமது நோக்கமாயிருக்கு மென்று கூறுகிறார்.

ராஜகோட்டை சத்தியாக்கிரக சம்பந்தமாக இன்று திருமதி. கஸ்தூரிபாய் காந்தி கைது செய்யப்பட்டார்.

4 ஐர்லாந்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தை உடனே அப்புறப்படுத்தி விட வேண்டு மென்று ஐரிஷ் குடியரசு அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இதன் காரணங்கள் இங்கிலாந்தின் சில பாகங்களில் வெடி குண்டுகள் வெடித்ததும், இதற்குக் காரணம். ஐர்லாந்து குடியரசுப் படையினரே யென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் குற்றஞ் சாட்டியது மாகும்.

5 ஸ்பெயினில் பிராங்கோ கட்சியினர் பூரணமாக வெற்றி யடைகிற வரை, இத்தாலியப் படைகள் அங்கிருந்து வாபீஸ் பெறுக் கொள்ளப் படமாட்டாது என்று முஸோலினி இன்று கூறுகிறார்.

6 பாலஸ்தீனத்தில் இன்றிலிருந்து மூன்று நாள் வேலை நிறுத்தம் தொடங்கி யிருக்கிறது.

பரோடா மகாராஜா இன்று பம்பாயில் காலமானார்.

கோடை காலத்தின் போது, அரசாங்கக் காரியாலயம் நைனிடாலுக்கு மாற்றப் படக் கூடா தென்று ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் தீர்மானித்தனர்.

திரு. கே. ராமன் மேனன் காலஞ் சென்று விட்டபடியால், சென்னை அசெம்ப்ளியில் அவர் வகித்து வந்த அங்கத்தினர் ஸ்தானத்திற்கு திரு. சங்கரன் நம்பூதிரிபாட் அபேட்சகராக நிற்கிறார்.

7 காங்கிரஸ் பிரசிடெண்ட் தேர்தலில் திரு போஸூக்குச் சாதகமாக ஓட் போட்டவர்கள் இன்று கல்கத்தாவில் ஒரு கூட்டங் கூடினார்கள்.

ஸ்பெயின் குடியரசுத் தலைவரான அஜானா இப்பொழுது பிரான்ஸில் வந்து தங்கியிருக்கிறார்.

இன்று பாலஸ்தீன சம்பந்தமான மகாநாடு லண்டனில் செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூடியது. அரபியப் பிரதிநிதிகளைத் தனியாகவும் யூதப்பிரதிநிதிகளைத் தனியாகவும் வரவேற்று திரு. சேம்பர்லேன் பேசினார்.

8 பீஹார் அசெம்ப்ளியில் ஒரு ஸ்திரீ ரிபோர்ட்டர் இன்று நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாலஸ்தீனத்தில் யூதர்களுக் கென்று தனி நாடு சிருஷ்டிக்கப்படுமானால், அதனை ஜெர்மனி பலமாக எதிர்க்கும் என்று ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி கூறுகிறது.

லிபியாவுக்கும் டிரிபோலிக்கும் ஏராளமான இத்தாலியத் துருப்புகள் அனுப்பப் பட்டு வருகின்றன.

திரிபுரி காங்கிரஸை முன்னிட்டு மத்திய மாகாண அரசாங்கத்தார் மூன்று நாள் ரஜா கொடுத்திருக்கின்றனர்.

பர்மாவுக் கென்று தனியாக வகுக்கப் பட்ட தேசியக் கொடியை சக்ரவர்த்திப் பெருமான் அங்கீகரித்து விட்டார்.

மஞ்சுகோ எல்லைப்புறத்தில் சோவியத் துருப்புகளுக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கும் தகராறு ஏற்பட்டது.

9 பர்மா சட்ட சபையில் இன்று கவர்னர் பேசினார்.

ஸ்பெயின் குடியரசுத் தலைவரான அஸானா பாரிஸிலிருந்து கொண்டு, பிராங்கோ கட்சியினருடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டு மென்று கூறிக் கொண்டிருக்கிறார்.

ஐரோப்பாவில் சீக்கிரத்தில் யுத்தம் ஏற்படலா மென்றும் இதற்காக மூவாயிரம் ஆகாய விமானங்கள் தேவை யென்றும், அமெரிக்கா ஜனப் பிரதிநிதி சபையில் பேசப் பட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில், பிராங்கோ துருப்புகள், ஸ்பெயினின் வட புறத்து எல்

லையை இன்று அணுகி, அங்குத் தங்கள் கொடியை நாட்டி விட்டன.

பர்மாவில் மாணவர்களுடைய குறைகள் தீர்க்கப் படவில்லை யென்பதன் காரண மாக சுமார் ஆயிரம் மாணவர்கள் உண்ணா விரதம் இருக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

'வந்தே மாதர' கீத விஷயமாக தாங்கள் எந்த விதமான சமரஸத்திற்கும் வர முடியாதென்று ஹைதராபாத் அரசாங் கத்தார் தெரிவித்திருக்கின்றனர்.

10 சுமார் நாற்பது கத்தோலிக்க கிறிஸ்தவர் களின் மதகுருவான போப்பரசர், ரோமா புரியில் மாணமடைந்தார்.

ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கத்தை பிரான்ஸ் அங்கீகரிக்கு மென்று ஒரு வதந்தி.

ராஜகோட்டை சத்தியாக்கிரக சம்பந்த மாக திருமதி கஸ்தூரிபாய் காந்தியுடன் கைது செய்யப்பட்ட திருமதி மணிபென் படேல் இன்று உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி விட்டார்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களில் மாதம் இருநூறு ரூபாய்க்கு மேல் வாங்குகிறவர்களின் சம்பளம் குறைக்கப் பட வேண்டுமென்று இந்தியா சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச சங்கத்தி லிருந்து இந்தியா விலகி விட வேண்டுமென்று இந்தியா சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறை வேறியது.

மத்திய மாகாண அரசாங்கத்தார் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர முயன்ற வித்தியா மந்திர கல்வித் திட்டத்தைப் பற்றி முஸ்லீம் களுக்குள் ஆட்சேப மிருந்த தல்லவா? இது சம்பந்தமாக முஸ்லீம்களுக்கும் மத்திய மாகாண அர சாங்கத்தாருக்கும் ஒரு வித சமரஸம் ஏற்பட்டு விட்டது.

ஐ. மா. அரசாங்கத்தார் அடுத்த வருஷத் திலிருந்து வார்தா கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போவதாக வும், இதற்கென்று ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிற தென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இன்று சென்னை மீனம்பாக்கம் ஆகாய விமான நிலையத்தில் ஓர் ஆகாய விமானம் மேலே பறந்து சென்று கொண்டிருக்கை யில் பெரிய விபத்து ஏற்பட்டு, ஆகாய விமானம் கீழே நொறுங்கி விழுந்து விட் டது. இதன் பயனாக, ஒரு ஜெர்மானிய ரும், ஓர் இந்தியரும் மரணமடைந்த னர்.

11 திருமதி மணிபென் படேல் இன்றிலி ருந்து உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டு விட்டார்.

ஸ்பெயினில், குடியரசு அரசாங்கத்தார் மாட்ரிட் நகரத்தைத் தங்கள் தலை நகர மாகக் கொண்டிருக்கின்றனர்.

'வந்தேமாதர' கீதம் பாடியதற்காக உதுமானிய சர்வகலாசாலையிலிருந்து விலக்கப்பட்ட சுமார் ஐந்நூறு ஹிந்து மாணவர்கள், நாகபுரி சர்வகலாசாலையில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

காஷ்மீரத்துச் சமஸ்தானத்தில் சில புதிய சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டிருக்கின் றன.

இன்று, மாட்ரிட் நகரத்தில் குடியரசு அரசாங்கத்தின் மந்திரிச் சபை மூன்று மணி நேரம் கூடி பேசியது.

வட பர்மாவிலுள்ள மாந்தலே நகரத்தில் போலீஸார் இன்று துப்பாக்கிப் பிரயோ கம் செய்தனர். இதன் பயனாக 11 பேர் மரணமடைந்தனர்.

12 ஹிந்து முஸ்லீம் பிரச்னை சம்பந்த மாக மகாத்மா காந்தியும் கனம் ஆகாகானும் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

சேத் யமுனாலால் பஜாஜ், ஜெயப்பூருக்கு மீண்டும் சென்றதன் பயனாகக் கைது செய்யப்பட்டார். இப்படி இவர் கைது செய்யப் பட்டது மூன்றாவது முறை.

கான்பூரில் ஹிந்து—முஸ்லீம் கலவரம். பலத்த உயிர்ச் சேதம்.

மாட்ரிட் நகரத்தை பிராங்கோ கட்சியினர் இன்று ஆகாயவிமான குண்டுகளின் மூலம் பலமாகத் தாக்கினர்.

எகிப்திலுள்ள வாப்து கட்சி பிரதிநிதிகள் திரிபுரி காங்கிரஸுக்கு வருவதாக இன்று திரு. போஸுக்குத்தகவல் கிடைத்திருக்கிறது.

13 தேர்தல் காலங்களில் கள்ளுக் கடைகளை மூடிவிட வேண்டு மென்பதன் சம்பந்தமாகச் சென்னை அரசாங்கத்தார் ஒரு மசோதா கொண்டு வரப்போகின்றனர்.

இன்று அலஹாபாத்தில் திரு. போஸும் பண்டித நேருவும் கலந்து பேசினார்கள். எல்லைப்புற மாகாணத்திற்கு விஜயஞ் செய்துள்ள மௌலானா அபுல் கலாம் அஜாத், இன்று சட்ட சபை காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களைக் கண்டு பேசினார்.

சென்னை ஹைகோர்ட் நீதிபதியாயிருந்த எஸ். வரதாச்சாரியார், பெடரல் கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

14 பம்பாய் நகர முழுவதும் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும், இது சம்பந்தமாக அரசாங்கத்தாருக்கு 120 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படு மென்றும் பம்பாய் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

மகாத்மாகாந்தியும் திரு போஸும் இன்று சிவ கிராமத்தில் நீண்ட நேரம் கலந்து பேசினார்கள்.

சமஸ்தானப் பிரஜைகளின் உரிமைப் போராட்டத்தையும், பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளின் உரிமைப் போராட்டத்தையும் ஒன்று சேர்த்து நடத்த வேண்டுமென்றும், இதற்காக டெல்லியில் நிரந்தர ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாட்டுக் காரியக் கமிட்டி தீர்மானித்தது.

பஞ்சாப் மாகாணத்திலிருக்கும் லூடியானாவிலுள்ள வக்கீல்கள் சங்கத்தார், தங்கள் சங்க அறையில் பண்டித நேருவுக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கத் தீர்மானித்திருந்தனர். ஆனால் ஹைகோர்ட்டார் சங்க இடத்தை உபயோகிக்கக் கூடாதென்று தீர்மானித்து விட்டனர்.

ஒரிஸாவிலுள்ள சமஸ்தானங்களின் விஷயத்தில் மாகாண அரசாங்கத்தார் சரியாகத் தங்களால் நடந்து கொள்ள முடியவில்லை யென்று காரணங் கூறி நெருக்கடியை உண்டாக்குவர் என்னப்படுகிறது.

15 இன்று அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு லூடியானாவில் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் கூடியது.

மீண்டும் இன்று காந்தியடிகளும் திரு போஸும் சிவ கிராமத்தில் மூன்று மணி நேரம் சந்தித்துப் பேசினார்கள்.

ஜெர்மனியில் கப்பல் போக்கு வரத்துக்கு லாயக்காயுள்ள கீல் வாய்க்கால் ஆழமாகவும் விசாலமாகவும் தோண்டப்படுகிறது.

அண்ணாமலை சர்வ கலாசாலையில் மறியல் நடை பெறுகிறது.

லிபியாவில் இத்தாலியத் துருப்புகள் 65,000க்கு மேல் கொண்டு சேர்க்கப்பட்டன வென்று பார்லி மெண்டில் ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்டது.

ஹங்கேரி அரசாங்கத்தின் பிரதம மந்திரியான டாக்டர் இம்ரேடி ராஜீநாமா செய்து விட்டார்.

16 ஸ்பெயின் யுத்தத்தில், குடியரசு அரசாங்கத்தினர் விரைவில் ஒரு சமரஸம் செய்து கொள்வது நல்லதென்று அமெரிக்க அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது.

வங்காள மந்திரிகளில் ஒருவராயிருந்த ஷம்சுத்தீன் அஹமத் இன்று ராஜீநாமாச் செய்து விட்டார்.

பர்மா மந்திரிச் சபையின் மீது இன்று கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது. சாதகமாக 70 ஓட்டுகளும், பாதகமாக 37 ஓட்டுகளும் கிடைத்தன.

திருமதி விஜய லட்சுமி பண்டிட் இன்று மகாத்மாகாந்தியைச்சந்தித்துப்பேசினார்.

17 எல்லைப்புற மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியினருக்குள் இருந்த பலவித வேற்றுமைகள் மௌலானா அபுல் கலாம் அஜாத்தின்விஜயத்தினால்தீர்க்கப்பட்டன. ஐர்லாந்தின் ராணுவச் செலவு 50½ லட்சம் பவுனாக இன்று ஐரிஷ் பார்லிமெண்டில் நிச்சயிக்கப் பட்டது.

18 லிதுனியா என்ற நாட்டில் மூன்றரை லட்சம்ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று மேற்படி அரசாங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பம் போட்டிருக்கின்றனர்.

பிரிட்டிஷ் கயானாவிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம் ஒருவாறு சமரஸமாக முடிவு பெற்று விட்டது.

ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கத்தை போலந்து அரசாங்கம் அங்கீகரித்து விட்டது.

19 இத்தாலிய ராணுவப் படையின் சேனாதிபதியான போடோக்ளியோ, டிரிபோலிக்குச் சென்றிருக்கின்றார்.

ஜப்பானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாங்கிங் அரசாங்கத்தின் அந்நிய நாட்டு இலாகாவைச் சேர்ந்த சென்னு எனபவர் சீனர்களால் குத்திக் கொல்லப் பட்டார்.

ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கத்தைக் கிரேட் பிரிட்டன் அங்கீகரிக்குமானால் லார்ட் ஸ்விண்டன், பிரிட்டிஷ் தூதராகச் செல்வரென்று பலத்த வதந்தி உலவுகிறது.

மகாத்மாகாந்தியை இன்று சர்தார்படேல் திரு. தேசாய், திரு. சங்கர ராவ் தேவ் முதலியோர் நான்கு மணி நேரம் கண்டு பேசினர்.

20 தளபதி பிராங்கோ, ஸ்பெயின் எல்லைப் புறத்தை மூடி விட்டார்.

பர்மாவில் புதிய மந்திரிச் சபை அமைக்கப் பட்டது. ஊபூ-பிரதம மந்திரி; ஸர் போடுன், ஸர் போசிட், ஊடுன் அவுங்ஜா, எச். சி. கூ. ஆகிய நால்வரும் மற்ற மந்திரிகள். இன்னும் இரண்டு மந்திரிகள் தெரிந்தெடுக்கப்படவில்லை.

கான்பூர், சமீபத்தில் ஏற்பட்ட கலவரத்திற்குப் பிறகு இன்று அமைதியாயிருக்கிறது.

இத்தாலியப் படைகள், லிபியாவுக்குச் செல்வது ஆங்கிலோ-இத்தாலிய ஒப்பந்தத்திற்கு விரோதமான தல்லவென்று இன்றுகாமன்ஸ் சபையில் கூறப்பட்டது.

மகாத்மா காந்தியுடன் இன்று பண்டித ஜவஹர்லால் நேரு மூன்று மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

21 பெல்ஜியத்தில் புதிய மந்திரிச் சபை அமைந்து விட்டது.

சீனாவிலுள்ள ஷாங்காய் தீவு பிரிட்டிஷாருக்குச் சொந்தமானது. இந்தத் தீவின் மீது ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுகளை வீசி யெறிந்தன.

ராஜகோட்டையில் சிறை வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகள் உண்ணா விரதமிருக்கத் தீர்மானித்தார்கள்.

22 காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் பதின் மூன்று பேர் இன்று தங்கள் பதவிகளை ராஜீநாமா செய்து விட்டார்கள். இவர்கள் வருமாறு:— சர்தார் படேல், மௌலானா அஸாத், பாபு ராஜேந்திர பிரசாத், திருமதி சரோஜினி, புலாபாய் தேசாய், பட்டாபி சீதாராமய்யா, சங்கர ராவ் தேவ், ஆச்சாரியா கிருபாலினி, கான் அப்துல்கப்பார் கான், ஜயராம் தாஸ் தௌலத் ராம், யமுனாலால்பஜாஜ், பண்டித ஜவஹர்லால் நேரு, இன்னும் ஒருவர் ஆகிய பதின் மூவரும் ராஜீநாமா செய்து விட்டனர்.

பாலஸ்தீன சம்பந்தமாக லண்டனில் நடைபெறும் மகா நாட்டில் பாலஸ்தீனத்தில் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று கேட்டதை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிராகரிப்பதாக இன்று மாக்டோனால்ட் கூறினார்.

ஹாங்காங் தீவைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் ஜப்பானிய ஆகாய விமானக்குண்டு

கள் பொழியப்பட்டதன் காரணமாக, ஜப்பானிய ராணுவ அதிகாரிகள், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டனர்.

23 கல்கத்தா கவர்னரான லார்ட் ப்ராபோர்ன் இன்று மரணமடைந்தார்.

இன்னும் பதினைந்து தினங்களுக்குள் ஜெர்மனியிலுள்ள யூதர்களெல்லாரும் தங்கள் பொருள்களை விற்பனைக் கென்று அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று ஓர் உத்திரவு பிறந்திருக்கிறது.

பாலஸ்தீன சம்பந்தமான லண்டன் மகாநாட்டில் இன்று யூதப் பிரதிநிதிகளும் அராபியப் பிரதிநிதிகளும் சேர்ந்து உட்கார்ந்தார்கள்.

ஆங்கிலோ-பிரெஞ்சு கூட்டுறவு மிகவும் வலுவாயிருக்கிற தென்று இன்று லார்ட்ஸ் சபையில் அரசாங்கத்தின் சார்பாகக் கூறப்பட்டது.

23 ஸ்பெயினில் தளபதி பிராங்கோவின் அரசாங்கத்தை பிரான்ஸ், இந்த மாதம் இருபத்தேழாந் தேதி அங்கீகரிக்குமென்று இன்று பிரெஞ்சு பார்லிமெண்டில் டலாடியர் கூறினார்.

சமஸ்தானத்துப் பிரஜைகள் மகா நாட்டின்

காரியக் கமிட்டி.

பண்டித ஜவஹர்லால் நேரு—தலைவர்

ஸ்ரீமான்கள் பலவந்த ராவ் மேத்தா, ஜேய நாராயண வியாஸ், ரங்கீல் தாஸ் கபாதியா—காரியதரிசிகள்.

ஸ்ரீமான்கள் பட்டாபி சீதாராமய்யா, ஷேக் முகம்மது அப்துல்லா, கிருஷ்ண சர்மா, ஹரிசிங், ராம் மோஹன் லோஹியா, கன்யாலால் வைத்தியா, சத்திய நாராயண ஷராப், சையத் தலீப் ஹஸன், லாலா சங்காலால், ஷம் ஷேர்சிங், துல்லாப்ஜி உமேத்சந்த்—அங்கத்தினர்கள்.

ஸ்விட்ஜர்லாந்து மத்தியஸ்தமாயிருக்க வேண்டியதன் அவசியம்

"யக்ஞன்"

ஐரோப்பிய வல்லரசுகளின் பலம் சரிசமமாக இருக்க வேண்டிய தன் அவசியத்தை முன்னிட்டு, ஸ்விட்ஜர்லாந்து எந்த விதமான ஐரோப்பியப் போராட்டங்களிலும் தலையிட்டுக் கொள்ளாமலிருக்க வேண்டும். இந்த ஒரு காரணத்தை முன்னிட்டுப் பார்த்தோமானால், ஸ்விட்ஜர்லாந்து வாசிகள், அதிருஷ்டசாலிகள் தான். தவிர, இந்த நாட்டு ஜனங்கள் வேறொரு விதத்திலும் அதிருஷ்டசாலிகள். ஏனென்றால் இவர்கள் ஒரு தலைவனுக்கு வணக்கஞ் செலுத்தாமல் தங்கள் நாட்டுக்கும் கடவுளுக்கும் வணக்கஞ் செலுத்தும் உரிமை பெற்றிருக்கிறார்கள். இது பெரிய விசேஷமில்லையா?

ஆல்ப் மலையின் பல பக்கங்களின் வழிகளையும் பாதுகாத்து நிற்கிறது இந்த ஸ்விட்ஜர்லாந்து. பிரான்ஸ், இத்தலி, ஜெர்மனி ஆகிய எந்த நாட்டுக்கும் இந்த நாட்டிலிருந்து செல்ல முடியும். மேற்படி மூன்று நாடுகளிலிருந்தும் இந்த நாட்டின் வழியாகச் செல்லவும் முடியும்.

ஸ்விட்ஜர்லாந்து ராணுவ அதிகாரிகள், மேலே கூறப்பட்ட 'வல்லரசுகளில் ஏதேனும் ஒன்று தங்கள் நாட்டின் மீது படையெடுத்து வந்தால் என்ன செய்வதென்பதைப் பற்றிய பிரச்னையை அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வல்லரசுகள் சில சமயங்களில் ஸ்விட்ஜர்லாந்தின் வழியாகத் தங்கள் படைகளைக் கொண்டு செல்ல உரிமையுண்டு என்பன போன்ற பிரயோகங்களை மிகத் தாராளமாக உபயோகிக்கின்றன. எந்தச் சண்டையிலும் கலந்து கொள்ளாத ஒரு நாட்டின் மீது, வேற்று நாட்டார் படை கொண்டு செல்வது உரிமையாம்! அப்படிச் செல்வது எந்த நாட்டிற்குச் சௌகரியமாயிருக்கிறதோ அப்பொழுது அந்த நாட்டிற்கு அஃது உரிமையாகி விடுகிறது. ஜெர்மனி பிரான்ஸைத் தாக்குவதினாலும் அல்லது பிரான்ஸ் ஜெர்மனியைத் தாக்குவதினாலும் ஸ்விட்ஜர்லாந்து பாதிக்கப்படக்கூடும். இதைத்தான் ஸ்விட்ஜர்லாந்து அதிகாரிகள் யோசிக்கிறார்கள். பிரான்ஸ், அதன் எல்லைப் புறத்தில் கட்டியிருக்கும் எஃகுக் கோட்டையைக் கடந்து செல்ல வேண்டுமானால், ஸ்விட்ஜர்லாந்து வழியாகச் செல்லுதலே நல்லதென்று ஜெர்மனி கருதுகிறது. பிரான்ஸுக்கும் ஸ்விட்ஜர்லாந்துக்கும் இடையிலேயுள்ள எல்லையைப் பந்தோபஸ்து செய்ய வேண்டா

மென்று இதுகாறும் பிரான்ஸ் கருதியது. ஏனென்றால், பிரான்ஸுக்கு விரோதமாக யார் படை யெடுத்து வருகிறார்களோ அவர்கள் ஸ்விட்ஜர்லாந்தின் வழியாக வரட்டு மென்பதும், அப்பொழுதுதான் பிரான்ஸின் மீது உலகமனைத்திற்கும் அநுதாபம் ஏற்படு மென்பதும் காரணங்கள் சொல்லப்பட்டன. ஆனால் இப்பொழுது இந்த எண்ணம் மாறிப் போய் பிரான்ஸானது, தனது கிழக் கெல்லையைப் பலமாக முஸ்தீபு செய்து வருகிறது. ஆனாலும் ஸ்விட்ஜர்லாந்தின் வழியாகச் சென்று, மேற்படி புலமான முஸ்தீபுகளையும் தாக்கக் கூடு மென்று ராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள். இந்த வாதம், ஜெர்மனியின் மீது பிரான்ஸ் படை யெடுத்துச் செல்வதா யிருந்தாலும் பொருந்தும்.

எனவே, ஸ்விட்ஜர்லாந்தின் அதிகாரியாக யார் இருக்கின்றாரோ அவரே ஐரோப்பாவின் முக்கியஸ்தராகவும் இருக்க முடியும். இதனாலேயே, ஐரோப்பவின் இருதய ஸ்தானத்திலே யுள்ள ஸ்விட்ஜர்லாந்தின் மத்தியஸ்தத்தையும் அமைதியையும் காப்பாற்றிக் வைக்க வேண்டு மென்ற விஷயத்தில் முனைந்து நின்றார்கள் ஐரோப்பிய ராஜதந்திரிகள். இதனை இவர்கள் 1815ம் வருஷத்திலேயே வியன்னா காங்கிரஸில் உறுதி செய்து கொண்டார்கள். அது முதற்கொண்டு ஐரோப்பாவில் எத்தனையோ அமர்க்களங்கள் ஏற்பட்ட போதிலும், ஸ்விட்ஜர்லாந்தின் மத்தியஸ்தம் காப்பாற்றப் பட்டே வந்திருக்கிறது.

ஸ்விட்ஜர்லாந்தைச் சுற்றி யுள்ள எல்லா நாடுகளும், இந்தச் சிறிய நாட்டின் நடு நிலைமையை அங்கீகரித்திருக்கின்றன. இதைப்பற்றி எல்லா ராஜ தந்திரிகளும் வலியுறுத்திப் பேசி யிருக்கிறார்கள். இதற்காக ஸ்விட்ஜர்லந்து வாசிகள் நன்றி பாராட்டுகிறார்களாயினும், தங்கள் சுய பலத்தைக் கொண்டே தங்கள் மத்தியஸ்தத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்று தீர்மனித்திருக்கிறார்கள்.

ஒரு சிறிய நாடு, மற்ற வல்லரசுகளுக்குச் சமதையாகத் தன்னைப் பலப்படுத்திக் கொள்ள முடியுமாவென்பது ஒரு சில சந்தேகப் பேர்வழிகளின் எண்ணம். சிறிய நாடுகள் எப்படி பெரிய நாடுகளுக்குப் பலியாக்கப் பட்டன வென்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். இங்ஙனம் பலியான எல்லாச் சிறிய நாடுகளும், பெரிய நாடுகளின் உதவிகளை எப்பொழுதும் எதிர் பார்க்கலாம் என்று உறுதி கூறப்பட்டன. பிறருடைய பயமுறுத்தலுக்கு இணங்கிவிட வேண்டா மென்று பல முறை கூறப்பட்டன. ஆனால் பிறகு?—பிறகு நடந்தன வெல்லாந்தான் எல்லாருக்கும் தெரியுமே.

ஆனால் மற்றச் சிறிய நாட்டாரைப் போல் ஸ்விட்ஜர்லாந்து வாசிகள் இல்லை. இவர்கள் நேர்முகமாக யாராலும் பயமுறுத்தப்பட வில்லை. அப்படி ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படுமானால் அதன் விளைவு என்னகும் என்பதையும் இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பிறருடைய நல்லெண்ணத்தினால் மட்டும் ஒரு தேசம் நடு நிலைமை வகித்துக் கொண்டிருக்க முடியாதல்லவா? அதைப் போல் ஆயுத பலத்தினால் மட்டும் இந்த நடு நிலைமையை வகித்துக் கொண்டிருக்க

முடியாது. இரண்டும் சேர்ந்தால் தான் நடு நிலைமை காட்ட முடியும்.

ஸ்விட்ஜர்லாந்தைப் பொறுத்த மட்டில் சில பிரச்னைகள் சிக்கலானவை. இந்த நாட்டுக்குக் கடல் தொடர்பு கிடையாது. மலைத் தொடர்கள் நிறைந்தது. மற்றவர்களுடைய ராணுவத்தாக்குதல்களினின்று இவை மேற்படி நாட்டைப் பாது காக்கின்றன வென்பது உண்மை. ஆகாய விமானங்கள், இந்த மலைத்தொடர்களைத் தாண்டிச்செல்ல முடியாது. ஸ்விட்ஜர்லாந்தின் ஜனத் தொகை 4,15,000.

ஸ்விட்ஜர்லாந்துக்கு ஒரு விநோதமான சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது இந்த நாட்டில் ஒரு லட்சம் ஜனத்தொகையை யுடைய நகரங்கள் நான்கே இருக்கின்றன. ஜுரிச் என்ற ஒரு நகரத்தில் மட்டுந்தான் இரண்டரை லட்சம் ஜனங்களுக்கு மேல் இருக்கிறார்கள். இங்கிலாந்தின் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 39 விகிதமும், ஜெர்மனியில் 100க்கு 30 விகிதமும் நகரங்களில் வசிக்கிறார்கள். ஆனால் ஸ்விட்ஜர்லாந்திலோ 100க்கு 16 பேரே நகரங்களில் வசிக்கிறார்கள். ஆகாய விமானங்களிலிருந்து சத்துருக்கள் தாக்குவாரானால் அவர்களுக்கு இந்த நகரங்கள் குறைவாயிருப்பது பெரிய பிரதிகூலம்.

ஸ்விட்ஜர்லாந்தின் எல்லைப்புறம் 1131 மைல். இதில் 424 மைல் எல்லைப்புறம் முஸோலினியையும், 320 மைல் ஹிட்லரையும் எதிர் நோக்கியிருக்கின்றன.

முஸோலினி, இத்தாலிய எல்லைப் புறத்திலுள்ளதும், 11 ஆயிரம் அடி உயரமுள்ளதுமான ஒரு மலை யுச்சியில் உயர் வழி யொன்றைக் கட்டியமைத்திருக்கின்றான். இது யாத்ரிகர்களுக்கு மிகவும் சௌகரியமாயிருக்கிறது. ஆனால் இது ராணுவத்திற்கும் உபயோகப்படும்.

ஆனால் ஸ்விட்ஜர்லாந்து 'வாசிகள் மிகவும் கெட்டிக்காரர்கள். இவர்கள் பிறருடைய வாக்குறுதிகளை நம்புவதே யில்லை. தங்களைப் பலப்படுத்திக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள்.

ஸ்விட்ஜர்லாந்தில் ஒரு சட்டம் உண்டு. இதன்படி, துப்பாக்கி தூக்கிச் செல்ல சக்தியுடையவர்கள் யாரும் மூன்று மாத ராணுவ சேவை செய்ய வேண்டும். இந்த மூன்று மாதப் பயிற்சியைப் பெற்றதும், இவனுக்கு ராணுவ உடுப்பும், துப்பாக்கியும் அளிக்கப்படுகின்றன. இவன் இதை வைத்துக்கொண்டு, தன் சொந்த அலுவல்களைக் கவனிக்கலாம். ஆனால் பிரதி வருஷமும் இவன் இந்த ராணுவப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

ஸ்விட்ஜர்லாந்துக்கு ஆகாய விமானங்கள் நிறைய இருக்கின்றன. யுத்த தளவாடங்களுக்காக ஏராளமான பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். ஆனால் இது போதாதென்று இவர்கள் கருதுகிறார்கள்.

தற்போது இவர்களுக்கு மூன்று தேவைகள் உண்டு. முதலாவது ஆகாய விமானங்கள்; இரண்டாவது யுத்த தளவாடங்கள்; மூன்றாவது ஆள் பலம். குறைந்த பட்சம் 500 ஆகாய விமானங்களாவது இருக்க வேண்டு மென்றுதிட்டம் போட்டிருக்கிறார்கள். இதைத் தயாரித்து வைத்துக் கொண்டாலும் இப்பொழு

துள்ள பலத்தைவிட பாதி மடங்கு அதிகமாகும்.

ஆகாய விமானங்களை அடித்து விரட்டக் கூடிய பீரங்கிகள் ஜெர்மனிக்கு மிகவும் முக்கிய மானவை. இந்த மாதிரியான பீரங்கிகள் சுமார் 400 வரையில் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கத்தார் திட்டம் போட்டிருக்கின்றனர்.

போக்கு வரவு சாதனங்களையும் இப்பொழுது விருத்திசெய்துகொண்டு வருகின்றனர். மலைகளின் மீது பாதை போட வேண்டியிருப்பதால் சிரமப் பட்டாகிலும் இந்த வேலையை முடித்து விட வேண்டுமென்று அரசாங்கத்தார் தீர்மானித் திருக்கின்றனர்.

ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கத்தினர் தங்கள் ஆயுத பலத்தை அதிகரித்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர். ராணுவப் பயிற்சியை மூன்று மாத காலத்திலிருந்து ஆறு மாதத்திற்கு உயர்த்தத் தீர்மானித்திருக்கின்றனர். இப்படியே வருஷா வாரி நடைபெறும் பயிற்சியையும் 12 நாட்களிலிருந்து 21 நாட்களாக அதிகப் படுத்தத் தீர் மானித்திருக்கின்றனர்.

எப்படியும் ஸ்விட்ஜர்லாந்து, மற்ற வல்லரசுகளின் அச்சுறுத்தலுக்கு எளிதிலே இணங்கி, தன் சுதந்திரத்தை இழந்து விடாது.

சில ஜீவ ஜந்துக்களின் வயது

வண்ணாத்திப் பூச்சி	....	....	2 மாதம்
எறும்பு	....	....	1 வருஷம்
முயல்	....	....	8 ,,
பாம்பு	....	....	10 ,,
தவளை	....	....	15 ,,
கழுகு	....	....	30 ,,
உராங்—உடாங் (குரங்கு)	....	....	40 ,,
சிங்கம்	....	....	50 ,,
அண்டங் காக்கை	....	....	100 ,,
யானை	....	....	100 ,,
ஆமை	....	....	120 ,,



மாதங்கினி

மூல நூலாசிரியர்: பங்கிம் சந்திரர்; வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்; ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி: பி.ஏ; டபிள் கிரவுன் அளவு 1x16; 221 பக்கங்கள்; விலை: ஒரு ரூபாய்.

பங்கிம் சந்திரருடைய இலக்கிய சிருஷ்டியில் 'மாதங்கினி'யை முதல் வரிசையில் வைத்து எண்ண முடியாது. பிரஸ்தாப நூலில், பங்கிம் சந்திரர், நகைச்சுவையாகப் பேசுகிற போது, கொஞ்சம் கால் சறுக்கியிருக்கிறாரோ என்று நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. மாதங்கினி, மாதவனைக் காதல் கொள்வதற்கு, ஆசிரியர் சிருஷ்டித்துள்ள சந்தர்ப்பத்தையோ, அப்பொழுது—கொள்ளைக்காரர்கள் புகுந்து த்வம்சம் செய்து விட்டுப் போன அந்த வேளையில்—இருவருக்கும் நடைபெறுகிற சம்பாஷணைகளையோ நம்மால் ரஸிக்க முடியவில்லை. ஆனால் ஸ்ரீ குமாரஸ்வாமியின் மொழி பெயர்ப்பு எப்பொழுதும் போல் நன்றா யிருக்கிறது.

மாயா விநோதினி

மூல நூலாசிரியர்: ஸ்ரீ ரவீந்திர நாத் டாகூர்: மொழி பெயர்த்தவர்; ஸ்ரீமதி தஞ்சம்மாள்; வெளியிட்டோர்; கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை: டபிள் கிரவுன் அளவு 1x16; 357 பக்கங்கள் விலை; ரூ. 1 8 0,

ஸ்ரீ ரவீந்திர நாத் டாகூர் பெரிய கவி; சிறந்த புலவர். இதில் ஆட்சேபமே யில்லை. ஆனால் மற்ற கவிகளுக்கோ, புலவர்களுக்கோ ஏற்படாத ஓர் அநுகூலம் இவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதாவது இவருக்கு அதிருஷ்டம் ஒட்டிக் கொண்டே வந்திருக்கிறது. செல்வச் சீமானா படியால், தமது சிருஷ்டிகளை பிறருக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலமாகத்தாம் இன்பம் பெறக்கூடிய ஒரு பாக்கியம் இவருக்கு ஏற்பட்டிருக்கிறது. வங்க இலக்கிய ரங்கத்திலே, இவரைவிடச் சிறப்பாக இல்லா விட்டாலும் இவருக்குச் சமதையாக நடக்கவோ, நடிக்கவோ ஆற்றல் வாய்ந்தவர்கள் எத்தனையோ பேர் தோன்றி மறைந்திருக்கிறார்கள். இப்பொழுதும் சிலர் வரம்பிட்ட புகழுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். மைக்கல் மது சூதன தத்தர் என்ன, பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ன, துவிஜேந்திரலால் ராய் என்ன, ஈசுவர சந்திர வித்தியா சாகர் என்ன, ரோமச சந்திர தத்தர் என்ன, சமீபத்திலே காலமான சரத் சந்திர சாட்டர்ஜி என்ன, இப்படிப் பட்டவர்களுடைய இலக்கிய சிருஷ்டிகள்

மகா அற்புதமானவை. வங்க இலக்கியம், இன்று தலை நிமிர்ந்து பார்க்கிறதென்றால், அதற்கு இவர்களும் காரண பூதர்களாயிருந்தவர்கள் தானே. இஃதிருக்கட்டும்.

இப்பொழுது விமரிசனத்திற்கு வந்துள்ள 'மாயா விநோதினி' சென்னை அரசாங்க சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் அவர்களுடைய திருமகளார் ஸ்ரீமதி தஞ்சம்மாள் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மொழி பெயர்ப்பு நன்றாயிருக்கிறது. சில சில இடங்களில் ரவீந்திரர் கையாள்கிற உபமான உபமேயங்கள் மிகவும் இன்பகரமாயிருக்கின்றன.

வட்டியைக் கொண்டு பிழைப்பதை விட்டு மூலதனத்தையே கரைக்க ஆரம்பித்து விட்டால், அசல் அழிய எவ்வளவு காலமாகும்? கலியாணமான சில தினங்களுக்குள்ளாகவே மஹேந்திரன் சிற்றின்பக் கடலில் மூழ்கிக் கரை கடந்துவிட விரும்பியதன் பலனாகக் காதலென்னும் தெய்விக அன்பு பெருக்க இடமில்லாமலே போயிற்று.

—பக். 83.

தாமரை எவ்வளவுதான் அழகு பொருந்தியதானாலும் அது சேற்றில்தான் முளைக்கின்றது. பறித்தெடுக்கும் போது சேறும் கூடவே வருகிறது. அதை ஒரு தூய இடத்தில் வளரச் செய்ய முடியுமோ?

—பக். 305.

ஸ்ரீமதி தஞ்சம்மாள், கதைப் போக்கோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மொழி பெயர்த்திருக்கிறார். இதற்காக அவரை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

நவமணிமாலை

எழுதியவர்: ஸ்ரீமதி எஸ். ஆர் ஜயலட்சுமி அம்மாள்; வெளியிட்டோர்: லோத்ரா பிரஸ், இராயப் பேட்டை, சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 271 பக்கம்; விலை: பன்னிரண்டு அணா.

ஸ்ரீமான்கள் பி. எஸ். சிவசாமி ஐயரும், எஸ். சத்தியமூர்த்தியும் இதற்கு முகவுரை, சிறப்புரை முதலியன அளித்திருக்கிறார்கள். அதற்காக இந்தப் புஸ்தகத்தின் பெருமை அதிகப்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை. இந்த நூலில் எட்டு சிறு கதைகள் அடங்கியிருக்கின்றன. ஆனால் ஒன்றிலுமே எவ்வித ரஸபாவனையும் இல்லை. ஆசிரியைக்குக் கன்னட மொழியில் அதிக பரிச்சயம்போலிருக்கிறது. அதனால் தான் வரதில்லை என்பன போன்ற பிரயோகங்கள் சர்வ சாதாரணமாக நூலில் அகப்படுகின்றன. ஆயினும், சமூகச் சீர்திருத்தத்தில் ஊக்கங் கொண்ட ஓர் அம்மையார் எழுதிய நூல் என்பதற்காக இதனை நாம் பாராட்டவே செய்கிறோம்.

வந்தனத்துடன்

கீழ்க்கண்டவைகளை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்:—

1. ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம்—1938ம் வருஷ அறிக்கை.

2. தேவகோட்டை ஹிந்துஸ்தான் சாரணர் சங்கம்—முதல் ஆண்டு அறிக்கை.

3. அகில மலேயா செட்டியார் இளைஞர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாத் தலைமையுரை. தலைமை வகித்தவர் ஈப்போ ஸ்ரீ சி. ராம. சு. ராமசாமி செட்டியார்.

சாமுத்திரிகம்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

நூலின் நோக்கம்

'சாமுத்திரிகம்' என்னும் சொல்லுக்குத் 'தேகத்திற் பல பாகங்களிற் காணும் முத்திரைகளைக் கொண்டு விஷயங்களை விளக்கும் நூல் என்று அர்த்தம். முத்திரைகளாவன—தேகத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் அகப்படுகிற ரேகை, மச்சம் முதலான விசேஷக் குறிகளாம். ஆனதனால், இதனில் உடற் கூறு, (Physiology) முகக் கூறு (Physiognomy) கபாலக் கூறு, Phrenology) என்னும் சாஸ்திரங்கள் அடங்கியனவாம். இந்த சாஸ்திரத்தினால் மேற் சொல்லிய குறிகளைக் கொண்டு ஒருவனுடைய குணநிசயம், லாப நஷ்டம் முதலான சோதிட பாவங்களைக் கூறுவதற்காகும். ஆங்கிலத்தில் இந்நூலைப் 'பாமிஸ்ட்ரி' (Palmistry) அல்லது 'கைரோமன்ஸி' (Chiromancy) என்பர். அது கையிலுள்ள ரேகைகளை மாத்திரம் சோதித்துச் சில விஷயங்களைச் சொல்வதாகும். ஆனால் அது இந்து சாமுத்திரிகா சாஸ்திரத்தைப்போல விரிவானதன்று.

ஸ்திரீ புருஷ சாமுத்திரிகம்

உலகத்தில் ஸ்திரீகள் செய்ய வேண்டிய காரியத்திற்கு ஏற்றபடி அவர்களுடைய தேகத்து அங்கங்கள், புருஷர்களுடைய அங்கங்களைப்போலல்லாமல் இளம் பருவத்திலேயே வேறு விதமாகப் பரிணமிக்கின்றன. பழைய நாகரிகத்திற்கும், புதிய நாகரிகத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்த போதிலும், ஸ்திரீகளுக்கெனக் குறிக்கப்பட்டுள்ள காரியத்தை அவர்கள் செய்து வருவதில் அதிக வித்தியாசம் ஏற்படவில்லை. ஆதலால் ஆண்பாலரது அங்கங்களும் பெண்பாலரது அங்கங்களும் வித்தியாசப் படுவதற்கேற்ப, இரு பாலார்க்கும் உரிய சாமுத்திரிகமும் வேறு வேறாக இந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் முதற் பகுதி புருஷரின் ரேகைகளையும், குணநிசயங்களையும் குறித்ததாகும். இரண்டாவது, ஸ்திரீகளின் ரேகைகளையும், தன்மைகளையும், அதிர்ஷ்ட வசங்களையும் குறித்ததாகும்.

வேறு வித்தியாசங்கள்

எல்லாத் தேசங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா ஜனங்களுக்கும் தேகப் பாங்கும், மனப் பாங்கும் (Physical and intellctual Conditions) ஒரே மாதிரியாக இரா. சீதோஷ்ண ஸ்திதிகள் வித்தியாசப் படுகின்றன. சுற்று முற்று முள்ள

சந்தர்ப்பங்கள் வித்தியாசப் படுகின்றன. தொழில், உணவு, ஆடை ஆகிய இவையும் வித்தியாசப் படுகின்றன. வம்ச பரம்பரையும், ஊழ்வினையும் (Past Karma) ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் கணித்து உணர்வதற்கே தேகத்தின் பற்பல பாகங்களிலுள்ள விசேஷக் குறிகளை ஆராயஹிந்து சாமுத்திரிக சாஸ்திரம் மேற்கொண்டிருக்கின்றது.

உள்ளங்கையின் உயர்வு

இந்த சாஸ்திரத்தின் பொருட்டு தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலுள்ள ரேகையையும் சோதிக்க வேண்டியதவசியமானாலும் உள்ளங் கையையே பெரும்பாலும் பார்க்கிறார்கள். இதற்குக் காரணம், அதனை எளிதில் தொடுதலும், சோதித்தலுங் கூடும் என்பதாம். இது நிற்க மனிதனுடைய தேகத்தில் கை என்பது சாமானியமான அற்ப அங்கமன்று. அந்தக் கையினின்றும் உள்ளங்கையானது முக்கியமான காரியங்களுக்கு இன்றியமையாததா யிருக்கின்றது. எந்தக் காரியத்தையும் கையினாலேயே செய்கின்றோம். புதிதாகக் கண்டு பிடிக்கிற அரிய விஷயங்களும், நவீன கற்பனைகளும் மனிதனுடைய கபாலமும், கையும் செய்த வேலையின் பயன்களேயாம். இவ்வாறு மானிடர் செய்யும் காரியங்களுக்கும், முயற்சிகளுக்கும் முக்கிய சாதனமா யிருக்கிற உள்ளங்கையானது தேகத்தின் அங்கங்கள் எல்லாவற்றின் இலட்சணங்களையும் தெரிவிக்கத் தக்கதோர் அங்கமாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. தேகத்தின் சக்திகள் பெரும்பாலும் கையின் வழியாகப் பிரவர்த்திக்கின்றமையால், அதனாலேனும் அது மற்ற தேக பாகங்களின் சக்திகளை விளக்குவதற்கேற்ற தன்மை பொருந்தியதாயிருக்க வேண்டு மென்பது துணிபு. உள்ளங் கையைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவனுக்கு முன் நடந்த விஷயங்களையும், இனி நடக்கத்தக்கவைகளையும் உள்ளபடி சொல்லத்தக்க இந்து சாமுத்திரிக சாஸ்திரிகள் இந்நாளிலும் இருக்கிறார்கள்.

கை ரேகைகள்

மானிடருடைய உள்ளங் கையில் சாமானியமான அநேக ரேகைகள் இருக்கின்றன. இவைகளால் ஒரு பயனில்லாமல் இயற்கையில் இவை தோன்றி யிருக்க மாட்டா என்பது ஒரு தலை. பற்பல தேசத்துப் பற்பல சாதியாருடைய கைகளைப் பார்த்தால் இந்த ரேகைகளில் அநேக வித்தியாசங்கள் தோன்றும். சில கைகளில் ரேகைகள் மிக அடர்ந்திருக்கின்றன, ஒரு வீசம் அங்குலங் கூட ரேகையில்லாத இடம் அவைகளில் அரிதாகும். வேறு சில கைகளில் ரேகைகள் மிகச்சொற்பமாக இருக்கின்றன. ரேகை இல்லாத இடை வெளிகள் விஸ்தாரமாக இருக்கின்றன.

நெற்றி ரேகைகள்

உள்ளங்கை ரேகைகளிற் சொல்லிய வித்தியாசம் தேகத்தின் மற்ற பாகத்து ரேகைகளிலுங் காணப்படும். சிலருடைய நெற்றியில் நீளமான சமாந்தர ரேகைகள் (Parallel-Lines) காணப்படுகின்றன. சில சமயங்களில் அவை ஒன்றோ டொன்று பிணைந் திருக்கின்றன. வேறு சிலருடைய நெற்றியில் ஒரு ரேகை கூட அகப்படுவது அருமையா யிருக்கின்றது. இந்த ரேகைக ளென்பன

நோயினாலும், முதுமையினாலும் ஏற்படத்தக்க சுருக்கங்களல்ல.

ரேகைகளின தன்மை

சாமுத்திரிக சாஸ்திர மென்பது ஒரு மனிதனுக்கு ஒரு வயதில் ஒரு தருணத்தில் மாத்திரமே பயன் படுவதன்று. இஃது எல்லாக் காலத்திற்கும், எல்லா மனிதருக்கும் எல்லா வயதுக்கும் பொருந்தத் தக்கது. ரேகைகளிற் சில ஒரு சமயத்தில் தோன்றி, மற்றொரு சமயத்தில் மறைந்து, பின்னொரு சமயத்தில் திரும்பவும் தோன்றுகின்றன. இப்படி அவை தோன்றுவதும், மறைவதும் சில வேளை விரைவாக நடைபெறுகின்றன. சில வேளை மெதுவாக நடை பெறுகின்றன. வேறு சில ரேகைகள் மறையாமல் எப்போதும் நிரந்தரமாகவே கையில் அமைந்திருக்கின்றன. இவ்வாறுள்ள பல விதமான ரேகைகளின் லட்சணங்களை ஆராய்ந்து, இவைகளைக் கொண்டு ஊகமாகவும், தீர்மானமாகவும் சொல்லும் பயன்கள் பெரும்பாலும் திருப்திகரமாகவே யிருக்கின்றன.

சாமுத்திரிகச் சிறப்பு

இந்து சாமுத்திரிக சாஸ்திரத்தைப் பயில்வது மனதிற்கு இனிமையாகவும், அறிவு விளக்குவதாகவும் இருக்கிறது. இதுவன்றி, நமது நித்திய விவகாரங்களில் நாம் எதிர்ப் படுகிற அல்லது சம்பந்தப் படுகிற மனிதர்களைப் பற்றி, வாய் மொழியாக வல்லாமல் குறிப்பாகவே, அநேக சங்கதிகளை நாம் தெரிந்து கொள்ளவும் இந்நூல் பயன்படும்.

முகப் பரீக்ஷை

சாமுத்திரிகத்தின் படி ரேகை முதலியவற்றைச் சோதிப்பதற்குப் புருஷனுடைய தேகத்தை மூன்று பகுதிகளாகக் கொள்வார்கள். அப்பகுதிகளாவன:....கை, முகம், உடல் என்பனவாம். உடற் சோதனை என்னும் பகுதியில் சரீரத்து மற்ற அங்கங்களும் சேர்ந்தனவேயாம். ஒருவனுக்கு வாய்க்கத்தக்க பாக்கியம் முதலான விஷயங்கள் அவனுடைய தேகத்திலுள்ள ரேகைகளினாலும், குறிகளினாலும் நெடுநாள் முன்னரே சூசிப்பிக்கப் பட்டிருப்பதை அதே இடங்களிற் காண்கிறோம். முகப் பரீக்ஷையில் தலை, கண், மூக்கு, காது, தலைமயிர், வாய் ஆகிய இவையனைத்தும் சேர்ந்தனவாகும். தலை என்னும் சொல்லினால் குறிக்கப் படுகிற கழுத்துக்கு மேற்பட்டதோர் பாகத்தின் தோற்றம் முழுமையும் இந்தச் சோதனையில் கணிக்கப் பெறும்.

கண் என்பது தலையின் முக்கியமான அங்கம். சாமுத்திரிகத்தில் தேர்ந்தவர்கள் கண்ணின் அமைப்பைப் பார்த்தே ஒருவனுடைய வாழ்க்கை விஷயங்களை யெல்லாம் திட்டமாகச் சொல்லத்தக்கவராவர். சாமுத்திரிகம் என்பது சோதிட சாஸ்திரத்தோடு இணைந்த வித்தை. இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கண்ணின் அமைப்புக்கும், குறிப்பிட்ட வேளைகளில் அதன் நிறத்திற்கும் விசேஷமான பயன்கள் சொல்லுகிறார்கள்.

மூக்கின் அமைப்பும், அதன் வளைவும் முக்கியமான சில பயன்களுக்கு அறிகுறிகளாகும். இந்த முக்கியமான உறுப்பைப் பார்த்து ஒருவனுடைய தன்மையையும், குணகுணங்களையும் சரியாகச் சொல்வதற்காகும்.

நெற்றியின் அமைப்பைப் பார்த்து அநேக முக்கியமான விஷயங்களைத்

தெரிந்து கொள்வதற்காகும்; வாயின் அமைப்பினுல் மனிதனுடைய விசேஷ குணங்கள் குறிக்கப்பெறும். பற்களை யும், நாவையுங் கொண்டு வேறு வேறு விஷயங்களைத் தெரிந்து கொள்ள லாம்.

காதைப் பார்த்தே அநேகருடைய வாழ் நாள் அளவை நிதானித்தறிய லாம். தலைமயிரும் ஓர் அறிகுறியே என்பர். அதன் நிறம், பள பளப்பு, நீளம், மற்றுமுள்ள விசேஷத் தன்மை ஆகிய இவைகளைக் கொண்டு மனிதனு டைய வாழ்க்கைச் சுகம், நாணயம் முதலான விஷயங்களைச் சொல்வார் கள். தலையின் நீளம், அதன் விசேஷ அமைப்பு, அதன் நிலை, மேற் சொல் லிய அங்கங்களின் பொருத்தம் (Symmetry) ஆகிய இவைகளைக் கொண்டு மனிதனுடைய குண குணங் களையும், நடத்தைகளையும் தெரிந்து கொள்ளலாம். அவ்வுறுப்புகளின் நிறத் திற்கும் விசேஷ பிரயோஜனம் உண்டு.

நிறம்

சரீரத்து அங்கங்களின் நிறத்தைக் கொண்டு மனிதனுடைய குணம், தொழில், ஜயாப ஜயங்கள் முதலியன கூறுவதற்காகும். பூவுலகத்துச் சிருஷ் டியில் வர்ணங்களினுல் விசேஷப் பயன்கள் உண்டாகின்றன வென்று சட நூலினுலும், (Physics) உள நூலினுலும் (Psychology) அறிகி ரோம். வஸ்துக்களை அமைப்பதிலும், அழிப்பதிலும் (in the Composition and decomposition of bodies) பற்பல வர்ணங்களினுல் பற் பல முக்கியமான காரியங்கள் ஆகின் றன என்பதற்கு ரசாயன சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், புஷ்ப சாஸ்தி ரம், (Science of Flowers) காம சாஸ்திரம் (Science of Love) முத லான சாஸ்திரங்களில் அநேக திருஷ் டாந்தங்களைக் காணலாம். சில வர்ணங்களைக் கூட்டுவதனுல் தேகத் திற்கு ஆரோக்கிய முண்டாகின்றது; வேறு சில வர்ணங்களைக் கூட்டுவத னுல் ஆரோக்கியம் கெடுகின்றது. வர்ணங்களைக் முறைப்படி வழங்கு வதும், அவைகளின் தூய்மையைக் காப்பதும் மிகவும் அவசியமான காரியமென்று பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி யுள்ளவரெவரும் ஒப்புக் கொள்வர். இந்துக்கள் வர்ண வித்தை யில் மிகத் தேர்ச்சி பெற்று, வாழ்க் கையில் எந்த வர்ணங்களை, எந்தக் காலத்தில், எந்தக் காரியத்திற்காக, எவர்கள் வழங்க வேண்டு மென்று ஒவ்வொரு விவகாரத்திற்கும் விதித் திருக்கிறுர்கள். வர்ணம் வழங்கும் முறையைக் கவனித்து நடப்பதனுல் அழகும் ஆரோக்கியமும் அமையும்.

ரோமா புரியில் காலை நேரங்களில் சினிமா காட்சிகள் நடைபெறக்கூடாது என்று ஓர் உத்திரவு பிறந்திருக்கிறது,

ஃ ஃ ஃ

ரோமாபுரியில் போப்பரசர் வசிக்கும் அரண்மனையில் நாலாயிரம் அறைகள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

இந்தியாவில் சராசரி ஏழு நிமிஷத் திற்கு ஒருவர் விகிதம் பாம்புக் கடியினுல் இறந்து போயினர்.

ஃ ஃ ஃ

நியூஜிலந்து என்ற நாட்டிலுள்ள ஆண்களின் சராசரி வயது 95; பெண் களின் சராசரி வயது 68.

ஃ ஃ ஃ

அமெரிக்க ஸ்திரீகள் தங்களை அழகு படுத்திக் கொள்வதற்காக மட்டும் 1938ம் வருஷத்தில் 350 லட்சம் பவுன் செலவழித்திருக்கிறுர்கள்,

உலகத்தின் ஜனத்தொகை—சில புள்ளி விவரங்கள்

1937ம் வருஷக் கடைசி வரை உலகத்தின் ஜனத் தொகை இவ்வளவு என்று இப்பொழுது கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கணக்குப்படி, 2,134,000,000. சீனுவைப் பற்றிய புள்ளி விவரங்கள், சீன—ஜப்பானிய யுத்தத்தின் காரணமாகச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை யாதலால், இந்த நாட்டின் ஜனத் தொகையை மட்டும் விட்டுப் விட்டுப் பார்த்தால், 1931ம் வருஷத்து ஜனத் தொகையை விட, ஆறு வருஷத்திற்குப் பிறகு, உலகத்தின் ஜனத் தொகையில் 18,000,000 அதிகமா யிருக்கின்து.

மேற்படி ஜனத் தொகையில் பாதி பேர் ஆசியாவில் வசிக்கிருர்கள். இந்தியாவின் ஜனத்தொகை மட்டும் 375,000,000; சீனுவின் ஜனத் தொகை 450,000,000. ஜப்பானின் ஜனத் தொகை 72,000,000. ஜப்பானுடைய ஆதிக்கத்துக் குட்பட்ட எல்லா நாடுகளின் மொத்த ஜனத் தொகை 100,000,000.

ஐரோப்பாவி லுள்ள சில நாடுகளின் ஜனத் தொகை வருமாறு:—

ருஷ்யா	178,000,000
ஜெர்மனி (ஆஸ்திரியா முதலியன சேர்ந்து)	79,000,000
பிரிட்டன்	47,000,000
இத்தலி	43,000,000
பிரான்ஸ்	42,000,000
போலந்து	35,000,000

அமெரிக்காவின் மொத்த ஜனத் தொகை 130,000,000; தென்னமெரிக்காவி லுள்ள நாடுகளின் ஜனத் தொகை மட்டும் 90,000,000. இதில் பாதி ஜனத் தொகையினர் ப்ரேஜில் நாட்டில் மட்டும் இருக்கின்றனர்.

எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா, கானடா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் ஜனன விகிதமும் மரண விகிதமும் குறைந்தே இருக்கின்றன. ஆஸ்திரேலியாவிலும் நியூ ஜீலந்திலும் ஏற்கனவே மரண விகிதம் குறைந்திருக்கிறது. ஆனால் இந்த மரண விகிதத்தை விட ஜனன விகிதம் அதிகமாகக் குறைந்திருக்கிறது.

1937ம் வருஷக் கடைசியில் ஜனன விகிதம், நாடு வாரியாக எப்படி இருந்த தென்பதைச் சிறிது கவனிப்போம்:—

நாடு	1000க்கு
ஆஸ்திரியா	12 8
ஸ்வீடன்	24.3
பிரான்ஸ்	14.7
இங்கிலாந்து-வேல்ஸ்	14.9
ஸ்விட்ஜர்லாந்து	15 0
பெல்ஜியம்	15 1
லக்ஸம்பர்க்	15.1
நார்வே	15 3

குறைந்தவளவு மரண விகிதக் கணக்கு வருமாறு:—

நாடு	1000க்கு
நெதர்லாண்ட்ஸ்	8.8
நியூஜீலந்து	9.1
ஆஸ்திரேலியா	9.4
கானடா	10.2
நார்வே	10.4
டென்மார்க்	10 8

1937ம் வருஷத்தில் ருமேனியா என்ற ஒரு நாட்டில்தான், மற்றெல்லா நாடுகளையும் விட அதிகமான ஜனன விகிதமும் அதிகமான மரண விகிதமும் இருக்கின்றன. ருமேனியாவின் ஜனன விகிதம் 1000க்கு 30.8 என்றும், மரண விகிதம் 19.3 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞானம், சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ. 4-0-0
பர்மா :	ரூ. 4-8-0
வெளி நாடு :	ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது
பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது
கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது
எது?

அதுதான்

'மணிக்கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர் :— 'மணிக்கொடி' ஆபீஸ்,

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்.



கிராமபோன் ரிகார்டுகள், செட்டுகள், பிலிம் ரிகார்டுகள்
முதலியன எல்லாப் பாஷைகளிலும் எங்களிடத்தில்
கிடைக்கும்.

ஸாகர் மூவிடோனின்

"யூத் லீக்" அல்லது
"வாலிபர் சங்கம்"

டாக்கி கீதங்கள்!

SET NO. 242

N. 18037	
ஸ்ரீமதி கோகிலம்	காதலே போனால்
ஸ்ரீ எஸ். ஆர். ராமாம்ருதம்	ப்ரியையும் வருவாள்
N. 18038	
ஸ்ரீமதி டி. எஸ. ஸுபத்ரா	நாம் அனைவரும்
ஹரிகேசநல்லூர் எம். லக்ஷ்மணன்	காதல் இல்லா
N. 18039	
ஸ்ரீமதி பிரஹதாம்பாள்	காதலே மாதர்கள்
ஸ்ரீ டி. கே. டி. சாரி	ஆசை மனோஹரி
N. 18040	
ஸ்ரீ மாதிரிமங்கலம் நடேசய்யர்	ப்ருந்தாவன கோபிகா லோல
ஸ்ரீ எஸ். ஆர். ராமாம்ருதம்	கடுதாசி ஆடுவதாலே
N. 18041	
பேபி ருக்மிணி & ஸ்ரீமதி பிரஹதாம்பாள்	தனியாய் யமுனே 2 பாகங்கள்

SEN BROTHERS & Co.

சென் பிரதர்ஸ், அண்ட் கோ, **338**, டல்ஹவுஸி தெரு, இரங்கூன்.

கலர்ப் படங்கள்
விற்பனைக்கு

'ஜோதி'யில் வெளியாகும் கலர்ப் படங்களை, தனியாகச் சட்டம் போட்டு மாட்டி வைக்கப் பல அன்பர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் செளகரியத்தை உத்தேசித்து கலர்ப் படம் ஒன்று

ஒரு அணா விகிதம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

10 படங்கள் சேர்த்து வாங்குவோருக்கு

8 அணா.

தபால் சார்ஜ் தனி

மானேஜர்,

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி,
லிமிடெட்.

47, 31வது வீதி, இரங்கூன்,

உங்கள் அதிருஷ்டம்

காந்தி ஜோசியரால்

விவரிக்கப்படுகிறது.

எல்லாம் தலைவிதி என்று ஏமாற வேண்டாம். உங்களது எதிர் கால பலனை அறிந்து அதின்படி நடப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். நம்மால் எழுதப்படும் இப்பலன்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம், தொழில் வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல் லாடிரீ ரேஸ் எதிர் பாராத லாபம் அதிருஷ்ட துரதிருஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம். சிரம பலன் ஏதாவது ஏற்படுமானால் அதற்கான படி பரிகாரமும் இதில் எழுதப்படும்.

சார்ஜ் விவரம்:—	ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத	ரூ 3-0-0
	ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக	ரூ 10-0-0
	ஆரூடம் 5 கேள்விகளுக்குபதில்	ரூ 1-0-0
	வி. பி, தபால் சிலவு	ரூ 0-6-0

குறிப்பு:—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பிரபல தேசிய தமிழ் தினசரி. சுதேசமித்திரன் 30–1–37ல் எழுதுவதாவது:—

"காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை, மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்து விட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹநுமத் உபாஸி, வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி. S. இந்தியா.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பெயர் பெற்றதோ அதிகம்!!!

அது யாது?

மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினுங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்.

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.

நேர்த்தியான பைண்ட்!, அழகான அட்டை!

"ஜோதி"

"ஜோதி"யின் முதல் வருஷத்துப் பன்னிரண்டு இதழ்களும் இரண்டு வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

விலை ரூபா 4-8-0

தபாற் செலவு

பர்மாவுக்கு 1—6—0 இந்தியாவுக்கு 1—8—0
மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ... 2—0—0

தபாற் செலவையும் சேர்த்து மணியார்டரில் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கோன்.

அமிர்தாஞ்ஜனம்.

எல்லாவிதமான
நோய்களுக்கும்
கைகண்ட சஞ்சீவி

தலை வலி
நெஞ்சு வலி
முதுகு வலி
பல் நோய்

கைகா லுளைச்சல்
கை கால் குளிர்ச்சி
வாய்வு நோய்கள்
பக்ஷவாதம்
செவி நோய்
வெட்டுக்காயம்
வயிறு உப்புசம்
இருமல் ஜுரம்

எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்

எங்கும் கிடைக்கும்.

படை மருந்து

எந்தவிதமான படையாயிருந்தாலும் ஆச்சரியப் படத் தக்க விதமாய் குணப்படுத்த வல்லது. மூன்று கலரில் லேபில் உள்ள "சூரியன்" மார்க் மருந்தைப் பார்த்து வாங்கவும்.

பற் பொடி

பல் சம்பந்தமான எல்லாவித வியாதிகளையும் குணப்படுத்திப் பல்லை பளிங்கென மிளிரச் செய்து, வாய் நாற்றத்தையும் பல் வலியையும் போக்கி மகிழச் செய்வது.

சிரங்கு மருந்து

சரீரத்தைக் கெடுக்கும் சொறி சிரங்கு, மேகநீர் சம்பந்தமான ஆறாத புண் முதலிய கொடிய வியாதிகளை குணப்படுத்துவதில் நிகரற்றது.

போலி ஏமாறுதீர்கள்!

குறிப்பு:-- வியாபாரிகள் சிலர் வேறு மருந்துகளைக் கொண்டு அமிர்தாஞ்சனம் என்றுவிற்று வருகிறார்கள். ஆகையால் மோசம் போகாமல் அசல் அமிர்தாஞ்சனம் ஐந்து பாஷை அடங்கிய சீட்டையும் டப்பியையும் பார்த்து வாங்கி லாபம், குணமடையவேண்டுமென எச்சரிக்கை செய்கிறோம்.

அமிர்தாஞ்ஜனம்
லிமிடெட்,

மதராஸ், பாம்பே, கல்கத்தா,

பர்மா பிரதிநிதிகள்:—

கே. எஸ். என். மூர்த்தி,

94, மோகல் வீதி, இரங்கூன்.

எதிர்பாருங்கள்! 26 - 3 - 39 முதல் எதிர்பாருங்கள்!

விக்தர் ஹ்யூகோவின் அற்புதமான நாவல்...........

(ஹிந்துஸ்தானில்)

இளிச்சவாயன் (The Laughing Man)

திடுக்கிடும் சம்பவங்கள், பயனுள்ள நகைச்சுவை பிரபுக்களின் கொடுமைக் காட்சிகள், ஏழைகளின் துயரக்காட்சிகள், கண்ணீர் பீறிக்கொண்டு வரும் சோகரஸம், ஐரோப்பிய நாகரிகப் படங்கள், அற்புதமான காதலர் வாழ்க்கை, சிறந்த இயற்கை வர்ணனைகள் இவை நிறைந்த நாவல்—விக்தர் ஹ்யூகோ நாடுகடத்தப்பெற்று இங்கிலாந்தில் இருந்து, ஆங்கிலேயர் நடையுடைபாவனைகளைப் பார்த்து எழுதிய அனுபவக்காட்சிகள் நிறைந்த நாவல் இதுவொன்றே...............

பிரான்ஸில் 3,000 பக்கங்கள் உள்ள இந்த நாவலை எளிய இனிய தமிழில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

எழுதியிருக்கிறார்.

உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்யுங்கள்.

"ஹிந்துஸ்தானில்" படங்களுடன் வாரா வாரம் வெளிவரும்

ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி,

248, பேயர் வீதி, இரங்கோன்.

வேண்டுகோள்

நமது 'ஜோதி' பத்திரிகைக்கு சந்தா சேர்ப்பதற்குச் சுற்றுப் பிரயாணப் பிரதிநிதியாக, திருவாளர். சுப. சோலையப்பன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நாளது 1-4-39ல் இருந்து பர்மாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்வதால், பர்மா வாழ் தமிழன்பர்கள் அனைவரும் அவருக்கு எல்லா ஆதரவுகளும் கொடுத்து உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜிங் டைரெக்டர்,

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31-வது வீதி, இரங்கூன்.

மற்றொரு வெற்றி!

யுனைடெட் இந்தியா கம்பெனியின் சென்ற சில வருஷ சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், அது வெற்றி மேல் வெற்றி அடைந்து வந்திருப்பதைக் காணலாம். புதிய பிஸினெஸ்கள் எவ்வளவு நடை பெற்றிருக்கின்றன வென்பதற்கு ஓர் உதாரணம். 1938ம் வருஷத்தில் 1,54,00,000 ரூபாய்க்கு புதிய பாலிஸிகள் அஷ்யூர் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் 1937ம் வருஷத்தில் 1,23,00,000 ரூபாய்க்கும், 1936ம் வருஷத்தில் 90,00,000 ரூபாய்க்குமே அஷ்யூர் செய்யப்பட்டிருக்கின்றன.

கம்பெனியானது, செல்வாக்கிலும், ஜீவ சக்தியிலும், மேன்மையிலும் வளர்ச்சி பெற்று வருகிற தென்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமா?

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

ஸ்தாபிதம்: 1906.

தலைமை ஆபீஸ் மதராஸ்.

டிரஸ்டி: சென்னை அரசாங்கத்திற்கு உத்தியோக முறையில் டிரஸ்டி.

இரங்கூன் ஆபீஸ்:—

பிராஞ்சு மானேஜர்,

தாமஸ்கூக் கம்பெனி கட்டிடம்,

பேயர் வீதி, இரங்கூன்.